பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 206 ஆனி 08 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 23 ஜீன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## ஞானசார தேரரின் வாக்குறுதியையடுத்து
# கல்முனை உணவொறுப்பு தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஜீன் 23
அம்பாறை, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துமாறு கோரி, கடந்த திங்கட்கிழமை முதல், மதகுருமார்கள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் முன்னெடுத்த சாகும்வரையிலான உணவொறுப்புப் போராட்டம் நேற்று தற்காலிகமாகக் கைவிடப் பட்டுள்ளது. 36

## அவசரகால சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது

கொழும்பு, ஜீன் 23
நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதகாலம் நீடிக்கப்பட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.
ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்குமாறு பலரும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் அது மேலும் ஒருமாதகாலம் 33

## விளைவு மோசமாக இருக்கும

### கல்முனை விவகாரத்தில் ஞானசாரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜீன் 23
கல்முனைப் பிரதேசசெயலகத்தை வெறும் ஐந்து நாள்களில் என்னால் தரமுயர்த்தித் தரமுடியும். ஆனால் விளைவுகள் மோசமானவையாக இருக்கும் என்று எச்சரித்தார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசா 33

## அரசுக்கு மாமா வேலைசெய்யும் பழக்கத்தை தமிழ் தேசியக்கூட்டமைப்பு நிறுத்தவேண்டும்

### வடக்கு முன்னாள் முதல்வர் விளாசல்

கிளிநொச்சி, ஜீன் 23
கல்முனை உப பிரதேச செயலகத்த தரமுயர்த்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுக்கு மாமா வேலை செய்கின்றனர் என்றும், அவர்கள் அதை நிறுத்த வேண்டும் என்றும் வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கடுமையாகச் சாடி 36

## திருக்கேதீச்சர நுழைவாயிலை அமைப்பதற்கு மீண்டும் தடை

மன்னார், ஜீன் 23
மன்னாரில் திருக்கேதீச்சர நுழைவாயில் அமைப்பதற்கு வழங்கியிருந்த அனுமதியை திரும்பப் பெற்றது மன்னார் பிரதேச சபை. குறித்த நுழைவாயில் அமைப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதி 33

## வவுனியா மின்பிறப்பாக்கி நிலையத்துக்கு அமைச்சர் ரவி நேற்று பயணம்

வவுனியா, ஜீன் 23
வவுனியாவில் அமைந்துள்ள மின்சார சபையின் மின்பிறப்பாக்கி நிலையத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டார் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க.
வட பகுதிக்கான மின்சார விநியோகம் மற்றும் பாவனையாளர்க 36



## தெரிவுக்குழுவின் விசாரணைக்காக தலைமை அமைச்சருக்கு அழைப்பு!

கொழும்பு, ஜீன் 23
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்க முன்னிலையாகுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை பாதுகாப்பு இரா 33

## காணாமல்போன முதியவர் நேற்று சடலமாக மீட்பு

வவுனியா, ஜீன் 23
வவுனியா பண்டாரிக்குளத்தில் வசித்து வந்த 74 வயதுடைய முதியவர் கடந்த மாதம் 8ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார். அவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
இளஞ்சிங்கம் தேவராசா என்ற முதியவரே அவ்வாறு சடலமாக மீட்கப் பட்டார். அவரின் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## திருகோணமலையில் நேற்று மைத்திரி வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜீன் 23
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வருகையைக் கண்டித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. 36

### ஆசிரியரால் மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல்

## அதிபரை இடைநிறுத்துமாறு ஆளுநர் ராகவன் உத்தரவு!

பருத்தித்துறை, ஜீன் 23
பருத்தித்துறையில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர் அதே பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்ததை அடுத்து, அந்தப் பாடசாலையின் அதிபரை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன். 36

## வவுனியாவுக்குச் சென்ற மகன்களைக் காணவில்லையென தந்தை பொலிஸில் முறைப்பாடு!

வவுனியா, ஜீன் 23
நெடுங்கேணியிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற தனது மகன்கள் இருவரைக் காணவில்லை என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் தந்தை முறைப் 33



## யாழ். நகரில்
# வீதி அபகரிப்புக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருந்த பொது வீதி அபகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், குறித்த வீதியை பொதுமக்களின் பாவனைக்காக விடுமாறும் கோரியும் நேற்று சனிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள கடை தொகுதிகளின் மத்தியில் குறித்த வீதி காணப்பட்டது. அந்த வீதிக்கு அருகில் உள்ள கடை உரிமையாளர் அதை சட்டத்துக்கு புறம்பான முறையில் அபகரித்து அதனைத் தனது கடையுடன் இணைத்துள்ளார். இதனால் அவ்வீதியின் போக்குவரத்து முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டது. குறித்த விடயம் யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் அதுதொடர்பில் எந்தவிதமான சட்ட நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் அபகரிக்கப்பட்ட குறித்த வீதி மீண்டும் மக்களுடைய பொது பாவனைக்காக திறந்து விட வேண்டும் என்று கோரியும், அந்த வீதியை அபகரித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே இன்று போராட்டம் நடத்தப்பட்டது. என்றனர்.

'ஏழைகளுக்கு ஒரு நீதி.. செல்வந்தர்களுக்கு ஒரு நீதியா..?', 'வரைபடங்களிலிருந்து காணாமல்போகும் வீதிகள் எங்கே மாநகரசபையே?', 'முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பில் வீதிகள் கூட தப்பவில்லை..' என எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டக் காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

(ஐ ரி1,37)



## குண்டுவெடிப்பில் இருந்து மீண்ட மாணவனுக்கு உற்சாக வரவேற்பு

உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் இருந்து உயிர் தப்பிய மாணவன் மீண்டும் பள்ளிக்கு வந்துள்ளான். அங்கு அந்த மாணவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 253 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து தொடர்ந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். உலகையே உலுக்கிய இந்த பயங்கர சம்பவத்தில் இருந்து இலங்கை மெல்ல மெல்ல மீண்டு வருகிறது.

இந்த சம்பவம் நடந்து 2 மாதங்கள் கடந்த நிலையில், இதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்ற பலரும் தேறி வருகின்றனர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 6 இல் கல்வி கற்கும் ஷெனான் என்ற மாணவன் சிகிச்சைக்கு பின்னர் பள்ளிக்கு மீண்டும் திரும்பியுள்ளான்.

அங்கு அவனுக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் இணைந்து உற்சாக வரவேற்பு அளித்துள்ளனர். மாணவர்கள் பூங்கொத்து, பரிசுகள் என கொடுத்து இன்முகத்துடன் வரவேற்றனர்.

மேலும் கேக் வெட்டி கொண்டாடினர். இந்நிகழ்வு அனைவரையும் நெகிழச் செய்துள்ளது. இதன் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

(ஐ)

## புதுக்குடியிருப்பில் வாள்வெட்டு இளைஞர்கள் இருவர் காயம்

புதுக்குடியிருப்பு, ஜுன் 23

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் வாள்வெட்டாக மாறியுள்ளது. வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த இரண்டு இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்டு இளைஞர்களின் உறவினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம)

## பதில் அமைச்சராக வடிவேல் சுரேஸ்

கொழும்பு, ஜுன் 23

பசறை தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலரும் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான வடிவேல் சுரேஸ் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பதில் அமைச்சராக அரச தலைவரால் நியமிக்கப்பட்டார். பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாக்க உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பும் 29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பதில் அமைச்சராக வடிவேல் சுரேஸ் நியமிக்கப்பட்டார்.

(ம)

## வீதியோரத்தில் உணவுப் பொருளை பறித்த சாரதிக்கு கடும் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஜுன் 23

வாகனத்திலிருந்து உணவுப் பொருள்களை வீதியோரத்தில் பறித்த சாரதியை பொது சுகாதாரப் பரிசோதகர் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், குறித்த உணவுப்பொருள்களை கால்நடை தீவனமாகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

வாகனங்களில் ஏற்றிவரப்படும் உணவுப் பொருள்களுடன் உணவுப் பண்டமல்லாத பொருள்கள் ஏற்றிவருவதும் உணவுப் பொருள்களை பாதுகாப்பற்ற முறையில் தரையில் வைப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட உணவுப்பொருள்களை (சோழன் தானியம் ) பாதுகாப்பின்றி தரையில் வைக்கப்பட்டது. இதன்போது எழுதுமட்டுவாழ் பிரிவு பொது சுகாதார பரிசோதகரால் குறித்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டு சாரதியை கடுமையாக எச்சரிக்கை செய்தார்.

அத்துடன் தரையில் இறக்கி வைக்கப்பட்டிருந்த அனைத்த உணவுப் பொருள்களையும் மனித உணவுக்குப் பயன்படுத்தாமல் கால்நடை உணவுக்கு மட்டும் பயன்படுத்தவேண்டுமென எச்சரிக்கை செய்தார்.

மனித பாவனைக்கு கொண்டு வரப்படும் உணவுப்பொருள்கள் எக்காரணம் கொண்டும் பாதுகாப்பற்ற முறையில் தரையில் வைக்கக்கூடாது. கால்நடைகளின் கழிவுகள் மற்றும் பல்வேறு செயற்பாடுகளால் அவை சுத்தமின்றிக் காணப்படுகிறது. இந்நிலையில் பாதுகாப்பற்ற தரையில் வைக்கும் உணவுப் பொருள்களால் மனிதர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதைக் கருத்தில் கொண்டு வாகனங்களில் கொண்டு வரப்படும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை தரையில் விரிப்புகளை விரித்தும் அல்லது சீமெந்து தரையிலும் வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இனிவரும் காலங்களில் இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் சாலையோரங்களில் வைக்கப்படும் பொதிசெய்யப்பட்ட பொருள்கள் சுகாதாரப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவற்றினைக் கொண்டு வருவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எழுதுமட்டுவாழ் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

(ஐ-9)

# வவுனியாவில் முடியுமானால் கல்முனையில் ஏன் முடியாது?
## வடக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுன் 23

வடக்கு மாகாணத்தின் நுழைவாயிலில் உள்ள வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலர் பிரிவு என்பது நிலத் தொடர்புகள் அற்ற 3 துண்டுகளை உடைய ஓர் பிரதேச செயலர் பிரிவாகவே உள்ள நிலையில் அருகே உள்ள கல்முனையை மட்டும் ஏன் தனி பிரதேச செயலர் பிரிவாகப் பிரிக்க முடியாது?

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

வடக்குமாகாணத்தின்நுழைவாயிலில் உள்ள வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலர் பிரிவு என்பது நிலத் தொடர்புகள் அற்ற 3 துண்டுகளை உடைய ஓர் பிரதேச செயலர் பிரிவாகவே உள்ள நிலையில் அருகே உள்ள கல்முனை வடக்கை மட்டும் ஏன் தனியாக பிரிக்க முடியாது. நிச்சயமாக பிரிக்க கூடியதும் பிரிக்க வேண்டியதுமான ஓர் பிரதேச செயலகம்.

இதேநேரம் வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் பிரிவு என ஓர் பிரிவு உள்ளபோதும் அதற்கான பிரதேச செயலக அலுவலகம்கூட அதன் எல்லைப் பரப்புக்குள் கிடையாது. மாறாக வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குள்ளேயே இயங்குகின்றது. கல்முனையில் புவியியல் அக்கறைதான் முக்கியமாக கூறப்படுவது உண்மையானால் இந்த வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலர் பிரிவை இனத்தின் அடிப்படையில் பிரிக்கும்போது இவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தமை சுயநலத்துக்காக என்பதனையும் பகிரங்கமாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்- என்றார்.

(எ-105)

## கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி வாசிக்கு 50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, ஜுன் 23

போயா தினத்தன்று 350 மில்லிலீற்றர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த சாவகச்சேரி வாசிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பொசன் போயா தினத்தன்று சாவகச்சேரியில் வைத்து கசிப்புடன் ஒருவரைக் கைது செய்திருந்தனர். கசிப்பு உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுடன் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(ஐ-9,159)


புதிய
Pears
Unilever
சரும பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படும் சிறந்த மூலப்பொருட்களுள் ஒன்றாக ஒலிவ் எண்ணெய் திகழ்கிறது என்பது நாம் அறிந்ததே. குழந்தைகளின் சருமத்திற்கும் அதீத நன்மைகளை ஒலிவ் எண்ணெய் பெற்றுத்தருகின்றது.
பெயார்ஸ் சோப்பில் ஒலிவ் எண்ணெய் அடங்கியிருப்பதால் உங்கள் குழந்தையின் சருமத்திற்கு சிறந்த மென்மையையும் சரும ஆரோக்கியத்தையும் பெற்றுத்தருகின்றது.
Pears
ரூ. 70/- இலிருந்து
கூச்சி கூச்சி சொப்ட் கூச்சி கூச்சி பெயார்ஸ்
1323
அழையுங்கள்

# CANADA Tour WITH FAMILY

கனடாவைச் சுற்றிப்பார்க்க சிறந்த தருணம்

- குடும்பத்தினருடன் கனடாவின் பிரபல்யமான இடங்களில் சுற்றுலா
- 30 பேர் கொண்ட குழு
- ஏழு நாட்கள் தங்கியிருக்கலாம்

முழுத்தொகையில் 25% கட்டணம் அறவிடப்படும்

Fly on Sep. 2019 Apply before 30th June

முதல் விண்ணப்பிக்கும் 15 பேருக்கு 10% கழிவு

போவதற்கான VISA / Document ஏற்பாடுகள் அனைத்தும் செய்துதரப்படும்

NW SKYLINE INTERNATIONAL COLLEGE (PVT) LTD ☎ 077 33 47 332
22 Srimahabodhi Road Dehiwala

## காணி விற்பனை

புத்தூர் கிழக்கு, வாதரவத்தையில் காணிகள் மற்றும் வயல் காணிகள் என்பன விற்பனைக்குண்டு.

077 677 8359/077 416 7634

## வீட்டு பணிப்பெண் தேவை

திருநெல்வேலியிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்வதற்கு 20-50 வயதிற்கு உட்பட்ட பெண் தேவை. சம்பளம் 21000/= வீட்டில் தங்கியிருந்து வேலை செய்தல்

தொ.பே:077 604 8865

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்ரேசன் வீதிக்கு அருகில் 4 பரப்புக்காணி உடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

Viber - 0044 796 803 8543
021 224 2046

## விற்பனைக்குண்டு

யாழ் மாவட்டம் உடுவில் பிரதேச சபைக்குட்பட்ட இடத்தில் நல்ல நிலையில் இயங்கும் அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு.

077 263 6644

## தேவை

யாழ் நகர் எல்லைக்குள் வீடு வந்து கற்பிக்கக் கூடிய A/L Physics, Chemistry (English Medium) ஆசிரியர் தேவை.

077 782 4850

## விற்பனைக்கு

நல்ல இன தென்னங்கன்று, செவிளநீர் தென்னங்கன்று (மலேசியன்) சவுக்கு, தேக்கு, பாலை, முதிரை, மலை வேம்பு, நாவல், கொண்டல், சித்திரவேம்பு, வேம்பு, நாகமரம், இலுப்பை, கொன்றை, வாகை, வில்வம், மருது, புங்கை, கயூ, சமண்டலை, அசோகாகன்று, கருங்காலி, கத்தாழை, மாங்கன்று, தேசி, தோடை, பலா, கொய்யா, கமுகு, இந்தியன்நெல்லி, ஊர்நெல்லி, அரைநெல்லி, பெரியவிலும்பி, சிறிய விலும்பி, ஒட்டு பலா, விதை பலா, பான் புரூட், லாவுல், சீதாபழம், கறுவா, கராம்பு, ஈரப்பலா, அன்னமுன்னா, பட்டபுரூட், கோப்பி, முருங்கை, றெட்லேடி, பப்பாகன்று, குறோட்டன் வகை, செவ்வரத்தை வகை, மாங்குஸ்தான், றம்புட்டான், வெற்றிலை, மிளகு, மேலும் பல இன பூங்கன்றுகளும், பூஞ்சாடிகளும் விற்பனைக்கு (தொகையாகவும் பெறலாம்)

நியூ லங்கா பாம்
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு.
(கனோமா மகா வித்தியாலயம் அருகில்)
077 612 9343

கிளை - நியூ லங்கா பாம்
கே.கே.எஸ். வீதி,
கோப்பாய்.

## சேவை

நீங்கள் உங்கள் பிள்ளைகளையோ உறவினர்களையோ பார்ப்பதற்கு வெளிநாடு செல்ல இருப்பவர்களா?

அப்படியாயின் உங்கள் விசா விண்ணப்பப்படிவங்களை எம்மிடம் நிரப்பி கொடுக்கவேண்டும். உங்கள் விசா படிவங்களை ஒன் லைனில் (Online) நிரப்புவதற்கு எம்மிடம் வாருங்கள் பயணக்காப்புறுதியும் (Travel Health Insurance) செய்து தரப்படும்.

அத்தோடு வெளிநாட்டு பாஷைகளாகிய பிரெஞ், ஜேர்மன், இத்தாலியன், நெதர்லாண்ட், நோர்வீஜியன், டனிஷ், சுவிடிஷ், ஸ்பனிஷ், போர்சுக்கீஸ் ஆகியன மொழிபெயர்த்து தரப்படும்.

தொடர்பு:
**லீனஸ் செக்கிறேறியல் சேவிசஸ்**
இல.15, 3 ஆவது மாடி,
கொழும்பு கோல்ட் சென்ரர், கொழும்பு - 11
Tel: 011 234 4482, 077 798 6134, 077 225 1166
E-mail: linus1937@yahoo.com

# Jaffna College, Vaddukoddai Vacancies

Applications are invited from suitable candidates for the following positions at Jaffna College:

**1. Teacher of English Language and English Literature (Grades 6–13)**

Ideal candidates should possess a special degree in English **or** a general degree with English as a subject **or** a relevant qualification from a recognized higher educational institution.

**2. Teacher of Mathematics (Grades 6-11) and Combined Mathematics (GCE A/L):**

Ideal candidates should possess a BSc special degree in Mathematics **or** a BSc general degree with Applied Mathematics **and** Pure Mathematics as core subjects **and** the ability to teach the subjects in both Tamil and English.

Work experience will be an added advantage.

Salary negotiable for outstanding candidates. College accommodation may be provided upon request if the appointee does not have a place of residence in Jaffna.

Please mail your CV with the names and contact details of two non-related referees, (unofficial) academic transcripts and/or copies of relevant academic certificates so as to reach the Manager of Jaffna College **on or before the 15th of July 2019.**

Mailing Address: **Manger, Jaffna College, Vaddukoddai, Jaffna**

**Manager**
**Jaffna College, Vaddukoddai**
**23 June 2019**



"ஆண்டு விழா சலுகை !
அனைத்து Secrets தயாரிப்புகளுக்கும் 15% " வரை விலைக்கழிவு 20 முதல் 30 ஜுன் வரை

வெளியரங்கமான உங்கள் ஆடைகளின் அழகிய தோற்றமானது, உங்கள் உள் ஆடைகளில் அடங்கியுள்ளது. நாகரிகமானதும் கவர்ச்சிகரமானதும் வசதியானதுமான வாழ்க்கை முறைக்கு ஏற்ற உள்ஆடைகளின் தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்


இக் கூப்பனைக் கொண்டு வருபவர்களுக்கு மட்டும்.

www.secretslk.com
Face Book : Secrets
Secrets
077 951 0436
021 2216 488

Shop No: 11, 1st Floor, CARGILLS SQUARE, 530,Hospital Road, Jaffna.
அலுவலக நேரம் : திங்கள் முதல் சனி வரை மு.ப. 9.30 - பி.ப. 7.00 வரை

# DAY OUTING PACKAGES

திருநெல்வேலியிலுள்ள எமது ஹோட்டலிலும் (The Thinnai), சுன்னாகத்திலுள்ள எமது சேதனப் பண்ணையிலும் (Thinnai Organic) உங்களது நாளைக் குதூகலமாகக் கழிப்பதற்கோர் சந்தர்ப்பம்.



### பண்ணையில் ஓர் நாள்

காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை

- வரவேற்புப் பானம்
- ஆட்டிறைச்சியுடன் மதிய உணவு
- மாலைநேரச் சிற்றுண்டியுடன் தேநீர்
- பண்ணையைச் சுற்றிப்பார்த்தல்
- விலங்குகளிற்கு உணவளித்தல்
- விளையாட்டு வசதிகள்

- ஒருவரிற்கு - 1200/=
- சிறுவர்களிற்கு (5 - 12 வயது) - 600/=

குடும்பத்துடன் ஓர் நாள்

- வரவேற்புப் பானம்
- தூண்டிலில் மீன் பிடித்தல்
- மீன் / கோழி இறைச்சியுடன் (1kg) மதிய உணவு
- மாலைநேரச் சிற்றுண்டியுடன் தேநீர்

மூவரிற்கு மொத்தமாக 2200/=

மாலை விருந்து

- 1kg மீன் / கோழியிறைச்சி
- 1kg கணவாய் / இறால்
- பிறைட் றைஸ் / மொங்கோலியன் றைஸ் அல்லது நூடில்ஸ்
- பண்ணையைச் சுற்றிப்பார்த்தல்
- விலங்குகளிற்கு உணவளித்தல்

நால்வரிற்கு மொத்தமாக 5000/=

077 924 1413
Thinnai Organic
9/10, புத்தூர் வீதி, சுன்னாகம்

### திண்ணையில் ஓர் நாள்

தெரிவு 1: காலை 9 - மாலை 5
தெரிவு 2: மதியம் 3 - இரவு 10

- ஒருவரிற்கு - 1500/=
- சிறுவர்களிற்கு (5 - 12 வயது) - 900/=

- வரவேற்புப் பானம்
- நீச்சற் தடாகத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு
- 'அமுதம்' உணவகத்தில் மதிய உணவு / இரவுணவு
- மாலைநேரச் சிற்றுண்டியுடன் தேநீர்
- உள்ளக விளையாட்டுகள்

மேலும் பல சலுகைகளுண்டு

இச்சலுகை ஒக்டோபர் 31 வரை மட்டுமே

077 924 3491
The Thinnai
86, பலாலி வீதி, திருநெல்வேலி

www.thethinnai.com

www.pabcbank.com
(011) 4 667 222
pabcbank
Pan Asia Bank
PanAsiaBank

சேமிப்பிற்கு



7.5%
வ. தே. வீ. 7.78%
நெருப்பு வட்டி

CHAMPION SAVER
சேமிப்புக் கணக்கு

கணக்கில் இருந்து எத்தனை தடவைகள் பணத்தை மீளப்பெற்றாலும் முழு வட்டியும் குறையாமல் உங்கள் கரங்களுக்கு.

(011) 4 667 222

*நிபந்தனைகள் உண்டு

பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி

# வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் திங்கள் முதல் உள்ளூர் பேருந்துச் சேவை

## ஆளுநரின் கருத்துக் கணிப்பை அடுத்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரனின் பணிப்புரைக்கு அமைவாக பூட்டப்பட்ட வவுனியா பழைய பேருந்து நிலையம் நாளை திங்கள் கிழமை முதல் செயற்படவுள்ளது.

பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர் பேருந்துகள் வந்து செல்வது தொடர்பில்வடக்குமாகாணஆளுநர் சுரேன்ராகவன்மேற்கொண்டகருத்துக்கணிப்பின் அடிப்படையில் அந்தப் பேருந்து நிலையம் திறக்கப்படவுள்ளது. அதனால்மீண்டும்பழைய பேருந்து நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் என்று மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தஇருவருடங்களுக்குமுன்னர் கண்டி வீதியில் 195 கோடி ரூபா நிதியில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தின் செயற்பாட்டை ஆரம்பித்தமுன்னாள்முதலமைச்சர்பழைய பேருந்து நிலையத்தின் செயற்பாட்டை நிறுத்தியிருந்தார். பழைய பேருந்து நிலையத்தைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்கள் பேருந்துச் சேவை இன்மையால் இழுத்து மூட வேண்டியநிலைஏற்பட்டுள்ளதுடன் வவுனியாவின் மையச் செயற்பாடுகள் பெரிதும் குறைவடைந்து வர்த்தகர்களைப் பாதிப்படையச் செய்தது. இதையடுத்துபல்வேறுசந்திப்புக்கள் பேச்சுக்கள் நடத்தப்பட்டும் தனியார் இ.போ.சபேருந்துகள்தமது சேவைகளை மேற்கொள்வதில் பல்வேறு இழுபறி நிலை காணப்பட்டிருந்தது. பயணிகள், பாடசாலை மாணவர்கள், வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பல சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கியசம்பவங்களும்நடைபெற்றிருந்தது. முன்னாள் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தார்.

வவுனியா மாவட்ட வர்த்தகத்தில் பெரும்தாக்கத்தைஏற்படுத்தியிருந்த இந்தச்செயற்பாட்டிற்குமுடிவுகட்டுவதற்குவடமாகாணஆளுநர்கல்வியாளர்களைஉள்ளடக்கியகுழுஒன்றை அமைத்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கக் கூறியிருந்தார். ஆறுமாத காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அதில் 97வீதமானோர் பழைய பேருந்தின் மீள் செயற்பாட்டினை ஆதரித்ததால்அந்தப்பேருந்துநிலையத்தில்உள்ளூர்ப்பேருந்துச்சேவைகளை நடத்துவதற்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்தபுதன்கிழமைஆளுநர்சுரேன் ராகவன் வவுனியாவுக்கு வந்தார். மாலை ஆளுநரின் நிகழ்ச்சித் திட்ட வேலைகளை நிறைவு செய்த பின்னர் கண்டி வீதியிலுள்ள பௌத்த விகாரையில்வர்த்தகப்பிரமுகர்கள், மாவட்டச் செயலக பிரதேச செயலக அதிகாரிகள், தனியார், இ.போ.ச சாலை நிர்வாகிகள், சிவில் சமூகத்தினர், நகர சபை பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாடினர். பேருந்துநிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்தீர்மானத்தைஅங்குஆளுநர் தெரிவித்தார்.

புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை மேற்கொள்ளும் உள்ளூர் பேருந்துச்சேவைகள் அனைத்தும் பழைய பேருந்து நிலையத்தில் தரித்து நின்று செல்வதற்கும் உள்ளூர்சேவைமேற்கொள்ளும்பேருந்துகள் அனைத்தும் வந்து செல்வதற்கும் இணக்கம் காணப்பட்டுபழைய பேருந்துநிலையச்செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கும் அவர் பணித்தார்.

60வருடம்பழமைவாய்ந்தபழைய பேருந்து செயற்பாட்டை மீள் மேற்கொள்ளும்போது அதனைச்சூழவுள்ள 250க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், எனபலவர்த்தகமையங்களுக்கு நன்மைகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. பழைய பேருந்து நிலையம் மீளச் செயற்படும்போது பயணிகளின் நன்மைகருதியும்வர்த்தகநிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களின் நன்மை கருதியும் கடந்த இரண்டு வருடங்களாகபுதிதாகபலமில்லியன் ரூபாசெலவில்அமைக்கப்பட்டுபூட்டிவைக்கப்பட்டுள்ள பொது மலசல கூடத்தையும்திறந்துமக்களின்பயன்பாட்டுக்கு அனுமதிக்கும்போது நகர சபைக்கு பெருமளவு நிதி கிடைப்பதுடன் பொதுமக்களுக்கும் தன்னிறைவான சேவைகள் கிடைக்கும் என மக்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

(எ-21)

## தொடருந்து விபத்தில் இறந்த பெண்ணின் உடல் கையளிப்பு

சாவகச்சேரி, ஜுன் 23

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளிப் பகுதியில் தொடருந்தால் மோதுண்டு சாவடைந்தகுடும்பப் பெண்ணின்சடலம்விசாரணைகள்மற்றும்உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒட்டுவெளிவயல்வெளியில்உள்ள வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் பகல் ஆரம்பித்து நேற்று பகல் வழிவெட்டலுடன் நிறைவு பெறும்.

கோவில் நிகழ்வுகளில் கலந்து கொண்ட இப் பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் மகேஸ்வரி (வயது -50)என்னும்நான்குபிள்ளைகளின் தாயார் தண்டவாளத்துக்கு அப்பால் உள்ள தனது வீட்டில் பொருள்கள் எடுத்துவரச் சென்றுள்ளார்.

கோவிலில் ஒலிபெருக்கி இசைத் தவண்ணம் இருந்ததால் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட வேளையில் தொடருந்து வரும் ஒலிபெண்ணுக்குகேட்கவில்லை.

இந்நிலையில் தொடருந்தினால் மோதுண்டு சிதறிய நிலையில் சடலம் கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனைசவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது

பெண்ணின் சாவு தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றபதில்நீதிவான்செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையினைப்பார்வையிட்ட பதில் நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறுபொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மருத்துவமனைசவச்சாலையில் சடலத்தைப் பார்வையிட்ட திடீர் சாவுவிசாரணை அதிகாரி விசாரணைகளின் பின்னர் சடலத்தை மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர்சடலத்தைஉறவினரிடம் ஒப்படைக்குமாறுபொலிஸாரைப் பணித்தார். உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஜ-9,159)

## மாணவர்கள் 74 பேருக்கு புலமைப்பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்ப்பாணமாவட்டத்தில்புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த 74 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச்செயலர்நா. வேதநாயகன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வழங்கி வைத்தார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் கீழ் மாணவர்களுக்கான பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.



யாழ்ப்பாணமாவட்டத்தில்உள்ளபாடசாலைகளில் புலமைப்பரிசில்பரீட்சையில்சித்தியடைந்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு 5ஆயிரம்ரூபா காசோலை உட்பட பாடசாலை உபகரணங்கள், மற்றும்சான்றிதழ்கள்என்பனவழங்கிவைக்கப்பட்டன.

(ஜ-106)

## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஜுன் 23

சாவகச்சேரிமகளிர்கல்லூரியின் 2017-2018 ஆண்டுகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுபாடசாலைமண்டபத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணிக்குநடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் மாந்தை கிழக்கு பிரதேச செயலருமானசெல்விரஞ்சனா நவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாகபிரான்ஸ் இலங்கை தமிழ் பழைய மாணவர் ஒன்றியச்செயலர் எந்திரி த.தயாபரன், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-9)



## ஈருருளிகள் கையளிப்பு

வவுனியா, ஜுன் 23

வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு அஞ்சலா உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக புலம்பெயர்ந்த உறவுகளால் ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பறநட்டாங்கல் பகுதியைச் சேர்ந்த தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவிக்கு லண்டனைச் சேர்ந்த அருள்தாசன் இராசதுரையும், ஓமந்தை மடத்து விளாங்குளம் பகுதியில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவனுக்கு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுதாகரன் சயந்த் ஆகியோரும் இந்த உதவியை வழங்கியுள்ளனர். (ஜ-222)

## விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜுன் 23

தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சம்மேளனத் தலைவர் தே.வஜிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்றஉறுப்பினர்மாவை சேனாதிராசா, சிறப்புவிருந்தினர்களாகதெல்லிப்பழை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கே.சங்கீதா, மாவட்டஇளைஞர்சேவைஅதிகாரிபி.கிருபைராசா ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஜ-159)

## மாணவர்களின் மாதிரிச் சந்தைகள்



கொடிகாமம், ஜுன் 23

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரிச் சந்தை பாடசாலையில்கடந்தவியாழக்கிழமைஅதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

♦ ♦ ♦



கொடிகாமம், ஜுன் 23

கரம்பைக்குறிச்சிஅ.த.க.பாடசாலைமாணவர்களின் மாதிரி சந்தை வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் அதிபர் க. இளங்கோவன் தலைமையில்பாடசாலைமண்டபத்தில்நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிகல்விவலயஉதவிக்கல்விபணிப்பாளர் ரி.ஜெயதேவன், சிறப்புவிருந்தினராகபொதுச் சுகாதாரபரிசோதகர்இ.நிஜன்ஆசிரியர்கள்மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-159)

# பிரித் ஓதும் நிகழ்வின்போது வெண்ணிற ஆடை கட்டாயம்

## வவுனியா தமிழ் பிரதேச செயலகம் அரச அலுவலர்களுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வவுனியா பிரதேச செயலகத்தில் பிரித் ஓதும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அனைத்து அலுவலர்களையும் வெண்ணிற ஆடையுடன் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் அனைத்துகிளைத்தலைவர்களுக்கும் பிரதேச செயலரால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் அவர் இதைத் தெரிவித்துள்ளார். நாளை திங்கட்கிழமையன்று மாலை 6 மணியளவில் பிரித் ஓதும் நிகழ்வு இடம்பெறவுள்ளதால் அனைத்து அலுவலர்களையும் தவறாது அந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்குபற்றும் பணியாளர்கள் வெண்ணிற ஆடை அணிந்து வருமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேசசெயலகமானது தமிழ் மக்களுக்குரிய பிரதேசசெயலகமாகக் காணப்படும் நிலையில் தமிழ் அலுவலர்களுக்குப் பிரித் ஓதும் நிகழ்வு ஏன்? ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனப் பலரும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் அலுவலர்களைப் பௌத்த மத அனுஸ்டானத்தில் பங்குபற்ற அழைத்தது மாத்திரமின்றி பௌத்தர்கள் அணியும் உடையையும் அணியச்சொல்வது ஏற்புடையதல்ல எனவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதேவேளை, அண்மைக்காலமாக வவுனியாவில் பல இடங்களிலும் சிங்கள மயமாக்கல் மற்றும் பௌத்த சின்னங்களைப் பிரதிஸ்டை செய்யும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-21)

## தண்ணீர்ப் போத்தல்கள் விற்பனையாளருக்கு சிறைத்தண்டனையுடன் தண்டம் விதிப்பு

வலி.தென்மேற்கு,ஜூன் 23

குடிதண்ணீர்ப் போத்தல்களை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் திறந்த வாகனத்தில் ஏற்றிச் சென்ற விற்பனையாளருக்கு நீதிவான் 2வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத்தண்டனையும் 5ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அ.தினேஸ்குமார் கடமை நிமித்தம் யாழ்ப்பாணம் முதன்மை வீதியால் சென்று கொண்டிருக்கும்போது திறந்த வாகனத்தில் குடிதண்ணீர் போத்தல்கள் ஏற்றிச் செல்வதை அவதானித்துள்ளார்.

இதையடுத்து வாகனத்தை மறித்து விசாரணை செய்த பரிசோதகர் 19லீற்றர் கொண்ட 13 தண்ணீர்ப் போத்தல்களைக் கைப்பற்றி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை ஒப்படைத்துள்ளார்.

இதைத்தொடர்ந்து விற்பனையாளருக்கு எதிராக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைப் பின்பற்றாமல் தண்ணீர்ப் போத்தல்களை தன்மை கெடும் ஆபத்தான நிலையில் சூரிய ஒளி படத்தக்கவாறு திறந்த வாகனத்தில் ஏற்றிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு உடனடியாக கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விற்பனையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து யாழ்ப்பாண நீதிமன்ற மேலதிக நீதிவான் இவருக்கு 2வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாத கால சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்ததுடன் தண்ணீர்ப் போத்தல்களை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ஐ-115)

## இரு மூடுந்துகள் மோதி விபத்து

சாவகச்சேரி, ஜூன் 23

இரு மூடுந்துகள் மோதிக்கொண்டதில் சாரதி ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று கொடிகாமம் ஏ-9 முதன்மை வீதியில் சிக்னல் மரத்தடியில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் சென்றுகொண்டிருந்த மூடுந்து வாகனம் மறுகரைக்குச் செல்வதற்கு முனைந்தபோது பின்தொடர்ந்து வந்த மூடுந்து (ஹைஏஸ்) மோதியதால் விபத்து ஏற்பட்டது என விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)




## திறன்வகுப்பறை திறப்பு

முல்லைத்தீவு,ஜூன் 23

முல்லைத்தீவு, சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் திறன்வகுப்பறை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

புலம்பெயர் பழைய மாணவர்கள் சிலரது முயற்சியில் உருவாக்கப்பட்ட இந்த வகுப்பறை பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் மறைந்த செல்லையா கனகையா நினைவாக அமைக்கப்பட்டது.

வகுப்பறையைப் பாடசாலையின் பழைய மாணவரும் எந்திரியுமான கலாநிதி நல்லதம்பி சிவசிதம்பரம் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான ச.நாகரத்தினம், பொ. பேரின்பநாயகம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். (ஐ-222)

## புதிய உறுப்பினர்களின் பெயர் அரசிதழில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் பதவி வகித்த இரு உறுப்பினர்கள் பதவி விலகிய நிலையில் புதிய உறுப்பினர்களின் பெயர் விவரம் அரச இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அங்கம் வகித்த இரு பெண் உறுப்பினர்களான அஜந்தா தனபாலசிங்கம் மற்றும் சுகந்தினி சிறிகரன் ஆகியோர் கடந்த மே மாதம் முதல் பதவி விலகியிருந்தனர். இவ்வாறு பதவி விலகியவர்களுக்காகவே தற்போது இரு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அஜந்தா தனபாலசிங்கத்துக்குப் பதிலாக டெய்சி பிலிப் ஜெயரஞ்சனின் பெயரும் சுகந்தினி சிறிகரனுக்கு பதிலாக லவகீசன் தர்ஷிபா ஆகியோரின் பெயர்கள் கட்சியால் பரிந்துரைக்கப்பட்ட தற்கமைய இருவரின் பெயரும் நேற்றைய தினம் அரச இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இரு உறுப்பினர்களும் தமது சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு அடுத்த அமர்வு முதல் உறுப்பினர்களாகச் சபையில் அங்கம் வகிப்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-105)

# கல்முனைப் போராட்டத்துக்கு ஆதரவாக வல்வெட்டித்துறையிலும் உணவு ஒறுப்பு

## நகரசபை உறுப்பினர்கள் மேற்கொண்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

கல்முனையில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இடத்தில் உள்ள கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி அங்கு இடம்பெறும் பட்டினிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்களும் நேற்று ஒருநாள் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

வட்வெட்டித்துறைச் சந்தியில் நேற்றுக் காலை 8 மணிமுதல் உணவு ஒறுப்பு ஆரம்பமானது. நகரபிதா கருநானந்தமூர்த்தி உள்ளிட்ட நகரசபை உறுப்பினர்கள் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கல்முனையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் இடத்தில் பிரதேச செயலகமும், தமிழர்கள் செறிந்து வாழும் இடத்தில் கல்முனை உப பிரதேச செயலகமும் அமைக்கப்பட்டுள்ளன. கல்முனையில் முதன்மை பிரதேச செயலகமாக முஸ்லிம்கள் செறிந்துவாழும் இடத்தில் உள்ள கல்முனை பிரதேச செயலகமே உள்ளது. அங்கேயே காணி, நீதி விவகாரங்கள் கையாளப்படுகின்றது. கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாகவே உள்ளது. அதிக தமிழர்கள் இருந்தபோதும், அந்தப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை, காணி, நிதி கையாளுகைகள் தமிழ் பிர



தேச செயலகத்தில் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் உணர்வாளர் ஒன்றியம் கடந்த ஏப்ரல் மாதத்தில் துண்டுப் பிரசுரத்தை ஒட்டி மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. அதைத் தொடர்ந்து உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி கல்முனையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் போராட்டத்துக்குத் தடையை ஏற்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கல்முனை நீதிவான் மன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு ஆர்ப்பாட்டத்துக்கு தயாரானபோது, அதை அறிந்த பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாகப் போராட்டத்துக்கான தடை உத்தரவைப் பெற்றிருந்தனர். இறுதியில் மட்டக்களப்பில் இரகசியமாக ஓர் இடம் திட்டமிடப்பட்டு ஆர்ப்பாட்டத்தக்கு தயாரானபோது ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இலங்கையை அதிரச் செய்திருந்தது. அந்தத் தாக்குதல்களின் பின்னர் பிரதேச செயலகத்தைதரமுயர்த்த கோரும் போராட்டமும் கைவிடப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டம் எந்த நேரமும் பாயும், இளைஞர்கள் கைதாவார்கள் என்று எண்ணிப் போராட்டங்களை நடத்த முடியாது போனது. எனினும் அண்மையில் மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பௌத்த துறவி ஒருவர் உணவு ஒறுப்பில் குதித்துள்ளார். எதிராக முஸ்லிம் மக்களும்போராட்டத்தில் குதித்துள்ளனர். கல்முனையில் பரபரப்பான சூழல் நிலவுகிறது. அரசியல் கட்சிகள் பொது அமைப்புக்கள், சமயத் தலைவர்கள் என்று பலரும் தமது ஆதரவுகளைத் தெரிவித்து வருகின்றனர். தரமுயர்த்துவதுதொடர்பில்காலஅவகாசம் கோரி தலைமை அமைச்சர் வழங்கிய எழுத்து மூலமான உறுதி மொழியும் மீறி உடனடியாகத் தரமுயர்த் தப்படவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே தமிழர்களின் நிலமான வடக்கு மாகாணத்திலும் விழிப்புணர் வுகள் ஏற்படுத்தப்பட்டு, வல்வெட்டித்துறையில் நேற்று போராட்டம் தொடக்கப்பட்டுள்ளது. (எ-21,26)

# காணி உறுதி வழங்கும் நடமாடும் சேவை

வவுனியா.ஜூன் 23

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் காணி உற்றுதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நடமாடும் சேவை கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த பகுதிகளில் காணி உறுதிப் பத்திரமின்றி வசித்து வந்த 57 பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்காகவே இந்தக் காணி நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.பிரியதர்சினி, கிராம அலுவலர், காணி அலுவலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



# திருக்கேதீச்சரத்துக்கான வளைவு அமைப்பதில் தொடர்கிறது சிக்கல்

## அனுமதி வழங்கிய தவிசாளர் தற்போது இடைநிறுத்தினார்

மன்னார், ஜூன் 23

மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகவும், இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்று என்ற பெயர் பெற்றதுமான மன்னார் திருக்கேச்சரர் ஆலயத்துக்கான வளைவை அமைப்பதில் மீண்டும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. வளைவு அமைப்பதற்கு அனுமதி கொடுத்திருந்த மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் சில நாள்களிலேயே அந்த அனுமதியைத் தற்காலிகமாக நிறுத்தியுள்

திருக்கேதீச்சரர் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் வைக்கப்பட்டிருந்த வளைவை அகற்றி புதிய வளைவு ஒன்று அமைக்கப் பட்டபோது, அது மன்னாரில் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தியிருந்தது. இந்து, கத்தோலிக்க மக்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருந் தது. புதிய வளைவு வைக்கப்பட்டபோது அதை கத்தோலிக்கர்கள் சிலர் அங்கி ருந்து அகற்ற முற்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதன்பின்னர் திருக்கேதீச்சரர் ஆலய நிர்வாகத்தினர் ஏற்கனவே இருந்ததைப் போன்று நிரந்த ரமாக ஒரு வளைவை அங்கு அமைக்க மன்னார் பிரதேச சபையிடம் அனுமதி கோரியிருந்தனர். ஆவணங்களைப் பரிசீலித்த சபை, சில இணக்கப்பாடுகளு டன் அதற்கான அனுமதியை வழங்கியி ருந்தது. கடந்த 14ஆம் திகதி அந்த அனு மதி வழங்கப்பட்டிருந்தது. சபைத் தவிசா ளர் எஸ்.எச்.எம். முஜாகிர் வளைவு அமைக்கப்படும் இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, ஆலய நிர்வா கத் தினருடன் சில இணக்கப்பாடுகளை ஏற்ப டுத்தியிருந்தார். ஆலய நிர்வாகத்தினரும் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து தவிசாளரின் அனுமதியைப் பெற்றிருந்த னர். அனுமதி பெறப்பட்டதன் பின்னர், பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப் பினர்கள், மற்றும், கத்தோலிக்க மக்கள் என அனைவருக்கும் திருக்கேச்சரர் திருப்பணிச் சபையின் இணைச் செயலா ளர் எஸ்.இராமகிருஷ்ணன் நன்றிக ளைத் தெரிவித்திருந்தார்.

மத நல்லிணக்கத்தைக் கருத்தில் கொண்டு அந்த வளைவை அமைப்ப தற்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங் கியுள்ளனர் என்று அவர் தெரிவித்திருந் தார். இந்த நிலையில் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாகிர் தான் வழங்கிய அனுமதி தற்காலிகமாக நிறுத் தப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

"மன்னார் திருக்கேச்சரம் மாந்தை சந்தி யில் தோரண நுழைவாயில் அமைக்க மன்னார் பிரதேச சபையால் கடந்த 14 ஆம் திகதி வழங்கப்பட்ட அனுமதியின் பின்னர் பல்வேறு தரப்பினரிடம் இருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற் றுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு எமது பிரதேச சபை எல்லைக்குள் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்த விடயம் தொடர்பில் கலந்துரையா டலை ஏற்படுத்தி சுமூகமான தீர்வை ஏற் படுத்தும் வரை என்னால் வழங்கப்பட்ட அனுமதியானது தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்படுகின்றது" எனத் தெரி வித்து அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது திருக்கேதீச்சரர் ஆலய நிர்வாகத்தி னர், மற்றும் மக்கள் மத்தியில் கடும் அதி ருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரி விக்கப்படுகிறது.

வரைபடத்தில் இருந்து, வளைவு அமைக்க தீர்மானித்த இடம்வரை மதநல்லிணக் கத்தைக் கருத்தில்கொண்டு பல விட்டுக் கொடுப்புகளைச் செய்தும், ஆலய நிர்வா கம் வளைவு அமைப்பதற்கு அனுமதி யைப் பெற்றிருந்தபோதும் சிலருடைய பிடிவாதத்தாலும், தூண்டுதலாலுமே தவிசாளர் இவ்வாறு அனுமதிய இரத்துச் செய்துளார் என்று மக்கள் அங்கலாய்த்து வருகின்றனர். (எ-21,56,213)



# பரிசுப் பொருள்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு,ஜூன் 23

முல்லைத்தீவு, செம்மலை மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவுக்கு ஒரு தொகைப் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சிவம் அறக்கட்டளை "கல்விக்கு கரம் கொடுப் போம்" எனும் திட்டத்தின் கீழ் லண்டனில் வசிக்கும் .கந்தப்பிள்ளை திலீபன் இந்தப் பரி சுப்பொருள்களை வழங்கிவைத்தார்.

கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பி னர் சி.லோகேஸ்வரனால் பாடசாலை ஆசிரி யர் ஒருவரிடம் நேற்று கையளிக்கப்பட்டது. பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-222)

# கொலைச் சந்தேகநபர்களின் மறியலை நீடித்தது நீதிமன்று

கொடிகாமம், ஜூன் 23

கெற்பேலி, பாலாவி மணல் பிரச்சினை தொடர்பான கொலை வழக்கின் சந்தேகநபர் களை மீண்டும் விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் கெற்பேலி பாலாவி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட வேளை ஏற்பட்ட மோதலில் வயோதிபர் ஒரு வர் கொலை செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்ட சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்தனர்.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்களை மீண்டும் எதிர் வரும் 5ஆம் திகதி வரை விள்க்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-159)

# சுகாதாரச் சீர்கேடுகள்; விடுதிகள் மீது வழக்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 23

சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய குற்றச் சாட் டில் யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் இயங் கும் பிரபல விடுதி உட்பட 5 விடுதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரப்பகுதி பொதுசுகாதார பரி சோதகர் பா.சஞ்சீவனால் 5 விடுதி உரிமை யாளர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் பிரபல விடுதிக்கு எதிராக சுமத்தப்பட்ட 7 குற்றச்சாட்டுகளையும் அதன் உரிமையா ளர் மறுத்த நிலையில் உரிமையாளரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவித்ததுடன் மேலதிக விசாரணைக்காக வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார்.

ஏனைய நான்கு விடுதி உரிமையாளர்களில் ஒருவர் வருகைதரவில்லை. ஏனைய உரி மையாளர்களில் இரு விடுதி உரிமையாளர் கள் தம்மீதான குற்றச்சாட்டுகளை ஏற்ற நிலை யில் அவர்களுக்கு 21ஆயிரம் மற்றும் 15 ஆயிரம் தண்டம் அறிவிடப்பட்டதுடன் விடுதி உணவகங்களை மறு அறிவித்தல் வரை மூடுமாறும் உத்தரவிட்டார்.

மற்றைய விடுதி உரிமையாளர் குற்றத்தை ஏற்ற நிலையில் தண்டனைத் தீர்ப்பிற்காகவும் பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கைக்கா கவும் வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிவான் எதிராளியை 50 ஆயி ரம் சரீர பிணையில் விடுவித்தார். (ஐ-106)



## கன்னாதிட்டி ஒழுங்கைகளினூடாக

# கனரக வாகனங்கள் உட்செல்வதற்குத்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 23

யாழ்ப்பாண நகரை அண்டிய கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள கன்னாதிட்டி ஒழுங் கைகளினூடாக கனரக வாகனங்கள் செல் வதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள சில தனியார் வியாபார நிறுவனங்கள் தமது பொருள்களை ஏற்றி இறக்குவதற்காக கன் னாதிட்டி ஒழுங்கைகளைப் பயன்படுத்தி வருவதால் அந்தப் பகுதியிலுள்ள குடியி ருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர்.



வீதிகளின் அளவை விடப் பெரிய வாகனங் களில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவத னால் வீதி இடியுண்டு போனதோடு, வீதி யோரமிருந்த வாய்க்கால்களும் முற்றாக உடைந்து போயிருந்தன.

இதனால் பொது மக்களிடமிருந்து யாழ்ப் பாண மாநகர உறுப்பினர் ஊடாக மாநகர முதல்வருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, குறிப்பிட்ட இரு ஒழுங்கைகளி னூடாகக் கனரக வாகனங்கள் செல்வ தைத் தடை செய்யும் வகையில் மாநகர முதல்வரால் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (ஐ-105)

# சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம்

கொடிகாமம், ஜூன் 23

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் தரம் ஐந்து மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் அண்மையில் அதிபர் சி.பாலகுமா ரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக அப்போதைய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு சுந்தரசிவம் கலந்து சிறப்பித்தார். (ஐ-159)





# இலங்கையின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

இலங்கையின் பாதுகாப்பு தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்த அனைத்து ஐ.எஸ். பயங்கரவாதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைகளை தற்போது பெற்றுக்கொண்டுள்ளேன். இன்று நாட்டின் பாதுகாப்பு முழுமையாக நிலை நாட்டப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் தெரிவுக்குழு, அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

ஏப்ரல் 4 ஆம் திகதியே குண்டுத்தாக்குதல் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டும், ஏன் அதனை கவனத்தில் கொள்ளவில்லை என்று நாம் கண்டறிய வேண்டும். குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற உடனேயே நான் பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்றிருந்தேன். அரச தலைவருடன் தொலைபேசியில் உரையாடியிருந்தேன்.

முப்படையின் தளபதிகளுடனும் கலந்துரையாடியிருந்தேன். இதன்போது, ஐ.எஸ். பயங்கரவாதிகள் எவரும் தப்பித்துக்கொள்ளாத வகையில் கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். தற்போது இலங்கையில்உயிருடன்இருக்கும்அனைத்து ஐ.எஸ். பயங்கரவாதிகளையும் நாம் கைது செய்துள்ளோம்.

அவர்களுக்கு எதிரான கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்- என்றார். (எ)

# கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு தேவை

## அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23



கல்முனை பிரதேச செயலகம் விடயம் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. இந்த விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டால் ஒரு சுமூகமான தீர்வை எட்ட முடியும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாண நுவரெலியா ஹங்குரன்கெத்த முல்லோயா தமிழ் வித்தியாலயத்தின் இரண்டு மாடி வகுப்பறை கட்டடம் நேற்று முன்தினம் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் சிறப்பு பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணனால் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது

மொழி ரீதியாக ஒன்று பட்டு இருக்கும் நாங்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் நடந்தோமா னால் இந்த இரண்டு இனத்துக்கும் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும் தமிழ் மொழியைப் பேசக்கூடிய தமிழ் இனத்தவர்களும், முஸ்லிம் இனத்தவர்களும் கடந்த காலங்களில் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் பல உரிமைகளை பெற்றிருக்க முடியும். கடந்த காலங்களைபோல் செயற்படாமல் சிந்தித்து ஒற்றுமையாகச் செயற்பட முஸ்லிம்தலைவர்கள் முன்வருவார்களேயானால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படாது சுமூகமான தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகமாக தமிழ் மக்கள் வாழும் கல்முனைப் பிரதேசத்தில் பிரதேச செயலகத்தை தமிழ் மக்களுக்கு விட்டுக் கொடுத்து அதன் மூலமாக முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இருக்கின்ற உறவை மேலும் நீடிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (எ)

# சிறையில் இருந்து கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஜூன் 23

பதுளை - தல்தென திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் இருவர் தப்பிச்சென்றுள்ளனர்.

ஹெரோயின் கடத்திய சம்பவம் தொடர்பில் தண்டனை பெற்ற இருவரே தப்பிச் சென்றுள்ளனர். இம்புல்கொட மற்றும் மட்டக்குளிய பகுதிகளை சேர்ந்த 19 மற்றும் 37 வயதான இருவரே தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்வற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் பதுளை பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

# ஜப்பான் ஆலோசகருடன் ரணில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூன் 23

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கண்டி நகரை விரிவுபடுத்தும் திட்டத்தை அமைப்பதற்கு ஜப்பானின் ஒத்துழைப்பை பெறுவது சம்பந்தமாக தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், ஜப்பான் தலைமை அமைச்சரின் சிறப்பு ஆலோசகர் கலாநிதி ஹிரோத்தோ இசுமிக்கும் இடையே நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்திப்பு நடந்துள்ளது.

அதில் இலங்கைக்கும், ஜப்பானுக்கும் இடையில் முதலீட்டுதிட்டங்களை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை தலைமை அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

ஜப்பானின் சரித்திர முக்கியத்துவம் மிக்க ஹியோத்தோ நகரை, அதன் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாத்து நவீன மயப்படுத்தியதுபோல், கண்டி நகரை விரிவுபடுத்தும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சகல சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பைவழங்குவதற்குஜப்பான் தயாராக இருப்பதாக அந்தநாட்டுத் தலைமை அமைச்சரின் ஆலோசகர் இந்தச்சந்திப்பின்போதுதெரிவித்தார்.(எ)

# கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடப்புத்தகத்தில் தவறான கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

## மதசார்பற்ற அமைப்பைச் சேர்ந்த ரிஸ்வின் இஸ்மத் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 23

இஸ்லாம் மதம் குறித்த விமர்சனங்களை முன்வைத்த காரணத்தாலும் வேறு சில சமூக சிந்தனை செயற்பாடுகளை முன்னெடுத்த காரணத்தாலும் ஸஹ்ரான் என்னை கொலை செய்யத்திட்டம்தீட்டியிருந்தார். இந்த நாட்டின் கல்விஅமைச்சால்முஸ்லிம் பாடசாலைமாணவர்களுக்குவழங்கப்படும் புத்தகத்தில் கூட மதத்தை கைவிடுபவரைக் கொல்ல வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மதசார்பற்ற அமைப்பை சேர்ந்த ரிஸ்வின் இஸ்மத் என்ற நபர் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அறிக்கையை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற சிறப்பு தெரி வுக்குழு முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை வாக்குமூலம் வழங்கிய ரிஸ்வின் இஸ்மத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இவ்வாறான விடயங்கள் பாடசாலைப் புத்தகங்களில் இருக்கும் நிலையில் பயங்கரவாதி ஸஹ்ரான் போன்றவர்கள் சிரியாவிலி ருந்து வரத்தேவையில்லை. இங்கேயே அதற்கான சூழல் உள்ளது.

நான் பிறப்பில் முஸ்லிம். எனினும் 2014ஆம் ஆண்டளவில் நான் அந்த மதத்திலிருந்து விலகினேன். இப்போது நான் மத சார்பற்றவன். என்னை ஒரு நாஸ்திகன் என அடையாளப்படுத்தலாம். எனது முகப் புத்தகத்தின் ஊடாக இஸ்லாம் மதம் பற்றிய விமர்சனங்களை நான் முன்வைத்திருந்தேன். நான் எனது வாழ்க்கையில் பலவற்றை மதத்துக்காக் பங்களித்தவன் என்ற வகையில் நான் அவ்வாறாக எழுதியிருந்தேன். ஆனால்இதற்குஎதிராகஎனக்கு கொலை அச்சுறுத்தல்கள் எழுந்தன. அவை முகப்புத்தகங்களின் ஊடாக முன்வைக்கப்பட்டன. அவற்றில் போலிக் கணக்குகளும் காணப்பட்டன. இது தொடர்பில் நான் முதலாவது முறைப்பாட்டை 2016ஆம் ஆண்டிலும்அதன்பின்னர்2017ஆம் ஆண்டு ஜூலையிலும், ஒகஸ்டிலும் செய்திருந்தேன். சைபர் கிறைம் பிரிவிலும் இரண்டு தடவைகள் முறைப்பாடு செய்தேன். அதன் பின்னர் ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் எனது வீட்டுக்கு இரண்டு தடவைகள் வந்தனர்.

நான் சரியான முகவரியில் இருக்கின்றேனா? அச்சுறுத்தல் இருக்கிறதா? என்று பார்த்துச் சென்றனர். பின்னர் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவுக்கு வருமாறு கூறியுள்ளனர். 2017ஆம் ஆண்டு தெஹிவளையில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சிறுமிகள் நடத்தை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக நானும் எனது நண்பரும் தலையிட்டிருந்தோம். இதனை நடத்துபவர் வஹாபிச கொள்கையைக் கொண்ட மருத்துவர் ஒருவர். இது தொடர்பான வழக்கு பதிவுசெய்யப்பட்டு நுகேகொட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதே வேளை சமூக நீதிக்கான அமைப்புடன் இணைந்து நாம் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினோம். இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக எனது முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தேன். இதனைப் பார்த்து ஸஹ்ரான் என்னை கொல்லுமாறு கூறி நான்கு பேரை அனுப்பியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஏன் கொலை அச்சுறுத்தல் எனக்கு வந்தது என்பதனை கூற வேண்டுமென்றால் முஸ்லிம் மதத்தைக் கைவிட்டால் கொல்லப்பட வேண்டும்எனகூறப்படுவதுமதத்தில்உள்ளதாலாகும். இந்த நாட்டில் கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகத்தில் கூட இது குறிப்பிடப் பட்டுள்ளது. புதிய புத்தகத்தில் கூட வேறுவிதமாக இது குறிப்பிடப்பட்டுள்ளது. 1981 ஆம் திகதி வெளியிடப்பட்ட புத்தகத்தில், தெளிவாக மதத்தை கைவிடுபவரைக் கொல்ல வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாம் மதப் புத்தகத்தில் 9ஆம் மற்றும் 10ஆம் தரத்துக்கான புத்தகங்களில் இந்த விடயம் உள்ளது. 1980முதல்1990வரையான ஆண்டு வரையில்வெளியான புத்தகங்களில் இவை காணப்படுகின்றன. அத்துடன் புதிய புத்தகத்தில் 2015, 2016, 2017ஆம் ஆண்டு வெளியான புத்தகங்களில் அவ்வாறானவர்களை தர்ம துரோகிகளா கப் பார்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதில் பழைய சிங்கள புத்தகத்தில் அந்த புத்தகத்தை எழுதிய ஆசிரியர் குழாம் யார் என குறிப்பிடப்படவில்லை. இரண்டு இடங்களில் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாம் மதத்தை விட்டு விலகியவர் காபீராகப் பார்க்கப்படுவார் எனவும் சில சந்தர்ப்பங்களில் அதற்கும் கடுமையாக பார்க்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட் டுள்ளது. காபீர் என்பது வேற்று மதத்தவர் என்றே அர்த்தம். தமிழ் மொழியிலுள்ள புத்தகத்தில் "மரண தண்டனை" அல்ல "கொலை" என்ற வசனமே உள்ளது. இவ்வாறான விடயங்கள் பாடசாலைப் புத்தகங்களில் இருக்கும் நிலையில் பயங்கரவாதி ஸஹ்ரான் போன்றவர்கள் சிரியாவிலிருந்து வரத்தேவையில்லை. இங்கேயே அதற்கான சூழல் உள்ளது. இஸ்லாம் மதத்தை கைவிட்டவர்கள் கொல்லப்படவேண்டும் என குர்ஆனில் கூறப்படவில்லை. எனினும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. நபி கூறியவை, பின்பற்றியவை என்பதே ஹதீஸ் எனப்படுவதாகும். அரசால் வெளியிடப்படும் இஸ்லாம் மதப்புத்தகத்தில் இவ்வாறான விடயம் உள்ளடக்கப்படுமாயின், மதரசாக்களில் பயன்படுத்தப்படும் புத்தகங்களில் எந்தளவுக்கு வன்முறை விடயங்கள் உள்ளடக்கப்படும் என நீங்கள் சிந்தித்துப் பார்க்கலாம் - என்றார். (எ)

சூரியகாந்தி
உதயன்
23.06.2019
ஞாயிறு சிறப்பம்சம்




# களேபர பூமியாகும் கல்முனை





ச.அகேல்

கிழக்கின் முக வெற்றிலை என வர்ணிக்கப்படும் கல்முனை மாநகரம் தற்போது களேபர பூமியாக மாறியிருக்கின்றது. முப்பது வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை உடனடியாகத் தரமுயர்த்துமாறு கோரித் தமிழர் தரப்பு முன்னெடுக்கும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஏட்டிக்குப் போட்டியாகக் குறித்த பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டாம் என வலியுறுத்தி கல்முனை வாழ் முஸ்லிம் தரப்பும் போராட்டத்தில் குதித்திருக்கிறது. கல்முனை மாநகர் போராட்ட களமாகியுள்ளது.



**பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக்கோரித் தமிழர் தரப்பு வெற்றிக ரமாக, உணர்வுபூர்வ மாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், இனத்துவ ரீதியிலும் நிலத் தொடர்பற்ற ரீதியிலும் உருவாக்கப்பட எத்த னிக்கும் குறித்த பிர தேச செயலகத்தைத் தடை செய்யக் கோரும் போராட்டமொன்றைக் கடந்த வியாழக்கிழமை கல்முனை சமாதான சதுக்கத்தில் ஆரம்பித்த னர் கல்முனை மாநகர் வாழ் முஸ்லிம்கள்.**

### தேரரின் தமிழர் பற்று

கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி வணக்கத்துக்குரிய ரண்முத்துகல சங்க ரத்ன தேரர் தலைமையில் கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத் தலைவரும் கல்முனை முருகன் ஆலய முதன்மைக் குருவுமான சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்த சிவக் குருக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களாக அ.விஜயரத்தினம், எஸ்.ராஜன், அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவரும் தொழிலதிபருமான கே.லிங்கேஸ்வரன் ஆகியோர் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக்கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆண்கள், பெண்கள் என இளவயதினரும் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். கடந்த 17ஆம் திகதி இந்த உப பிரதேச தரமுயர்த்தல் கோரிக்கை தொடர்பான உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது. உணவு தவிர்ப்புப் போராட்டக்காரர்களிடம் மூன்று மாத கால அவகாசத்தில் குறித்த பிரதேச செயலகத் தரமுயர்த்தல் நடைபெறுமெனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கி ரமசிங்க எழுத்து மூலம் உத்தரவாதமளித்தார். ஆனாலும் போராட்டக்காரர்கள் அதை ஏற்காது தமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

### எதிராக முஸ்லிம்களும் களத்தில்

பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரித் தமிழர் தரப்பு வெற்றிகரமாக, உணர்வுபூர்வமாகப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், இனத்துவ ரீதியிலும் நிலத் தொடர்பற்ற ரீதியிலும் உருவாக்கப்பட எத்தனிக்கும் குறித்த பிரதேச செயலகத்தைத் தடை செய்யக் கோரும் போராட்டமொன்றைக்




கடந்த வியாழக்கிழமை கல்முனை சமாதான சதுக்கத்தில் ஆரம்பித்தனர் கல்முனை மாநகர் வாழ் முஸ்லிம்கள். ஏட்டிக்குப் போட்டியான இந்த நிலை அங்கு பெரும் கொந்தளிப்பையும் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

### தமிழர்களுக்கான தனிச் செயலகம்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பிற இனத்தவர்களால், ஆக்கிரமிக்கப்படுவதையும் மூவின மக்களும் ஒன்றாக இருந்து செயற்பட்டு வந்த உதவி அரச அதிபர் பிரிவுகளால் தமிழர்களுக்கு எதுவித நன்மையோ, அபிவிருத்தியோ ஏற்படாததையும் பல வருட அனுபவத்தால் உணர்ந்து, தமிழர்தம் பாரம்பரியப் பிரதேசங்களை உள்ளடக்கித் தனியான உதவி மாவட்டச் செயலர் பிரிவுகளை ஏற்பத்த வேண்டிய நிலை அன்று உணரப்பட்டது. அதன் ஆரம்ப அடித்தளமாகச் சட்ட பூர்வ ஏற்பாடுகளுக்கு வழிவகுத்தார் முன்னாள் நீதி அமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சரும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பில் இருந்தவருமான கே.டபிள்யூ.தேவநாயகம். இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதனுடன் இணைந்து கல்முனைத் தமிழ்ப் பிரிவு மற்றும் நாவிதன்வெளி உதவி மாவட்டச் செயலர் பிரிவுகளைப் பெறுவதற்கான தொடர் முயற்சியில் ஈடுபட்டது. 1986ஆம் ஆண்டிலிருந்து 1989ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பல நடவடிக்கைகள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன்பயனாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றது.

1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதியன்று M/HA6.89 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் மூலம் கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகம் என இன்று அழைக்கப்படும் உதவி மாவட்டச் செயலர் பிரிவையும் நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவையும் ஏற்படுத்தியது.

### தரமுயர்த்தப்படாத நிலை தொடரும் அவலம்

கல்முனை வடக்கில் தமிழர்களுக்குத் தனியான உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டாலும் அது இன்று வரை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படாது புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. அதன் நிலம் மற்றும் நிதி அலுவல்கள் கல்முனை வடக்கு முஸ்லிம் பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குள்ளேயே இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் 28.7.1993ஆம் ஆண்டில் நாட்டின் அமைச்சரவை கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் உட்பட 28 உப அலுவலகங்களைத் தரமுயர்த்துவதற்கு அனுமதி அளித்திருந்தது. இந்த 28 உப பிரதேச செயலகங்களில் கல்முனை உப அலுவலகம் மட்டும் தரமுயர்த்தப்படவில்லை.

### முஸ்லிம் தரப்பினரின் முட்டுக் கட்டை

முஸ்லிம் தரப்பினர், குறிப்பாகக் கல்முனைப் பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளின் அழுத்தமும் முட்டுக்கட்டைகளுமே இந்தத் தரமுயர்த்தல் விவகாரம் இன்று வரை நீடிக்கக் காரணமெனக் கூறப்படுகிறது. இந்தப் பிரதேச செயலகத்துக்கான எல்லை தொடர்பான அச்ச நிலைமையே முஸ்லிம் தரப்பின் இந்த முட்டுக்கட்டைகளுக்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. கல்முனை தரவைப் பிள்ளையார் கோயிலின் முன் வீதியிலிருந்து பெரிய நீலாவணை வரையுள்ள தமிழர் வாழும் பிர தேசங்களை உள்ளடக்கி எல்லை வகுக்கப்படுமென அவர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் நகரிலுள்ள தமது வர்த்தக மையங்கள், பொதுச்சந்தைகள், காணிகள் போன்ற வளங்களெல்லாம் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டு விடும். இதுதான் முஸ்லிம்க ளின் அச்சநிலைக்கும் அதன்மூலமான முட்டுக்கட்டை களுக்கும் காரணமெனக் கூறப்படு கின்றது.

### பேச்சில் இறங்கவேண்டிய இரண்டு தரப்புகள்

எது எப்படியோ கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தாது கடந்த முப்பது வருட காலமாகக் கல்முனைத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது. இந்த அநீதி குறித்துப் பேச்சுக்கள் மூலம் சுமூகத் தீர்வு காணுமாறு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் முஸ் லிம்கள் முஸ்லிம் காங்கிரசையும் வலியுறுத்தி வந்தனர். இந்த விடயத்தில் இருசாராரும் காட்டிய அசமந்தமே நிலமையை இன்று வேறு திசைக்கு மாற்றியுள்ளது.

### முஸ்லிம் - தமிழர் இடையே முரண்

பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பரவல் கிழக்கில் இருந்து வருகிறது. ஆகையால் நிர்வாக அலகுகளை அதற்கேற்ப பிரித்தமைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களைக் குறிவைத்துப் பெளத்த பேரினவாதம் காய் நகர்த்தி வருகின்ற சமநேரத்தில், கிழக்கில் இந்தப் பிரச்சினையும் கையில் எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையேயும் இதுவரை காலமும் இருந்து வந்த இந்த நல்லுறவையும், ஒற்றுமையையும் சீர்குலைத்துத் தமிழர்களையும், முஸ்லிம்களையும் ஒன்றுபடவிடக் கூடாது என்ற பெளத்த பேரினவாதத்தினதும் சுயநல அரசியல் கில்லாடிகளதும், எதிர்பார்ப்பும் இதில் சாத்தியப்படாமலில்லை. தமிழர் தரப்புக் கோரும் நீதி சரியானதாக இருக்கச் சந்தர்ப்பம் பார்த்துப் பெளத்த பேரினவாதம் அதைப் பயன்படுத்துவது பற்றியும் விவா திக்கப்படுகிறது. இழைக்கப்பட்ட எத்தனையோ அநீதிகள், கொடூரங்களைப் புற மொதுக்கிவிட்டுத், தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக இந்த விடயத்தை மாத்திரம் சுட்டிக்காட்டும் தேரர்கள் பிறந்தி ருக்கிறார்கள் என்று விமர்சிக்கப்படுகிறது. மக்களால் கைவிடப்பட்ட, கணக்கெடுக்கப்படாத சில தமிழ் அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் மூக்கை நுழைத்து வீர வசனம் பேசத் தொடங்கியுள்ளனர். ஒட்டுமொத்தத்தில் கல்முனையைக் கருமேகம் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. இனியும் தாமதிக்காமல் தமிழ் - முஸ்லிம் தலைமைகள், புத்திஜீவிகள் இந்த விடயத்துக்கு உடனடியான தீர்வு காண வேண்டும்.





# அவசரகால நிலைமை நீக்கப்படட்டும்

ஸ்டோஸ்வாமி

நாட்டில் நடந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களையடுத்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகால சட்டம் மீண்டும் நீடிக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் நீக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த அமரவீர அறிவித்திருந்தார். சிறிலங்கா சுதந்தி ரக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டிருக்கிறார். நடைமுறையிலுள்ள அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்தால் நீடிப்பதற்குச் சாத்தியம் இருக்கிறது எனக் கோடி காட்டியிருக்கும் அவர், இயல்பு நிலை திரும்புவதைத் தொடர்ந்து அவசரகால நிலை நீக்கப்படும் என்றிருக்கிறார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களையடுத்து நாட்டில் தோன்றிய நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு அரச தலைவர் மைத்திரிபாலவால் அவசரகால நிலைமை அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட 2120கீழ் 3ஆம் இலக்க அதிசிறப்பு அரசிதழ் மூலம் இந்த நிலை அறிவிக்கப்பட்டிருந்தது.



### நாடாளுமன்ற ஒப்புதலின்றி நீடிப்பு

பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், மக்கள் வாழ்வுக்கு அத்தியாவசிமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் ஏன்பவற்றைப் பேணுவதற்காக, அரச தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி 1959ஆம் ஆண்டின் எட்டாம் இலக்கச் சட்டத்தின் கீழும் தேசிய அரச பேரவையின் 1978ஆம் ஆண்டு ஆறாம் இலக்கச் சட்டத்தாலும், 1988ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தாலும்



அரச தலைவருக்கு வழங்கப்பட்ட உரித்துக்களின் அடிப்படையில் இந்த அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அரச தலைவரால் அறிவிக்கப்பட்ட இந்த அவசரகால நிலைமை நாடாளுமன்றின் ஒப்புதலுடனேயே நீடிக்கப்படும். கடந்த ஏப்ரல் 24ம் திகதி இது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே நீடிக்கப்பட்டிருந்தது.

### எழுத்துமூலத் தெரியப்படுத்தலுடன் நீடிப்பு

அரச தலைவரால் அறிவிக்கப்பட்ட இந்த அவசரகால நிலைமை 30 நாள்களுக்கு மட்டுமே செல்லுபடியானதாகும். அந்த வகையில் ஏப்ரல் 22ஆம் திகதி அறிவிக்கப்பட்ட இந்த அவசரகால நிலைமை, மீண்டும் மே மாதம் 22ஆம் திகதிய 2124கீழ் 10ஆம் இலக்க அதிசிறப்பு அரசிதழால் மேலும் 30 நாள்களுக்கு நீடிக்கப்பட்டது. குறித்த நீடிப்புத் தொடர்பில் அரச தலைவர் எழுத்துமூலம் நாடாளுமன்றச் சபாநாயகருக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அவசரகால நிலைமையை நீடிப்பது தொடர்பான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் நடத்தப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 22 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள் அதை எதிர்த்து வாக்களித்திருந்தனர்.

### அவசரகால நிலையை நீக்குவதற்கு மகிந்த அணி ஆதரவு

கடந்த வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தினேஷ் குணவர்தன, அவசரகால நிலையை நீக்குமாறு தாம் அரசைக் கோருவதாகக் குறிப் பிட்டார். குறித்த அவசரகால நிலைவரம் பொதுமக்களுக்குரிய சனநாயக உரிமைகளை மறுப்பதாகத் தெரிவித்த அவர், தேசிய பாதுகாப்புத் தொடர்பாக அரசு போதிய நம்பிக்கையைக் கொண்டிருக்குமானால் அவசரகால நிலையை நீடிப்பது அவசியமில்லை என்றிருந்தார். அவசரகால நிலையை அரசு நீடிப்பதாக இருந்தால் அதற்குரிய காரணத்தை அது நாடாளுமன்றில் முன்வைக்க வேண்டும். என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த மே மாதம் அவசரகாலச் சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இந்த அணி உறுப்பினர்கள் அந்த வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கவில்லை.

### அவசரகால நிலைமையின் ஆபத்துக்கள்

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் அமைதி என்பவற்றைக் கருத்தில் கொண்டதாக இந்த அவசரகால அறிவிப்பு அமைந்தாலும், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தாலும் ஏனைய சட்டங்களாலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை மட்டுப்படுத்தும் பலத்தையும் இது கொண்டிருக்கிறது. அத்தோடு, அவசரகால நிலைமை அறிவிப்பை நீதிமன்றில் கேள்விக்குட்படுத்த முடியாது. 1983ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் இருந்து மாதா மாதம் நீடிக்கப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் 2011ஆம் ஆண்டிலேயே நீக்கப்பட்டது. அதன் பின்னர் கடந்த ஆண்டு கண்டியில் வன்முறைகள் வெடித்ததைத் தொடர்ந்து மீண்டும் சென்ற ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி அது நடைமுறைக்கு வந்து பின்னர் அதே மாதம் 17ஆம் திகதி இல்லாமற் போயிற்று.

### மேலும் நீடிக்கப்பட்டது

கடந்த மே மாதம் 22ஆம் திகதி நீடிக்கப்பட்ட அவசரகால நிலைவரம் நாடாளுமன்ற ஒப்புதலின்றி நீடிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அது நீடிக்கப்படும் எனில், முதலில் அரச தலைவரால் அந்த நீடிப்பு அறிவிக்கப்படும். பின்னர் 14 நாள்களுக்கிடையில் அது நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறவேண்டும். இந்த மாதத்தில் எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவிருக்கிறது. கடந்த மாதம் அவசரகால நிலை வாக்கெடுப்புக்கு வந்தபோது வெறும் 31 உறுப்பினர்களே அந்த வாக்கெடுப்பில் பங்கெடுத்திருந்தனர். கடந்த முறை அவசரகால நீடிப்பின் பின் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்த அரச தலைவர், இதற்கு மேல் அவசரகால நிலைமை தொடராது என்றிருந்தார். குண்டுத் தாக்குதல்களையடுத்து இலங்கையின் சுற்று லாத்துறை சுருண்டு படுத்த நிலையில் வெளிநாடுகள் பயண எச்சரிக்கைகளை விடுத்தி ருந்தன.

எனினும் இலங்கைத் தரப்பின் தொடர் அழுத்தங்களை தொடர்ந்தும், சீரடைந்து வரும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் வெளிநாடுகள் தமது பயண எச்சரிக்கைகளைத் தளர்த்தியிருந்தன. ஆனாலும் அவசர கால நிலையை மேலும் நீடித்திருக்கிறார் அரச தலைவர். குறித்த தாக்குதல்கள் தொடர் பில் விசாரணை நடத்தும்

**பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் அமைதி என்பவற்றைக் கருத்தில் கொண்டதாக இந்த அவசரகால அறிவிப்பு அமைந்தாலும், நாட்டின் அரசமைப்புச் சட்டத்தாலும் ஏனைய சட்டங்களாலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை மட்டுப்படுத்தும் பலத்தையும் இது கொண்டிருக்கிறது.**

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னால் புட்டுப்புட்டு வைக்கப்படுகின்ற சாட்சியங்களில் பல அரச மட்டத்தில் காணப்பட்ட அசமந்தப் போக்கை உலகறியச் செய்திருக்கையில், அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொண்டு பொது மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீரழிப்பது வரவேற்புக்குரியது அல்ல. குண்டுத் தாக்குதல்கள் பற்றிய அச்சம் படிப்படியாக ஒழிந்து, பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பரிசோதனைகள் நீக்கப்பட்டு, வழமையான சூழல் திரும்புகையில், அவசரகாலச் சட்டத்தை நீக்கி ஆதரவு நல்குவதே ஆரோக்கியமானது.

சந்திரசேகர ஆசாத்

# பிரித்தாளும் சூழ்ச்சியில் பேரினவாதம்



இந்து ஆலயங்களில் புத்தர் சிலைகள் வைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் மக்கள் விரும்பாவிட்டால் நாங்கள் அதைச் செய்யமாட்டோம். அதற்கு நீதிமன்றம் செல்லத் தேவையில்லை. பொலிஸ் நிலையம் செல்லத் தேவையில்லை. இந்து, பௌத்த மதங்களின் செய்தி அன்பு மட்டுமே. தலதா மாளிகை தாக்கப்பட்டபோது பௌத்தர்கள் இந்துக் கோவில்களைத் தாக்கவில்லை. 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலரவங்களின் போது இந்துக் கோயில்கள் தாக்கப்படவில்லை. கிழக்கில் கணித, விஞ்ஞான ஆசிரியர்களாக 80 வீதமான முஸ்லிம்களே நியமிக்கப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான தமிழர்களின் காணிகள் முஸ்லிம்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் முஸ்லிம்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவ்வாறு சிங்கள - தமிழ் மக்கள் முஸ்லிம் இனவாதிகளால் சூறையாடப்பட்டனர். தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்களின் ஆதிக்கத்தை அழிக்க வேண்டும்" இப்படிக் கூறியவர் வேறு யாருமல்ல. முன்னாள் ஆளுநர்களான ஆசாத் சாலி, ஹிஸ்புல்லா, முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரைப் பதவி நீக்கக் கோரி உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியதன் மூலம் சிங்கள மக்களின் வீர நாயகன் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதில் வெற்றிபெற்ற பௌத்த பிக்குவும் ஐக்கிய தேசியக் கட்சியால் நியமன உறுப்பினராகப் பதவி பெற்றவருமான அத்துரலிய ரத்ன தேரரே. இவர் கொழும்பிலோ, மட்டக்களப்பிலோ, முல்லைத்தீவு செம்மலை நீராவிப்பிட்டியிலோ, திருமலை கன்னியாய் வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலய வளாகத்திலோ வைத்து இப்படிக் கூறவில்லை. யாழ்ப்பாணத்தில், இலங்கை வேந்தன் மண்டபத்தில், இந்து - பௌத்த பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றில் வைத்துத்தான் இப்படிக் கூறியிருந்தார். இந்த உரையின் மூலம் அவர் சொல்லிய செய்தி இந்து மக்களும், பௌத்த மக்களும் முஸ்லிம் அடிப்படைவாதிகளால் ஒடுக்கப்படுகிறார்கள். இவ்விரு மதங்களுக்கும் முஸ்லிம்களால் வரக்கூடிய பெரும் ஆபத்தையும் அழிவையும் தடுப்பதற்கு இந்த இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்பதேயாகும்.



### மதத்துக்கும் இனத்துக்குமான வேறுபாடு

இனம் வேறு, மதம் வேறு என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவை இரண்டும் ஒன்றுபோல் காட்டுவதன் மூலம் ஓர் இனத்தை, அது பின்பற்றும் மதத்தின் அடிப்படையில் இனம் காணப்பட முடியாது. ஆனால், அவ்வாறு இனம் காண்கிற மாயையை ஒடுக்குமுறையாளர்கள் ஏற்படுத்துகிறார்கள். அதன் மூலம் அவர்கள் தங்கள் நலன்களைப் பேணி வருகின்றனர். ஒரு தேசிய இனம் எனப்படும்போது அதற்கென மொழி, பொதுப் பொருளாதாரம், தனித்துவமான கலாசாரம், தொடர்ச்சியான ஒரு வாழிடம் என்பவற்றைக் கொண்டிருக்கும். ஆனால் மதம் என்பது இந்த நான்கு விடயங்களில் ஒன்றான கலாசாரத்தின் ஒரு பகுதியேயாகும். எனவே மதம் என்பது ஓர் இனத்துக்குரிய தகைமையின் ஒரு சிறு பகுதியே. உதாரணமாகப் பௌத்த மதத்தைச் சிங்களவர்கள், சீனர், ஜப்பானியர், திபேத்தியர், நேபாளிகள் எனப் பல இனத்தவரும் பின்பற்றி வருகின்றனர். இவ்வாறே இந்து மதத்தைத் தமிழர், மலையாளிகள், தெலுங்கர்கள், வட இந்தியாவிலுள்ள பல தேசிய இனங்கள் எனப் பல இனக்குழுமங்களும் பின்பற்றி வருகின்றன. இவ்வாறே அரபுகள், வங்காளிகள், உருது இனத்தவர்கள், தமிழர்கள், ஈரானியர், பலஸ்தீனியர்கள் எனப் பல இனத்தவர்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். எனவே எந்த ஒரு மதத்தையும் தேசிய இனம் என்ற வகையறாவுக்குள் உட்படுத்தப்பட முடியாது. ஆனால், உலக மேலாதிக்க சக்திகள் மத அடிப்படைவாதத்தைத் தோற்றுவித்து மதத்துக்கும் இனத்துக்குமான வேறுபாடுகளை மறைத்து வருகின்றனர்.

### யூதர்கள் விடயத்தில் இன - மதம்

உலகில் முதலில் உருவாக்கப்பட்டது யூத அடிப்படைவாதமாகும். இன்று யூதர்கள் ஓர் இனமாகவே பார்க்கப்படுகின்றனர். யூத மதத்தை ஜேர்மனியர்கள், பிரான்ஸியர், அரபுகள் உட்படப் பல தேசிய இனங்கள் பின்பற்றி வந்தன. ஹிட்லரின் யூத அழிப்பு நடவடிக்கை காரணமாக ஜேர்மனியிலிருந்தும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் உயிருக்கு அஞ்சி வெளியேறிய யூதர்கள் பிரித்தானியாவால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நாட்டின் ஒரு பகுதியில் குடியேற்றப்பட்டு இஸ்ரேல் என ஒரு நாடு உருவாக்கப்பட்டது. வழக்கொழிந்து போயிருந்த ஹிப்ரூ மொழி இஸ்ரேலின் அரச மொழியாக்கப்பட்டது. இவ்வாறு ஒரு மொழி, ஒரு வாழிடம், பொதுப் பொருளாதாரம், கலாசாரம் என்பன திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்டு யூதர்கள் ஒரு மதத்தினர் என்ற எல்லையைக் கடந்து ஒரு தேசிய இனமாக்கப்பட்டனர். இஸ்ரேல் ஒரு தேசமானது. இன்று இஸ்ரேல் மத்திய கிழக்கில் அமெரிக்காவினதும் அதைச் சேர்ந்த வல்லரசுகளினதும் நலன்களைப் பாதுகாக்கும் ஒரு வலிமையான நாடாக உருவாக்கப்பட்டுவிட்டது. இது ஒரு மத அடிப்படைவாதம். தேசிய அடிப்படைவாதமாக வலிமை பொருந்திய நாடுகளால் உருவாக்கப்பட்ட கதை. இப்படியான ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே முஸ்லிம்கள் மத்தியிலும் முஸ்லிம் அடிப்படைவாதம் தோற்றம் பெற்றது.

### அமெரிக்காவின் சதியைத் தொடரும் சிங்கள - பௌத்தம்

தலிபான், அல் கெய்தா, ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அடிப்படைவாத அமைப்புகளின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் அமெரிக்காவின் கரங்கள் இருந்தன. உலக நாடுகளில் தமக்குக் கட்டுப்படாதிருந்த ஆட்சிகளைக் கவிழ்க்க இவை பயன்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் தேவை நிறைவேறியதும் அவை அமெரிக்காவின் கையை மீறிச் செயற்படும் போது அமெரிக்கா அவற்றை அழிப்பதில் தீவிரம் காட்டும். அதே பாணியிலேயே சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள், முஸ்லிம் அடிப்படைவாதத்தை வளர்ப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டனர். பின்னர் அதை அழிக்கும் அத்தியாயத்தில் தற்போது இறங்கியுள்ளனர். ஒரே மொழியைப் பேசும், ஒரே நிலப்பரப்பில் வாழும் ஒன்றுடன் ஒன்று வலிமையான பொருளாதார உறவுகள் கொண்ட தமிழ் பேசும் மக்களைத் தமிழர்கள், முஸ்லிம்கள் என முஸ்லிம் அடிப்படைவாதத்தின் மூலம் பிளவுபடுத்தத் திட்டமிட்டு வேலை செய்தனர். அதற்குச் சில சுயநல முஸ்லிம் தலைமைகளும் துணைபோயின.

### பேரினவாதத்துடன் இணைந்து செயற்பட்ட முஸ்லிம்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த காலகட்டத்தில் தமிழ் இளைஞர்களைப் போலவே ஏராளமான முஸ்லிம் இளைஞர்களும் அதில் இணைந்து செயற்பட்டனர். அந்தக் காலப்பகுதியிலேயே முஸ்லிம் அடிப்படைவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. போராளிகள் தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி அனைத்து வர்த்தகர்களிடமும் நிதி சேகரித்தனர். போராளிகள் முஸ்லிம்களிடம் கப்பம் பெறுகின்றனர் என்ற வகையில் சில சுயநல முஸ்லிம் அரசியல்வாதிகளால் பரப்புரைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஹிஸ்புல்லா உள்ளிட்ட சிலர் முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேம தாசவுடன் தொடர்பு கொண்டு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென முஸ்லிம் ஊர்காவல் படையை உருவாக்கினர். அந்தப் படை சிறப்பு அதிரடிப் படையுடன் இணைந்து போராளிகளுக்கெதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களைக் கொன்று குவித்தது. பள்ளிவாசல்களின் ஜும்மா தொழுகையின்போதான உரைகள் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவே நடத்தப்பட்டன. இந்த நிலையில் வடக்கில் புலிகளின் போராட்டம் உச்சமடையும் சூழல் ஏற்பட்டது. வேறு வழியின்றி வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். அதை வைத்து முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படத்தொடர்ந்துதூண்டிவிடப்பட்டனர். மகிந்த ஆட்சிக் காலம் வரை இது தொடர்ந்தது. புலிகளுக்கு எதிரான புலனாய்வு வேலைகளில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் இளைஞர்களின் தொகை அதிகம்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம்களை தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்துவதிலும், விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்துவதிலும், எதிராகச் செயற்பட வைப்பதிலும் சில முஸ்லிம் தலைவர்களின் உதவியுடன் சிங்களப் பேரினவாத சக்திகள் வெற்றிபெற்றன.

### முஸ்லிம்கள் மீது இப்போது குறி

தமிழ் மக்கள் விடயத்தில் பேரினவாதத்துக்கு முண்டு கொடுத்த முஸ்லிம்களின் கதை, இப்போது சிங்கத்துடன் சேர்ந்து நின்ற நரிக்கு ஏற்பட்ட நிலையாக இருக்கிறது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு பேரினவாதிகள் தங்கள் பார்வையை முஸ்லிம்கள் மேல் திருப்பினர். முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் பள்ளிவாசல் தாக்குதல், வர்த்தக நிலையங்களின் மீது அழிவு நடவடிக்கைகள், கொலைகள் எனத் தொடர்ந்தன. அமெரிக்காப்பாணியில் சிங்களப் பேரினவாத சக்திகள் கனகச்சிதமாகச் செயற்பட்டன. புலனாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் போர் முடிந்தகையோடு ஒழுங்குபடுத்தப்படாத கூட்டமாக இருந்து வருகின்றனர் என இராணுவத்தளபதி ஒருவர் அண்மையில் கூறியிருந்ததன் பின்னணியிலும் இந்த விடயமே இருக்கிறது.

எப்படி இருந்தாலும் தற்சமயம் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களின் முன்னேற்றத்தையும் வர்த்தகமேலாண்மையையும் இலக்கு வைத்துள்ளன என்பது தெளிவாகிறது.

### முஸ்லிம்களுக்கு எதிராகத் தமிழர்கள்

இதுவரை காலமும் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்களை எவ்வாறு பதவித்தனரோ அவ்வாறே முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்கள் என்ற பேரில் தமிழர்களைப் பயன்படுத்தும் சதிப் பின்னல் ஒன்று உருவாக்கப்படுவதை அத்துரலிய ரத்ன தேரரின் உரை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இதுவரை தலைவர் பிரபாகரனைப் பயங்கரவாதி என திட்டித் தீர்த்த ஞானசாரதேரரும், சில அரசியல்வாதிகளும் அவரைப் போற்ற ஆரம்பித்துவிட்டனர். இதுவும் கூட முஸ்லிம்களுக்கு எதிரான ஒடுக்குமுறையின் பின்னால் தமிழ் மக்களை அணிதிரட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியே. இதிலிருந்து இந்த பௌத்த கலாசாரப் பேரவை, சிவசேன போன்ற உதிரி அமைப்புக்கள் யாரால் வழி நடத்தப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பேரினவாத சக்திகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குச் சில முஸ்லிம் தலைமைகள் துணைபோனதன் மூலம் விட்ட தவறைத் தமிழ் மக்களும், தலைமைகளும் முஸ்லிம்கள் விடயத்தில் விடக் கூடாது.

கலாசார ரீதியாகச் சில வேறுபாடுகள் இருந்த போதிலும் முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் இனம் என்பதையும் தமிழரும் முஸ்லிம்களும் சிங்களப் பேரினவாதிகளால் ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்கள் என்ற வகையிலும் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதேபோல் முஸ்லிம் தலைமைகளும் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் அரசியலை கைவிட்டு, அமைச்சுக்களைப் பெறும் ஆசையைக் கைவிட்டு ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களுக்காக ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டும்.

இந்தியாவின் தமிழக மாநிலத்தின் தலைநகர் சென்னை தொடங்கி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளையும்தண்ணீர்த்தட்டுப்பாடுநிலைகுலைய வைத்திருக்கிறது. நீரியல் நிபுணரும் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியருமான எஸ்.ஜனகராஜனோ, 'இது மனிதர்கள் நிகழ்த்திய பேரிடர்' என்கிறார். அவருடனான உரையாடலிலிருந்து சில பகுதிகள்...

# அனைவரதும் அலட்சியமே

# தமிழகத்தின் தண்ணீர்ப் பிரச்சினை



எஸ்.ஜனகராஜன்

**தமிழ்நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டுச் சூழலைஎப்படிப்பார்க்கிறீர்கள்?**

நூறாண்டு காணாத வெள்ளம், பத்தாண்டுகாணாதவறட்சி இப்படியெல்லாம்கடந்த காலங்களோடுஒப்பிட்டுஇன்றையசூழலுக்குஒரு நியாயப்பாட்டை நாம் தேடிக்கொண்டே போகலாம். நான் இந்த வறட்சி என்ற வாதத்தை நான் நிராகரிக்கிறேன். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் இந்த மூன்று மாவட்டங்களை எடுத்துக் கொள்வோம். எல்லாம் நீர் மிகுந்த பகுதிகள். கடந்த ஆண்டு சுமார் 800 மில்லி மீற்றர் மழை பெய்தது. இதைநாம்எப்படிவறட்சிஎன்றுசொல்ல முடியும்? பெங்களூருவின் வழமையான மழைப்பொழிவு எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்கு 860 மில்லி மீற்றர் தான். அவர்கள் அதை வறட்சி என்று சொல்வதில்லை. ஆனால், நாம் இதை வறட்சி என்கிறோம். இது சரியா? நீங்கள் எனக்குக்கணக்குச்சொல்லுங்கள். பெய்தமழை என்ன ஆனது? நகர விரிவாக்கத்துக்குப் பிறகு, கிட்டத்தட்டஎட்டாயிரத்துச்சொச்சம்சதுரகிலோமீற்றருக்கு விரிந்திருக்கிறது சென்னை. அந்தப் பகுதியையும் சேர்த்தால் ஆயிரத்து 350 மில்லி மீற்றர் மழை பெய்திருக்கிறது. அதாவது, 330 டிஎம்.சி. - ஒரு டி.எம்.சி. என்பது ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர். இதில்பாதிவழிந்தோடிவிடுவதாகவேவைத்துக்கொள்வோம். மீதியை நாம் நீர்நிலைகளில் சேமித்திருக்கலாம் - நல்ல திட்டங்கள் நம்மிடம் இருந்தால். சொல்லுங்கள், அந்தத் தண்ணீர் எங்கே போனது? சென்னையின் ஒரு மாத நீர்த் தேவையே ஒரு டி.எம்.சி.தான். இவ்வளவு தண்ணீரை வீணடித்துவிட்டுநாம்வறட்சி என்று சொல்வதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? சென்னையில் பெருமழை வெள்ளம் ஏற்பட்ட போது, இன்னும் பத்தாண்டுகளுக்குச் சென்னையில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்காது என்றெல்லாம் பேசப்பட்டது. முரண்பாடாக நாம் தொடர்ந்து தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்கிறோம். அந்தமழைநீரை முறையாகச்சேகரித்திருந்தால்நான்கைந்துஆண்டுகள்நமக்குநீர்ப்பற்றாக்குறை இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அந்த மழைநீரை நாம் எங்கே சேகரித்தோம்?

2015ஆம்ஆண்டுமழையின்போதுமட்டும்நாம்300டி.எம்.



சி. தண்ணீரைக் கடலில் கலக்க விட்டோம். இவ்வளவு தண்ணீரையும் சேமிப்பதற்கு நம்மிடம் இன்னமும்கூடப் போதிய நீர்நிலைகள் இருக்கின்றனவா? ஏனென்றால், கடந்தகாலங்களில் ஏராளமான நீர்நிலைகளை நாம் ஆக்கிரமித்துவிட்டோம். ஆக்கிரமிக்கப்பட்ட நீர்நிலைகளின் கதை பெரும் கொடுமை.ஆனால்,இன்னும்மிச்சம்இருக்கும்நீர்நிலைகளைத் திட்டமிட்டுப்பராமரித்தாலேநம்மால்கணிசமானஅளவுக்குத் தண்ணீரைச் சேமிக்க முடியும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் மட்டுமே 3ஆயிரத்து 600 ஏரிகள் உள்ளன. விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகர எல்லையில்உள்ளஅரக்கோணத்தையும்சேர்த்துக்கொண்டால் 4ஆயிரத்து 100 ஏரிகள். பிரச்சினை என்னவென்றால், இவற்றில் எத்தனை ஏரிகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, மதகுகள், கரைகளை எல்லாம் முறைப்படுத்தித் தயார் நிலையில் வைத்திருக்கிறோம் என்பதுதான்.

**நீர்நிலைகளைத் தூர்வாருவதாக வருடந்தோறும் அரச அமைப்புகள் சொல்கின்றனவே?**

தூர்வாருவதற்காகப் பெரும் பணம் செலவழிக்கிறோம் என்பது உண்மை. ஆனால், முறையாகத் தூர்வாரப்படுகிறதா என்பது கேள்விக்குறிதான். எனக்குத் தெரியக் கடந்த 30 ஆண்டுகளில் ஏரிகளைத் தூர்வார மட்டும் ரூ.20 ஆயிரம் கோடிக்குமேல்செலவழிக்கப்பட்டிருக்கிறது. உலகவங்கிநிதி, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி, ஜப்பானிய வளர்ச்சி முகமை, ஐரோப்பியப்பொருளாதாரச்சமூகம் ஆகிய அமைப்புகளின் நிதிகள், இவை தவிர சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதிகள், அரசின் நிதிகள்... இவ்வளவு பணமும் ஏரிகளுக்குள்சென்றிருக்கிறது.ஆனால்,ஏரிகளின்நிலைஎன்ன? ஏரிகள் நல்ல நிலையில் இருந்தால் ஏன் நாம் குவாரிகளில் தண்ணீர் எடுக்கிறோம்? இதற்கான பதில் எளிமையானது. குவாரி பள்ளமாக இருக்கிறது. ஏரியோ மைதானம்போல் இருக்கிறது. மழைநீரைச் சேகரிப்பதற்கு ஏரிகளைவிடச் சிறந்த அமைப்பு இருக்க முடியாது. ஆனால், மைதானங்களைப் போல ஏரிகள் இருந்தால் அவற்றில் எப்படித் தண்ணீர் நிற்கும்?

**பணிகள் முறையாக நடப்பதில்லை என்று சொல்கிறீர்களா?**

திட்டமிடலே முறையாக நடப்பதில்லை என்று சொல்கிறேன். இவ்வளவு பெரிய தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்கிறோம். சென்னையில் ஒவ்வொரு நாளும் மக்கள் 45 மணி நேரம் தண்ணீர் எடுத்துவரச் செலவழிப்பதையும்மாத வருமானத்தில் 20தொடக்கம் 30சதவீதம் வரை தண்ணீருக்காகச் செலவழிப்பதையும் பார்க்கிறோம். தமிழகம் முழுவதுமே நிலைமை மோசமாக இருக்கிறது. இந்த அனுபவங்களிலிருந்து என்ன பாடம் கற்கிறோம்? ஒரு கேள்வி கேட்கிறேன், அடுத்த ஒரு மாதத்தில் நல்ல மழை பெய்து தண்ணீர் பெருக்கெடுக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதைச் சேகரிக்கவும் சேமித்துவைக்கவும் நாம்தயாராகஇருக்கிறோமா?எந்தநிலையில் நம்முடைய நீர்நிலைகள் இருக்கின்றன? இதுதான் இப்போது நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான கேள்வி. தற்காலிகத் தீர்வுகளைத்தான் நாம் தேடுகிறோம்.

**தற்காலிகத் தீர்வுகளும் அவசியம்தான் இல்லையா? உடனடி நீர்த்தேவைக்கு என்னதான் செய்வது?**

தற்காலிகமாகப் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் உள்ள நியாயம் புரிந்துகொள்ளக்கூடியது. ஆனால், சமாளிப்பதையே தீர்வு என்று நம்பிவிட்டால் அது ஆபத்து! இப்போது சென்னையின்தண்ணீர்த்தேவையைச்சமாளிக்கப்பக்கத்து மாவட்டங்களின் கிராமங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டுவருகிறீர்கள். இந்த ஒரு முறையோடு இந்த சமாளிப்பை நிறுத்திக்கொண்டால்நல்லது. ஆனால், இது ஒருதீர்வுஎன்று நீங்கள் நினைத்துக்கொண்டால் என்னவாகும்? இவ்வளவு தண்ணீரையும்நீங்கள் கிராமங்களிலிருந்து எடுத்தால், அந்தக் கிராமங்களின் நீராதாரம் என்னவாகும்? விவசாயம் என்பதே அங்கு எதிர்காலத்தில் அழிந்துபோகும். தவிர, அங்கேயும் நீராதாரம் வற்றிப்போகும்.

**அப்படியென்றால், வேறு என்ன தீர்வை நீங்கள் சொல்வீர்கள்?**

பிரச்சினைக்குஉடனடித்தீர்வுகளைக்கேட்கிறீர்கள். இருந்தாலும் சொல்கிறேன், ஏன் உங்கள் கண்களுக்கு மறுசுழற்சி முறை என்ற ஒன்று புலப்படவே இல்லை? கழிவுநீரை நாம் மறுசுழற்சி செய்வதில்லை. மறுசுழற்சியைத் அதிகப்படுத்த வேண்டும். மறுசுழற்சி மூலம் கழிவுநீரைக் குடிநீராகக்கூட ஆக்க முடியும். வெளிநாடுகளில் செய்கிறார்கள். மத்திய கிழக்கின் பல நாடுகளில் இதைத்தான் செய்கிறார்கள். இஸ்ரேல் மிகச் சிறந்த உதாரணம். நாம் கழிவு நீரை ஒரு வளமாகப் பார்ப்பதில்லை.

**ஆனால், மக்களிடம் மறுசுழற்சி முறை தொடர்பாக ஒரு அசூயை இருக்கிறது அல்லவா?**

அரசுதான் அதைப் போக்க வேண்டும். கடல் நீரை உப்புத்தன்மை நீக்கிக் குடிநீராகக் கொடுக்கிறோமே, கடல் நீரில் கலக்காத கழிவுகளா? இந்தச் சிந்தனையை அரசுதான் மக்களுக்குக் கொடுக்க வேண்டும். மறுசுழற்சி நீரைக் குறைந்த பட்சம் கழிப்பறைகளில்பயன்படுத்துவது,துணிதுவைப்பதுபோன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தினாலே எவ்வளவு தண்ணீர் தேவையைக் குறைக்க முடியும் தெரியுமா? ஒரு கட்டிடம் கட்டும்போதேமழைநீர்சேகரிப்புத்தொட்டி,கழிவுநீர்சுத்திகரிப்புத் தொட்டி இரண்டும் கட்டாயம் என்று சூழலை உருவாக்கினால், நாம் இவ்வளவு கஸ்ரப்பட வேண்டியதே இல்லை.

**நீளக்கடற்கரையைக்கொண்டிருக்கும்தமிழ்நாட்டுக்கு கடல்நீர்த் திட்டம் ஏன் செயற்படவில்லை?**

ஏதாவது பிரச்சினை என்றாலே, பெரிய பெரிய திட்டங்களைப் பற்றிப் பேசுவது நம்மூரின் சாபக்கேடுகளில் ஒன்று. கடல்நீரைக்குடிநீராக்கும் திட்டம் ஒரு மாற்றுத்திட்டம்தான். ஆனால், வேறுவழியேஇல்லாதநகரங்களுக்கானது அது. நாம்என்ன பாலைவனத்திலா இருக்கிறோம்? சென்னையில் மட்டும் சராசரியாக ஆயிரத்து 350 மில்லி மீற்றர் மழை பெய்கிறது. இப்படி ஒரு இடத்தில் கடல்நீரைக் குடிநீராக மாற்றுவது தேவையற்றது. நல்ல தண்ணீர்தான் மழையாகப் பெய்து கடலில் கலக்கிறது. மழைநீரைக் கடலில் கலக்க விட்டுவிட்டு, பிறகு அதை எடுத்து நல்ல தண்ணீராக மாற்றிக்கொடுப்பது வீண் வேலை அல்லவா? கடல்நீரிலிருந்து ஒரு லீற்றர் நல்ல தண்ணீர் உருவாக்க எவ்வளவு கடல்நீர் தேவைப்படும் தெரியுமா? குறைந்தபட்சம் 30தொடக்கம் 40லீற்றர்கள். அதைச்சுத்தப்படுத்தி நல்ல தண்ணீர் எடுத்துவிட்டால், மீதமுள்ள நீரில் உப்புத்தன்மை அதிகரித்துவிடும். அப்படி அதிகரித்த உப்புத்தன்மைகொண்ட நீரைக் கடலுக்கு ஒரு கிலோ மீற்றர் உள்ளே கொண்டுசென்று விட வேண்டும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. ஆனால், அதையெல்லாம் பின்பற்றுவார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. கரைக்கு அருகிலேயே விட்டுவிடுவார்கள். இப்படியேதினமும்செய்துகொண்டேஇருந்தால் என்னவாகும்? கடல் இறந்துவிடும். அதாவது, கடல் வாழ் உயிரினங்களுக்குத்தேவையானபிராணவாயுகிடைக்காது. அவற்றுக்கு உப்பு நீரை உறிஞ்சி, நல்ல தண்ணீரை எடுத்துக்கொண்டு உப்பைக் கடலில் மீண்டும் விடுவதற்கான சக்தி இருக்கிறது. ஆனால், கடலின் உப்புத்தன்மை அதிகரித்தால் அவற்றால்அதைச்செய்யமுடியாது. விளைவாக, அவற்றால் உயிர்வாழ முடியாது. இதனால், கடற்கரைச் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும். பொருளாதாரரீதியாகப் பார்த்தாலும்கடல்நீரைச்சுத்தப்படுத்துவதைவிடக்கழிவுநீரைச்சுத்தப்படுத்துவதேசிறந்ததேர்வு. ஆயிரம் லிட்டர் கடல்நீரைச்சுத்தப்படுத்தரூ. 46செலவாகும்என்றால்,அதேஅளவுகழிவுநீரைச் சுத்தப்படுத்த ரூ. 28தான் செலவாகும்.

உங்களுக்குத் தெரியுமா? ஜப்பான் போன்ற நாடுகளில் போதிய நிலம் இல்லாத சூழலில், நிலத்துக்குக் கீழே இன்றைக்கு நீர்த்தேக்கங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு ஏரிகள் எவ்வளவு பெரிய வரப்பிரசாதம்? சென்னைக்குள் மட்டும் 70 கோயில் குளங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் எவ்வளவு பெரிய வாய்ப்புகள்? வெள்ளநீர் வடிகால் தொட்டிகளில் சேரும் தண்ணீரை அடையாற்றிலும் கூவத்திலும் விடுவதற்குப் பதிலாக ஏரிக்கும் சின்னச் சின்ன குளங்கள் குட்டைகளுக்கும் திருப்பிவிடலாம்; சின்ன குளம் குட்டைகளில் விடலாம். இவைபற்றியெல்லாம் ஏன் நாம் யோசிக்க மறுக்கிறோம்? இந்தப் பார்வைக் கோளாறில் இருந்து முதலில் மாற வேண்டும். வெள்ளம் -எப்படியாவது அப்போதைக்கு நிலைமையைச் சமாளித்தால் போதும் என்று நினைக்கிறோம். இந்த அணுகுமுறை தவறு.

நன்றி - தி ஹிந்து

■ அனார்கலி






# பின்புலத்தில் எவருமில்லை



"கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை உடனடியாகத் தரமுயர்த்துமாறு கோரிநாம் முன்னெடுக்கும் உணவுதவிர்ப்புப்போராட்டம் எவரது தூண்டுதலின் பேரிலும் முன்னெடுக்கப்படவில்லை. இதன் பின்னணியில் எந்தச் சக்தியுமில்லை"

இவ்வாறு கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேசத்தைத் தரமுயர்த்தக் கோரிக் கல்முனையில் இடம்பெறும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் கல்முனை சுபத்ரா ராமய விகாரை விகாராதிபதி ரண்முத்து கல சங்கரத்ன தேரர் கூறினார்.

கடந்த 30 வருட காலமாக இந்த விடயம் தொடர்பில் கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிக்கு விடிவு கிடைக்க வேண்டுமென்பதே தமது உணவுதவிர்ப்புப்போராட்டத்தின் நோக்கமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**இன்னும் இலவுகாத்த கிளியின் நிலை தானா?**

# அதிர்ச்சி வைத்தியம்

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி மேற்படி உப பிரதேச செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் மூன்றாம் நாளான கடந்த புதன்கிழமை அங்கு வந்த கிழக்கின் தமிழ் அரசியல்வாதி ஒருவருக்கு அதிர்ச்சி வைத்தியம் ஒன்று காத்திருந்ததாம்.

குறித்த அரசியல்வாதி அங்கு உணவு தவிர்ப்பில் ஈடுபடும் ம்தப் பெரியார்களை அணுகிய போது இளைஞர் ஒருவர் வெகுண்டெழுந்து வந்தாராம்.

"உம்மை யார் இங்கு வரச் சொன்னது. இவ்வளவு காலமும் கோமாவிலா இருந்தீர்?" என்பன போன்ற கேள்விக் கணைகளை அரசியல்வாதியை நோக்கி ஆக்ரோசத்துடன் இளைஞர் தொடுக்க அரசியல்வாதி குழம்பிப்போனார். இளைஞரை ஆசுவாசப்படுத்தி அழைத்துச்சென்று உணவு தவிர்ப்பில் திரண்டிருந்தோர் அமரச்செய்தனராம்.

**தன் வினை தன்னைச் சுடும்.**

# கல்முனையில் கருமேகம்

தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவுடன் திகழ்ந்து வந்த கல்முனை மாநகரில் இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கத்தக்க கருமேகமொன்று சூழ்ந்து வருகின்றதா? எனும் அச்சம் பலரது மத்திலும் எழுந்துள்ளது.

பௌத்ததேரர் ஒருவர் தலைமையில் முன்னெடுக்கப்படும் கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் பல நாள்கள் கடந்துள்ள கொந்தளிப்பான பரபரஸ்பான நிலையில் கல்முனை மாநகர முஸ்லிம்கள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகப் போராட்டம் மேலும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ளது. போதாக் குறைக்கு இந்த இரு போராட்டங்களிலும் குளிர் காய முனைந்துள்ள அரசியல் கில்லாடிகளின் உரைகள் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்துள்ளதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

**கருமேகம் கலையுமா?**

# ஏட்டிக்குப் போட்டி

கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத்தை உடனடியாகத் தரமுர்த்துமாறு கோரி பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதகுருமாரும் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் முன்னெடுத்துவரும் உணவு தவிர்ப்புப் போராட்டமம் நான்காவது நாளை எட்டிய கடந்த வியாழக்கிழமை முதல் கல்முனை மாநகர முஸ்லிம்களும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். இனத்துவரீதியிலும் நிலத்தொடர்பற்றரீதியிலும் உருவாக்கப்படஎத்தனிக்கும் பிரதேச செயலகத்தைத் தடை செய்யக் கோரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இதுவென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கல்முனை மாநகர சபை முஸ்லிம் உறுப்பினர்கள், கல்முனைப் பள்ளிவாசல்கள் சம்மேளன உறுப்பினர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், உலமாக்கள், சமூகப் பிரதிநிதிகளெனப் பெருந்தொகையானோர் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கல்முனை சமாதான சதுக்கத்தில் இடம்பெற்ற இந்தப்போராட்டம் தொடருமெனத் தெரிவிக்கப்பட்டது.

**சமாதான சதுக்கமே உனக்கா இந்தக் கதி?**

# ஆதரவு ஆதரவு!

கல்முனை வடக்குத் தமிழ் உபபிரதேசசெயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி இடம்பெற்று வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துக் காரைதீவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டமொன்று கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

காரைதீவு மக்களின் கோர்ரிக்கைக்கு அமைய முக்கிய பிரமுகர்கள் பலர் இந்தச் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பில் பங்கு கொண்டுவருகின்றனர்.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே. ஜெயசிறில், காரைதீவு பிரதேச சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் வீ. கிருஷ்ணமூர்த்தி உட்பட்ப பலர் இதில் பங்கு கொண்டு வருகின்றனர்.

**போராடுவோம் போராடுவோம்**



# நான் அவனல்ல!

"கடந்த கால வரலாறுகள் தெரிந்தவன் நான். நிந்தவூர் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுக்குச் செய்த பேருதவிகளை மறக்கவில்லை. நான் தெரிவித்த கருத்து ஊடகங்களால் திரிபுபடுத்தப்பட்டது. என்னை இனவாதியாகக் காட்டச் சிலர் முயற்சிக்கின்றனர்."

இவ்வாறு காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபையில் தமது கருத்துக்குத் தெரிவிக்கப்பட்ட கண்டனம் தொடர்பில் விளக்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

**இதுதான் ஊடக தர்மமோ?**

# கல்முனையில் பொசன்

கல்முனை மாநகரில் பொசன் அலங்காரங்களும் நிகழ்வுகளும் இந்த முறை களை கட்டியிருந்தன. கல்முனை மாநகரம் முழுவதும் பௌத்த மற்றும் பொசன் கொடிகளால் வெகுவாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் முஸ்லிம்கள் சார்ந்த வர்த்தகர் சங்கங்கள் மற்றும் கல்முனை மாநகர சபையின் ஒருங்கிணைப்புடன் பொசன் நிகழ்வும் தன்சல் எனும் தானசாலை நிகழ்வும் கல்முனை சமாதான சதுக்கத்தில் நடைபெற்றது.

**என்னதான் அழுத்தமோ?**







# வாக்கு கேட்டு வராதீர்!

"பொய்வாக்குறுதிகளை வழங்கி அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை ஏமாற்றிவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இனிமேல் தமிழ் மக்களின் வாக்குகளைக் கேட்டு இங்கு வரவேண்டாம்.

இவ்வாறு கல்முனையில் இடம்பெற்றுவரும் உணவுதவிர்ப்பில் முக்கியநபராகக் கலந்துகொண்டுள்ள கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அழகக்கோன் விஜயரத்தினம் தெரிவித்தார். கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை ஒரு மாத காலத்துக்குள் தரமுயர்த்தி தருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அளித்த வாக்குறுதி என்னவாயிற்று? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

**வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை தான்.**


# அதிசய தீவு

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் உள்ள சொம்மாரோயி என்ற தீவு காலம் மற்றும் நேர அடிப்படையில் உலகின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஆர்க்டிக் வட்டத்தின் வடக்கில் அமைந்துள்ள இந்தத் தீவில் நவம்பரில் இருந்து ஜனவரி வரை இருட்டாகவே இருக்கும். அதேபோல் ஆண்டில் சில மாதங்கள் இதற்கு நேர் எதிரானதாக இருக்கும். அதன்படி தற்போது அந்தத் தீவில் சூரியன் மறையாத காலம். அங்கு கடந்த மாதம் 18ஆம் திகதி நள்ளிரவு சூரியன் மறையாத காலகட்டம் தொடங்கியது.

அடுத்த மாதம் (ஜூலை) 26ஆம் திகதி வரை 69 நாள்களுக்கு இப்படித்தான் இருக்கும். இதனால் அங்கு வசிக்கும் ம்க்களின் வாழ்க்கை நிறையவே மாறியிருக்கிறது. தங்களது வழக்கமான நேரத்தைக் கடைப்பிடித்தல் முறைகளிலிருந்தும் விடுபடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்களது தீவை உலகின் முதல் நேரமற்ற பிரதேசமாக அறிவிக்குமாறு கோரிக்கை வைத்துள்ளனர்.

**'வித்தியாசமான தீவு: வேறுபட்ட வாழ்க்கை...'**



எகிப்தின் முன்னாள் அதிபர் மொகமட் மோர்சி வழக்கு விசாரணையொன்றை எதிர்கொண்ட வேளையில் நீதிமன்றில் மயங்கிச் சரிந்து உயிரிழந்தார். அவர் கொல்லப்பட்டார் என்று மோர்சியின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

## ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்



# ஈரானில் இப்போது போர் முனை


மத்திய கிழக்கு என்றாலேயே போர்ப் பதற்றம் என்றாகிவிட்டது. அந்த வகையில் தற்போது அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையில் போர்மேகம் வலுவாக நிலை கொண்டுள்ளது. ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, அந்த நாட்டுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வருகிறது. இதனால் ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது. அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம் என்று ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. சமீபத்தில் ஓமன் வளைகுடாவில் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஈரானும், அமெரிக்காவும் ஒன்றின் மீது ஒன்று குற்றம் சாட்டின.


இதற்கிடையே ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் என்ற பிராந்தியத்துக்குள் நுழைந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்தது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா தனது, உளவு வானூர்தி பன்னாட்டு எல்லையில்தான் பறந்தது. அதை வேண்டுமேன்றே ஈரான் அரசு சுட்டு விழ்த்தியது எனக் குற்றம்சாட்டியது.


இதனைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஈரானை எச்சரிக்கும் விதமாகத் தனது கீச்சதப் ப்க்கத்தில் 'ஈரான் மிகப் பெரிய தவறு செய்து விட்டது' எனப் பதிவிட்டார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டவுடன் ஈரான் நாட்டில் உள்ள ரேடார் கருவிகள் மற்றும் ஏவுகணைத் தடுப்பு கருவிகளின் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார் என்றும் பின்னர் தனது உத்தரவை அவர் திரும்பப் பெற்றார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**'ஈரானை இரையாக்கப் போகிறது அமெரிக்கா...'**







# உலகில் மிகவும் சக்திவாய்ந்த நபராகத் தெரிவானார் மோடி

லண்டனில் இருந்து செயற்பட்டு வரும் பிரிட்டிஷ் ஹெரால்ட் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நபராக மோடி தெரிவுசெய்யப்பட்டார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் இருந்து செயற்பட்டு வரும் பிரிட்டிஷ் ஹெரால்ட் பத்திரிகை 2019ஆம் ஆண்டில் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நபர் யார்? என வாசகர்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தியது. இதற்காக உலகின் 25 நாட்டைச் சேர்ந்த தலைவர்களின் பெயர்கள் இந்தப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் இறுதிக்கட்ட போட்டிக்குத் தெரிவானார்கள். நிறைவாக 30.9 சதவீத வாக்குகளைப் பெற்று நரேந்திர மோடி உலகின் மிகவும் சக்திவாய்ந்த நபராகத் தெரிவு செய்யப்பட்டார். புடின் இரண்டாவது இடத்தையும், ட்ரம்ப் மூன்றாவது இடத்தையும், ஜின் பிங் நான்காவது இடத்தையும் பிடித்தனர்.

**'வாழ்த்துக்கள் மோடி...'**

# வழக்கமான சொதப்பல்



**கதை**

ரியோ ராஜ், சுட்டி அரவிந்த், ஆர்ஜே விக்னேஷ் மூவரும் ஆதரவற்றவர்கள். அரவிந்த், மருந்துக் கடையில் வேலை செய்கிறார். மற்றைய இருவரும் முழுநேரத் தொழிலாக இணையக் கானொலி அலைவரிசை (யூ ரியூப் சணல்) ஒன்றை நடத்துகின்றனர். இவர்களுக்குப் பெரும் பணக்காரரான ராதாரவியின் அறிமுகம் கிடைக்கிறது. தான் சொல்லும் 3 வேலைகளை மறுக்காமல் செய்து முடித்தால், அதிக பணம் தருவதாகக் கூறுகிறார் ராதாரவி. எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையில் இருக்கும் ரியோ ராஜ், விக்னேஷ் இருவரும் அந்தச் சவாலை ஏற்கின்றனர். இதற்காகத் தொலைக்காட்சி நிருபரான ஷிரின் காஞ்ச்வாலாவின் உதவியை நாடுகின்றனர். ராதாரவி அந்தப் பணிகளை ஏன் இவர்களிடம் கொடுத்தார்? இருவரும் அதை வெற்றிகரமாக முடித் தார்களா? இதற்கான விடைதான் மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

தொலைக்காட்சிப் பிரபலமான ரியோ ராஜ், விக்னேஷ் ஆகிய இருவரும் நகைச்சுவையில் குறை வைக்கவில்லை. சில அதியுச்ச காட்சிகளில் கஷ்டப்பட்டுக் கரையேறுகின்றனர். நிருபராக வரும் ஷிரின் காஞ்ச்வாலாவின் நடிப்புச் சிறப்பு. ராதாரவி வழக்கம்போல தனது அனுபவ முத்திரையைப் பதித்திருக்கிறார். படம் தொய்ந்துபோகும் நேரத் தில் தூக்கி நிறுத்துகிறார் நாஞ்சில் சம்பத். அவர் வரும் 20 நிமிடங்களும் கலகல. கடைசி அரை மணி நேரம் கொஞ்சம் இறுக்கான காட்சிகளுடன் நகர்கிறது. ராதாரவி ஏன் இப்படிச் செய்கிறார் என்பதைக் காட்ட ஒரு முற்காலக் காட்சி வருகிறது. அதன் மூலம் 'அநியாயத்தை வேடிக்கை பார்க்காமல் அனைவரும் தட்டிக் கேட்க வேண்டும்' என்ற செய்தியைச் சொல்ல முயல்கிறார் இயக்குநர். இது முக்கியமான செய்தி என்றாலும், சொல்லப்பட்ட விதத்தில் சினிமாத்தனம் மேலோங் குவது பலவீனம்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

ஷபீர் இசை, யு.கே.செந்தில்குமார் ஒளிப்பதிவு, வ்பென்னி ஆலிவர் படத்தொகுப்பு ஆகிய மூன்றும் 'ஓடு ராஜா ஓடு' என்று படத்தை ஓடவைக்கின்றன. இவர்களின் உழைப்புப் படம் முழுதும் பளிச்சிட்டுத் தெரிகிறது.

**பலம் - பலவீனம்**

தமிழ் இணையக் கானொலித் தயாரிப்பில் (யூ ரியூப் சணல்) பல்வேறு நிகழ்ச்சிகளை இயக்கிய கார்த்திக் வேணுகோபாலன் இந்தப் படம் மூலம் இயக்குநராக திரைத் துறைக்குள் நுழைந்திருக்கிறார். நகைச்சுவை கலந்து சமூக அக்கறைக்கு முக்கியத்துவம் அளித்துப் படம் எடுத்திருக்கிறார். ஒருவருக்கு ஒருவர் கலாய்த்துக் கொள்ளும் பாணியிலான நகைச் சுவை, நடப்பு சமூக, அரசியல் நிகழ்வுகளைக் கிண்டல் செய்வது, படம்பிடிக்கப்பட்ட விதம்.

காட்சியமைப்பு, சமூக அக்கறை சார்ந்த வசனங்கள், வசன உச்சரிப்பு ஆகியவற்றிலும் அவருடைய தொழில் முறைச் சாயல் (யூ ரியூப் சணல்) தெரிகிறது. தரமான நகைச்சுவை, வலுவான திரைக்கதை இல்லாமல் படத்தின் முதல் பாதி ஏனோதானோ என்று நகர்கிறது. மோதலில் தொடங்கி காதலில் முடியும் வழக்கமான நாயகன் நாயகி காட்சிகள், உண்ணாவிரதம் இருக்கும் அமைச்சரைத் தட்டிக் கேட்டுச் செய்யும் நாயகத்தனம் எனப் படத்தில் ஆங்காங்கே இயல்போட்டம் இல்லாமல்போகிறது. நாயகனும், நண்பர்களுக்கும் இடையில் நிலவும் வாழ்வியல் விளை யாட்டுத் தனமா, பொறுப்பின்மையா, முட்டாள்தனமா என் பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த தெளிவின்மை படத்தில் தொடர்கிறது.




# The farewell
# 'தி பேயார்வெல்'

அமெரிக்கா –சீனா என மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் உணர்வுப் பெருக்கிலான கதையாகத் திரைக்கு வருகிறது 'தி பேயார் வெல்' திரைப்படம்.

**கதை**

சீனாவில் பிறந்து அமெரிக்காவில் வளரும் இளம்பெண்ணுக்குப் பிறந்த வீட்டிலிருந்து அழைப்பு வருகிறது. சீனா செல்லும் அந்தப் பெண் அங்கு வீட்டில் நடக்கும் நிகழ்வுகளில் ஒளிந்திருக்கும் மர்மத்தைக் கண்டுபிடிக்கிறாள். குடும்ப ஆலமரத்தின் ஆணி வேரான பாட்டிக்குப் புற்று நோய் முற்றிய நிலையில், அவருக்கான இறுதி நாள்கள் எண்ணப்படுகின்றன. மூத்த வயதினரைச் சங்கடமின்றி வழியனுப்பும் சீனத்துச் சமூக வழக்கப்படி, மூதாட்டிக்கு நோய் குறித்த தகவல்களைக் குடும்பத்தினர் முழுவதுமாக மறைக்கின்றனர். அதேநேரம் வெவ்வேறு திசைகளில் சிதறியிருக்கும் குடும்ப விழுதுகளை அழைத்துப் பாட்டிக்கு விடைகொடுக்கும் விழா நடத்த முடிவு செய்கின்றனர். இதற்காக அவருடைய பேரன்களில் ஒருவருக்குப் போலியான திருமண ஏற்பாடு ஒன்றையும் நடத்துகின்றனர். இவை எதுவுமே அறியாது அந்த மூதாட்டி வழக்கம்போல் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வலம் வருகிறார். பாட்டி மீதான தீவிரப் பரிவு மற்றும் தனது சொந்த சுபாவம் காரணமாக இந்த நாடகத்துக்கு உடன்பட முடியாது அமெரிக்கப் பேத்தி தவிக்கிறார். உள்ளுக்குள் சோகத்தைப் புதைத்துக்கொண்டு மூதாட்டி முன்பாக மகிழ்ச்சியாக இருப்பதுபோல் ஒப்பேற்றும் குடும்பத்தினருக்கு எதிராக அவள் அடியெடுக்கிறார். அதைத் தொடர்ந்து நடக்கும் நகைச்சுவையும் உருக்கமும் கலந்த காட்சிகளே மீதிக் கதை.

**உண்மை கலந்த கதை**

சீனாவைச் சேர்ந்த பெண் இயக்குநரான லுலு வாங், அமெரிக்க வானொலித் தொடர் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தாக்கத்தையும் தனது சொந்தப் பாட்டிக்கு இறுதி வழியனுப்பல் நடத்தியதையும் இணைத்து இந்தத் திரைக்கதையை உருவாக்கியிருக்கிறார். இருவேறு கலாச்சாரப் பின்னணிகளில் உருவான திரைப்படம் என்பதால் திரைவிழாக்கள் பலவற்றில் பங்கேற்றதுடன், சீன மற்றும் அமெரிக்க ரசிகர்களிடம் எதிர்பார்ப்பையும் பெற்றுள்ளது. ஜூலை மாதம் 12ஆம் திகதியன்று அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.






# சுவிஸ் 22

## எனும் அழகிய நாடு!

■ ஏ.ஜே.ஞானேந்திரன்



விக்கிப்பீடியா' தரும்தகவலின் அடிப்படையில் கிட்டத்தட்ட 35ஆயிரம் வரையில் இலங்கைத் தமிழர்கள் சுவிஸில் வாழ்வதாகச் சொல்லப்படுகின்றது. இதில்10 வீதமானவர்களுக்குச் சுவிஸ் குடியுரிமை வழங்கப்பட்டு இருக்கின்றது. குறிப்பாக ஜேர்மன் மொழி பேசப்படும் பாசெல், பேர்ன், சூரிச் மாநிலங்களில் அதிகளவு தமிழர்கள் வாழ்கிறார்கள். வளைகுடாப் போர் வெடித்தபோது, அரபு நாடுகளிலிருந்து பலர் அகதிகளாக சுவிஸில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். (நானும் இப்படித்தான் தஞ்சம் புகுந்தேன்) இலங்கையில் உள்நாட்டுப்போர் வெடித்தமை காரணமாக, எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் சுவிஸில் தமிழ் அகதிகள் வருகை அதிகமாக இருந்துள்ளது. இங்கு இளம் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமும் தமிழும் கற்பித்த ஓர் ஆசிரியர் என்ற முறையில், இங்குள்ள இளம் சமுதாயத்தை நினைத்து நான் பெருமைப் படுகிறேன்.

மிக அக்கறையோடு கல்வி கற்கும் தமிழ் இளம் சமுதாயம், இப்பொழுதுசுவிஸ்மண்ணில்தனதுமுத்திரையைப் பதித்து வருகின்றது. தமிழர்கள் உழைப்பாளிகள் என்பதற்கும் இந்தச் இளம் சமுதாயம் விதிவிலக்காக இருக்கவில்லை. பிள்ளைகள் ஆர்வத்தோடு இங்குள்ள மொழியைக்கற்றாலும், தமிழ்ப்பெற்றோர்கள்பலர் இந்தமொழியைக் கற்பதில் பின்னிற்பது நான் கண்ட உண்மை.

### மொழியைக் கற்பிப்பதில் அரசு மும்முரம்

மாநில அரசுகள் ஜேர்மனி மொழியை இங்குள்ள வெளிநாட்டவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பல வழிகளிலும் உதவி வருகின்றன. இலவச வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. அகதிகளாக வருபவர்கள் வகுப்புகளுக்குப் போயாக வேண்டும் என்ற கட்டாயமும் உண்டு.

ஒரு புதிய சமுதாயத்தில் இரண்டறக் கலப்பதானால் அந்த நாட்டு மொழியைக் கற்றால்தான் முடியும். உரோமாபுரியில் நிற்கும்போது, உரோமனைப் போல் நடந்து கொள்ளக் கற்றுக் கொள் என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி. நம் மண்ணை விட்டு இன்னொரு மண்ணில் காலடி எடுத்து வைத்துவிட்டு, அந்த மண்ணின் மொழியைக் கற்பதற்குப் பின்னின்றால், வாழ்வில் எந்த வேலை வாய்ப்புகளும் தேடி வரப் போவதில்லை. ஆனால் புதிய இளைய சமுதாயம் இந்த விடயத்தில், தமிழருக்குப் பெருமை சேர்க்கும் விதமாகவே சுவிஸ் மண்ணில் வாழ்ந்து வருகிறது.

### தமிழர்களும் சுவிஸ் கலாச்சாரமும்

எண்பதுகளில் வர ஆரம்பித்து இன்று மூன்று தசாப்தங்களைக் கண்ட தமிழர்கள் இங்கு வாழும் நிலையில், சுவிஸ் கலாச்சாரத்தோடு இவர்கள் இன்னமும் ஒத்துப்





போகவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இளம் சமுதாயம் இந்த விடயத்தில் பெரிதாக மாறிவிட்டாலும், பெற்றோர்கள் தமிழ்க் கலாச்சாரத்தை விட்டு விலகுவதாக இல்லை. வைபவங்களுக்குச் செல்லும்போது தழையத் தழையச் சேலை உடுத்திக் கொண்டு, கழுத்தில் நகைகளுடன் தமது மகிழுந்துகளிலோ, அல்லது அரச தொடருந்துகளிலோ இவர்கள் பயணிப்பது வழமையான ஒன்றாகி விட்டது.

இந்து மதகுருமாரை வரவழைத்து, அம்மி மிதித்து அருந்ததி பார்க்காவிட்டாலும், தமிழ்க் கலாச்சாரத்துக்கு எந்த அப்பழுக்கும் இல்லாமல் மிகச் சிறப்பாக அதே சமயம் ஆடம்பரமாகத் திருமண வைபவங்களை நடாத்தி முடிக்கிறார்கள்.


### தமிழ்க் கடைகள் தாராளம்

தமிழ்க் கடைகள் மாநிலத்துக்கு மாநிலம் இங்கே தாராளமாக இருக்கின்றன. இவை இலங்கை, இந்திய நாடுகளிலிருந்து காரமான மிள காய்த்தூள் தொடக்கம், கருவாடு வரை இறக்குமதி செய்து விற்பனைக்கு விடுகின்றன. மலிவு விற்பனை என்ற பெயரில் சேலைகள், சல்வார் கமிஸ், நகைகள் அதிகளவில் விற்பனையா கின்றன.

தாராளமான பணப்புழக்கம் இங்கே இருப்பதால், எதையும் தயக்கமின்றி வாங்க இங்குள்ளவர்களால் முடி கின்றது. இப்படி எல்லாமே கடைகளில் கிடைப்பதால், 'ஊர்ச் சமையல்' மணம் வீடுகளில் கமகமக்கின்றது.

(தொடரும்)

# மகிழ்ச்சி



மனிதன் வாழ்வில் அடைய விரும்புவது
மட்டில்லா மகிழ்ச்சி- அந்த
மகிழ்ச்சிக்காய் அவனும் அனுதினம் எடுக்கிறான்
விட்டுவிடா முயற்சி
முயற்சி இல்லையேல் எவராலும் இயலாது
எட்டிவிட உயர்ச்சி- எதிலும்
உயர்ச்சி இருந்தால் மட்டுமே வாழ்வில்
கிட்டிவிடும் மகிழ்ச்சி

பணத்தாலும் பொருளாலும் பகட்டான உடையாலும்
பெறுவதல்ல மகிழ்ச்சி- மலர்
மணத்தாலும் உரைசந் தனத்தாலும் ஜவ்வாதும்
தருவதல்ல மகிழ்ச்சி
தனத்தாலும் உயரா சனத்தாலும் ஊழலும்
தருமல்ல மகிழ்ச்சி - நல்ல
குணத்தாலும் குறைகாணா
மனத்தாலும் என்றுமே வரும்நல்ல மகிழ்ச்சி

பொல்லாத வன்என்று பிறர்கூறு கையிலே
கிடக்கின்றதோ இகழ்ச்சி- கல்வி
கல்லாதவன் என்று இழித்துரைக் கையிலே
கிடப்பதுவோ தாழ்ச்சி- அறிவு
இல்லாதவன் என்று நகைத்திடும்- போதிலே
கிடைத்திடுமோ மகிழ்ச்சி- அறி
வில்ஆதவன் என்றே வாழ்த்திடும் போதிலே
கிடைப்பதுவே மகிழ்ச்சி

பறப்பதைப் பாய்ந்து பிடிப்பதற்கு நீ
துடிப்பது வீண்முயற்சி
இறப்பதை மனிதன் தடுப்பதற் கின்னும்
எய்தவில்லை வளர்ச்சி
இரப்பதை விடுத்து உழைப்பை நம்பிடில்
என்றுமே உயர்ச்சி- நீ
இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்வதே
இணையில்லா மகிழ்ச்சி

எல்லாமே விதியென இருக்காது செய்திடு
செயல்களிலே புரட்சி- நீ
எதுவந்த போதும் எதிர்கொள்ள வாழ்வில்
ஏற்படும் மறுமலர்ச்சி
பொல்லா மனிதரைப் புரிந்திட தினம்கொடு
மனதுக்கு நற்பயிற்சி- இவை
இல்லாது வாழ்ந்திட எண்ணிடில் எப்போதும்
கிடைக்காது மகிழ்ச்சி

■ டே.த.எட்வின்





# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

தொடர் 54

தாஸ் மாஸ்ரர்

**2001** ஆம் ஆண்டில் ஒரு புதிய நடவடிக்கையைப் பூஸா நிர்வாகத்தினர் எடுத்தனர். அதாவது கொழும்பு நீதிமன்றில் அந்த வாரத்தில் வழக்குள்ளவர்களின் பெயர்களைக் களுத்துறை 'ஏ' வாட்டில் அவர்களைக் கொண்டு சென்று தங்கவைத்து வழக்குக்குச் சமூகமளிக்கச் செய்வது. தினமும் களுத்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் சிறைச்சாலை வாகனத்தில் அவர்களையும் அனுப்பி வைப்பது. இந்தத் தற்காலிக ஏற்பட்டால் பூஸாவி லுள்ள கைதிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகினர். உதாரணமாக ஒருவருக்குத் திங்கட்கி ழமை வழக்கிருந்தால் அவர் அந்தக் கிழமை கொழும்புக்கு ஏற்றப்பட்டு ஞாயிற்றுக் கிழமை வரை களுத்துறை 'ஏ' வாட்டில் 23 மணித்தியாலயங்கள் அடைபட்டுக் கிடக்க வேண்டி ஏற்படும். உடுதுணியைத் தோய்த்துக் காய வைப்பதற்குக்கூட அங்கு வசதியில்லை. உணவு விடயத்திலும் களுத்துறை நிர்வாகம் இவர்களைக் கவனிப்பதில்லை. சிலவேளை பிற்பகல் 3 மணிக்குக்கூட அன்றைய மதிய உணவை வழங்குவார்கள். இவ்வாறு களுத்துறை நிர்வாகம் பாரபட்சம் காட்டுகின்றது என்று ஒரு தடவை பூஸா சிறைச்சாலை அத்தியட்சகரிடம் கூறியபோது அவர் அதற்கு நடவடிக்கை எடுத்தார். "நீங்கள் எனது பொறுப்பிலிருப்பவர்கள். உங்களுக்கு அங்கு அசௌகரியங்கள் இருந்தது எனக்குத் தெரியாது. இனிக் கொழும்புக்கு வழக்குக்கு அனுப்பும்போது எவரையும் களுத்துறையில் தங்க வைக்க மாட்டேன். இங்கிருந்து காலை 6 மணிக்கு வெளியில் எடுத்து மாலையில் வந்துவிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்கிறேன்" என்றார். பின்னர் அதன்படியே நடைமுறைப்படுத்தினார்.

★ ★ ★

களுத்துறை 'ஏ' வாட் என்பது சிறைக்குள் இருக்கும் இன்னோர் சிறை. கல்முனையைச் சேர்ந்த மேகன் என்ற கைதி ஒருவர் வேறு வாட்டில் சண்டை பிடித்ததற்காக ஏ வாட்டில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் இடைவிடாது கதைத்துக் கொண்டேயிருப்பார். எல்லா விடயங்களிலும் தலையிட்டு விவாதித்துக் கொண்டிருப்பார். எந்த விடயம் ஆனாலும் அவர் சொல்வது மட்டும் தான் இறுதித் தீர்ப்பு. நான் சிறைக்குள் சந்திந்த ஒரு வித்தியாசமான பிரகிருதி அவர். உடல் மெலிந்து வலித்துப்போய் இருப்பார். கதைக்கும்போது தொண்டை நரம்புகள் புடைக்கும் வகையில் சத்தம்போட்டுக் கதைப்பார். ஒரு தடவை சிறைச்சாலை மருத்துவமனை மருத்துவரிடம் மருத்துவத் தேவைக்குச் சென்ற இவருக்கு மருத்துவர் ஏதோ சொன்னாராம்.

அவர் சிங்களத்தில் கூறியது எனக்குப் புரியவில்லை, எனவே அதை என்னவென்று அறியும் படி என்னிடம் கேட்டார்கள். நான் ஒருதடவை மேகனுடன் சிறைச்சாலை மருத்துவமனைக்குப் போனேன். "இவருக்குக் குருதி அமுத்தம் கூடிக்குறைகிறது. குறைந்தது 3 நாள்களாவது இங்கு தங்கி நின்றால் தான் அதற்கு நான் சிகிச்சை அளிக்கலாம்" என்று கூறினார் மருத்துவர். அதை மேகனிடம் தமிழில் எடுத்துச் சொன்னேன். "அதெல்லாம் ஒன்றும் கூடிக் குறையாது என்று சொல்லுங்கோ" என்று மோகன் எனக்குச் சொன்னார். நான் அதைச் சொன்னதும், "இவருக்கு இப்போது உடல் இருக்கும் நிலையில் எந்த நேரமும் பாரிசவாதம் ஏற்பட வாய்ப்புண்டு" என்றார் மருத்துவர். "எது வந்தாலும் பரவாயில்லை நான் இங்கு தங்கி நிட்கமாட்டேன்" என்று சொல்லச் சொன்னார் மோகன். "சிறைச்சாலையில் ஒரு கைதியின் உடல் நிலை பற்றிக் கவனிக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. உங்களுக்கு ஏதாவது நடந்தால் அது எனது தலையில் தான் வரும்" என்றார் மருத்துவர். "அப்படி ஏதும் பயமென்றால் நான் கடிதம் எழுதித் தருகிறேன். என்னுடைய சாவுக்கும்; மருத்துவருக்கும் சம்மந்தம் இல்லையென்று" என்றார் மோகன். "ஏன்இந்த மனிதன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறார்.


விடு தலையாகிப் போகும்போது குடும் பத்துக்குப் பாரமாக அல்லவா இருக்கப் போகிறார்" என்று கவலை தெரிவித்தார் மருத்துவர். மேகன் மௌனமாக இருந்தார். பின்னர் நானும் அவருடன் கதைத்ததில் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சைபெறுவதற்கு ஒருவாறு சம்மதித்தார்.

★ ★ ★ ★

'ஏ' வாட்டில் ஒரு சிறிய வானொலிப் பெட்டி இருந்தது. அதில் செய்திகள் கேட்பார்கள். அதை எவ்வளவு குறைத்தாலும் அதிக சத்தம் கேட்கிறது என்று அதை ஒரு துணியால் சுற்றிமூடி வைத்துத்தான் கேட்பதுண்டு. இந்தச் சூழலில் ஒவ்வொரு நாளையும் எவ்வித பிரயோசனமுமின்றிக் கழிப்பது துன்பமாக இருந்தது. இரவில் கடுமையான நுளம்புத் தொல்லை. இந்த வாட்டுக்கு அருகில் சமையல் பகுதி இருப்பதால் நுளம்புப் பெருக்கம் அதிகம்.

அதேவேளை எல்லா வாட்களிலும் உள்ள குப்பைத் தொட்டிகளையும் இந்த வாட்டின் பின்புறமாகக் கொண்டு வந்து கொட்டுவதும் இந்த நுளம்புப் பெருக்கத்துக்கு இன்னொரு காரணம். அந்த வாட்டுக்குள் ஓர் இரவைக் கழிப்பது என்பது அதி உச்ச துன்பமாக இருக்கும். ஆனால், அங்கு வழமையாக இருப்பவர்கள், இருந்து பழக்கப்பட்டவர்கள் நுளம்பை ஒரு பிரச்சினையாகக் காட்டிக் கொள்வதில்லை.

(தொடரும்)



---

# இன்புறு வாழ்வுபெற...

கந்தர்மடம் அ. அஜந்தன்




சமூக நீரோடையில் கலந்து
நல் உறவதைத் தேடி வளர்த்திடு
கேடு நினைப்பவர் இருப்பின்
அவர்முன் கோடு கிளித்திடு

உள்ளங்கை நெல்லிக்கனிபோல்
ஆளுமையோடுன்னை
வெளிப்படுத்து
ஆரோக்கிய வாழ்வுக்காய்
சுயகருணையோடு
உன்னைப் புலப்படுத்து

தேவையெதுவென உணர்ந்து
ஆசை எதிர்பார்ப்பதை விலக்கிடு
இலக்குகள் இவையெனக்கொள்
அவற்றை விழுமியப்பாதையில்
ஓடவிடு
வாழ்க்கைப் பாதைமீதுந்தன்
நேரிய பார்வையைத் தொடுத்திடு
நுன்றியுணர்வூன்றி உந்தன்
மகிழ்சை ஆறாய்ப்பெருக்கிடு

வரிசை கட்டும் எறும்புபோல்
சுறுசுறுப்பாய் வாழ்ந்திடு
அர்த்தம் இதுவெனப்புரிந்து
உன்பணியில்
மூழ்கி முத்தெடு
திட்டமிட்டுந்தன் வாழ்வதை
கட்டமைத்து வாழ்ந்திடு
தோற்றம் நடத்தை வார்த்தை
இவற்றைக் கவனத்தில்
என்றும் வைத்திடு



தையிட்டி அ.இராசதுரை

# அதியுயர் காண்டத்து மேடைகள்

மேடை - 32



“றக் வரப்போகுது நாங்களெல்லோரும் வெளிக்கிட்டு றெடியாய் நிற்பம். ம்... ம்... கெதியாய் கெதியாய்...” அர்ச்சுணா தான் அந்தளவு உள்ளடக்கக் கவலைகளோடும் தன்னை மறந்தே சத்தம் போடுகின்றான். நேரம் 5.30 பாசிங்...

இரைச்சல் சத்தங்கள்... சாடை சரடையாய்க் கேட்கத் தொடங்கிப் பெரிய சத்தங்களாகி வடக்கு வீதியால் இரண்டு றக்குகளும், மற்றைய இராணுவ வாகனங்களும் கிழக்கு வீதியில் இறங்கவும்... கோபுர வாசலில் சொல்லி வைத்தது மாதிரியாய் இரண்டு யானைகள்! திடீரென்று இரண்டு மூன்றாகி! நான்காகி! ஐந்தாகி! வந்து வீதியில் இறங்கியும் விட்ட இராணுவ வாகனங்கள் அனைத்தும் நின்றடத்தைவிட்டு அகலவில்லை. எந்த இராணுவமும் கீழிறங்கி நிலத்தில் கால் வைக்கவில்லை. சந்திரனில் நீல் ஆம்ஸ்ரோங் முதல் முதலாய் கால் வைத்த ஐயிற்றத்தைவிடவும், பெரிய தெண்டிமையான கேஸ் போல் நிலமை இருந்துகொண்டிருந்தது.

“அலியா அலியா எனும் வார்த்தைகள் பன்பலாய் உச்சரிக்கப்பட யானைப் பயம் கீழிறங்காமலுக்கு வாகனங்களின் மேலே போக! யானையொன்று கோபுர வாசலில் முன்னாங்கால்கள் இரண்டையும் மடித்து முழங்காலில் குத்தி துதிக்கையை மேலே தூக்கி உயர்த்திப் பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்தும் காட்சி! ரைம் ஈவினிங் 6.35 பாஸ்... இரவு மெல்ல மெல்ல...

❁❁❁❁

நேரம் இப்படியே மிட் நைற் வண் ஒக்குளொக்கையும் தொட்டு விடு கின்றது. எல்லாம் போட்ட போட்ட இடத்தில் என்ற கணக்காய்... அந்தப் படியவே. பயண அலுவல்களைப் பற்றி ஒரு மயிரித்தினி தன்னும் பங்ஷன் பண்ண முடியாத அளவுக்கு யானைகளின் வரவு முற்றாக நின்றபாடில்லை. திடீர் திடீரென்று தோன்றுவதும் மறைவதுமாய் இருந்து கொண்டிருந்தது.

இந்த அரசின் சட்ட மூல ஓடரின்படிக்கு, ஒரு யானையையும் எவரும் சுட முடியாது! மீறிச் சுட்டால், பனிஸ்மென்ற்! இந்த இராணுவத்தினரும் பல பக்கங்களாலும் வந்து வந்து கொட்டுண்ட வண்ணமிருந்தாலும், ஒரு யானைக்கே வகை சொல்ல முடியாத வர்களாய் திணறித் தவித்துக்கொண்டுமிருக்கும் அகோரக் காட்சியமைப்பு! தாங்கள் முடிவெடுத்த அந்த அதி முக்கிய கருமத்தில் ஓரங்குலம் தன்னும் அசைய, அரக்க முடி யாதவர்களாய்... பெரும் அக்கப்பாடு பட்டுத் தொலைப்பதோடு நில்லாது... தங்களையும் தான் தொலைத்துவிடுமோ என்ற கெடிக் கலக்கத்தில்... பெரும் அந்தர பவனியில், கோவிலுக்கு அட்டமருகாய்ப் போகாமல், கிழக்கு வீதி ஈசான மூலைப் பக்கமாய்... தங்கள் அசைவுகளை வைத்துக் கொண்டிருந்தார்கள்... வெளிச்சங்க்ள் நெருப்புகள்... யானைகளுக்கு எட்டாப் பொருத்தம் என்பதோடு, எந்த வெளிச்சங்களும் வாகனங்களுக்குள்ளேதான்... பருவ நிலவு வெளிச்சமானது அவர்களுக்குப் பெரும் உதவியாய் இருந்து கொண்டுமிருந்தது.



“இந்த எலிபன்ற்ரானது மற்ற மற்றக் காட்டு மிருகங்களைப் போலல்லாது... ராட்சச பலம் கொண்ட மிருகம்! ஒரு யானைக்கு மதம் பிடித்தால், கதை வேறு! வேகமாய்ப் பறந்து வந்து கொண்டிருக்கும் மெட்றோ ரயில் வண்டியையும் எதிர்த்துப் புரட்டித் தள்ளிவிடும் மிடுக்கோடு போகும் இந்த மிருகத்தோடு இந்த மனித பலமானது ஒரு வெறும் தூசு!” இப்படியெல்லாம் டீப்பாகத் திங் பண்ணத் தொடங்கி அப்படியே வாகனத்தின் குஷன் சீற்றிலேயே ஒரு கோழியுறக்கம் போட்டும்கொண்ட தென்மராட்சிக் கேணல் யானைப் பயத்தில் திடுக்கிட்டு விழித்துக் கொண்ட போது ரைம் அதிகாலை 4.30ஐப் பாஸ் பண்ணி விடுகிறது...

(தொடரும்)

# சொந்த மண்ணை முத்தமிட்டு...



எண்பத்தாறில் ஒரு நாள்
ஏதிலிகளாய்ப் புறப்பட்டோம்
வட்டமடித்தன வானத்தில் வல்லூறுகள்
கொட்டமடித்தன துப்பாக்கிச் சன்னங்கள்

சடசடவென்க் குண்டுகள் பறந்திட
படபடவெனவே நெஞ்சம் துடித்திட
மளமளவெனவே கிடைத்ததை அள்ளி
தடதடவெனவே ஓடியே வந்திட்டோம்

அகதி என்ற பெயர் சுமந்து
அனுதினமும் நொந்து நின்றோம்
சகதி மிகு போருக்குள்
சடுதியாய் நாம் சிக்குண்டோம்

ஊரான ஊரழிந்தோம்
பாராளும் பண்பிழந்தோம்
தயாள குணம் நிறைந்த
வயாவிளான் தனையிழந்தோம்

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும்
ஆகாய விமான நிலையமும்
தோலைகட்டி நெல்லிரசமும்
தொலைதூரம் போயினவே

கல்லடிவேல் கல்விச்சாலை
பல்லோர் போற்றிடும் ஆலயங்கள்
தேவநற்கருணைத் தேவாலயங்கள்
பாலத்தின் சுமைகளாய்ப்
பறிபோயினவே

ஊர் திரும்ப முடியவில்லை
ஊற்றெடுக்கிறது பேராசை
ஓய்ந்துவிட்டது போரோசை
மாய்ந்து போனது உயிராசை

வாழ்வின் ஒளியாய் செம்மண்ணும்
பசிபோக்கிடும் நன்னீரும் இழந்து
முகாம்களில் முகம் புதைத்து
முகவரி தொலைத்துவிட்டோம்

ஆமையாய், ஊமையாய் வாழ்ந்து
அடிமையாய், குடிமையாய் ஒடுங்கி
நெடுமையாம் காலம் விழித்து
கடுமையாய்க் கனல்கிறது நெஞ்சம்

உயிர் பிரியும் வேளைதனில்
சொந்தமண்ணை முத்தமிட்டு
சொந்தங்கள் புடைசூழ
சொர்க்க லோகம் செல்ல வேண்டும்

என்னிறுதி ஆசைதனை
நிறைவேற்றி வைப்பவர் யர்?
கடவுள்தான் கண்திறந்து
கருணை தனைக் காட்டிடாரோ?

திருமதி கிருஷ்ணவேலி சிங்கராஜன்.



யோ.சாதுரியன்

# 2242 இல் s.a.t-2212-8

யாழ்.நகரம் இயந்திரமயமாக இயங்கிக் கொண்டிருந்தது. காரைநகர் தொடக்கம் கம்பகா வரையான 'மெட்றோ' ரயில் மணிக்கு 600 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்துக் கொண்டிருந்தது. காலை உணவாக இரண்டு மாத்திரைகளை எடுத்து வைத்துவிட்டு எனது மனைவி தனது அலுவலகத்துக்கு 'மெட்றோவில்' பறந்துவிட்டாள். நான் எனது ஒன்பது வயது மகனை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரியில் இறக்கி விட்டு எனது அலுவலகத்துக்குப் போக வேண்டும். எனது வீட்டின் மேல் தளத்தில் உறங்கிக் கிடந்த என்னுடைய பறக்கும் மகிழுந்துக்கு உயிர்கொடுத்து இயக்கியவாறு, தொடுதிரை மூலம் எனது மகனுக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். அவசர அவசரமாகத் தயாரான அவனும் கல்லூரி போவதற்காக என்னுடைய பறக்கும் மகிழுந்தில் பாய்ந்தோடி வந்து ஏறினான்.

⊙⊙⊙⊙

இன்றைக்கும் வான வீதியெங்கும் போக்குவரத்து நெரிசல். என்ன காரணம் என அறியமுற்பட்டபோது, பலாலி முனசிங்க விண்வெளி நிலையத்தில் இருந்து செவ்வாய்க்குப் பயணிகளை ஏற்றிச் செல்கின்ற விண்கலம் வரத் தாமதமானதால் மேற்படி நெரிசல் ஏற்பட்டது என்று அறிய முடிந்தது.



வானுயர்ந்த கட்டடங்களையும் சிலைகளையும் இரசித்தவாறு எனது மகன் படிக்கின்ற, குருநாகலில் இருக்கின்ற மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரியில் அவனை இறக்கிவிட்டு, மீண்டும் நீர்கொழும்புக்கு மேலாகப் பறந்து சமுத்திரத்துக்கு அடியிலுள்ள எனது வேலைத்தளமான நன்னீர் ஆராய்ச்சிக் கூடத்துக்குள் செல்வதற்காக மகிழுந்தை அவசரமாகச் செலுத்தினேன்.

என்னைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டும். எனது பெயர் S.A.T. 2212-8. என்ன குழப்பமாக இருக்கிறதா? நான் இப்பொழுது 2242ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருக்கிறேன். இப்போது தந்தையின் பெயரின் முதல் எழுத்து, அடுத்துப் பிள்ளையின் பெயரின் முதலெழுத்து, அதற்கடுத்து அவர் பேசும் மொழியின் முதல் எழுத்து, அடுத்துப் பிறந்த ஆண்டு, மாதம் என்பன சேர்ந்தே பெயர் வழங்கப்படும். அதன்படி எனது அப்பாவின் பெயர் சிவலிங்க(S). எனது பெயர் அருண(A). பேசுவ்து தமிழ் மொழி(T). நான் பிறந்த ஆண்டு 2212. மாதம் 8. இதே இப்போது நடைமுறையிலுள்ள பெயர் வைக்கும் சட்டம். அவசர அவசரமாக வான வீதியில் அபாய எச்சரிக்கை. சிவப்பு லேசர் மூலமான அவசர அறிவித்தல்கள். பறக்கின்ற அனைத்து எந்தவொரு போக்குவரத்து வாகனங்களையும் வான வெளியில் மிதந்துகொண்டிருக்கின்ற இறங்கு தளத்தில் உடனடியாக நிறுத்த வேண்டும். இப்பொழுது விடப்பட்டிருப்பது அப்படியான ஓர் அபாய எச்சரிக்கையே. எனது பறக்கும் மகிழுந்தை மிதக்கும் ஓடுதளத்தில் உடனடியாக இறக்கினேன். என்னைப்போன்றே பலரும் ஓடுதளத்தில் தத்தமது வாகனங்களை நிறுத்தினர். இப்படியான ஓடுதளம் ஒன்றில்தான் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் எனது மனைவியைச் சந்தித்தேன். அன்றும் இப்படித்தான். அவசர அறிவிப்பு. சிவப்பு லேசர்க் கதிர்கள் பாய்ச்சப்பட்டன. மிதக்கும் ஓடுதளத்தில் அவசர அவசரமாக எனது மகிழுந்தை இறக்கியபோது, எனது மகிழுந்து சற்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் நின்ற ஒரு கார் மீது இலேசாக மோதிவிட்டது. சேலை கட்டிய ஓர் இளம்பெண் அதற்குள்ளே இருந்து இறங்கினாள். பார்ப்பதற்கு ஒரு மாதிரியான தோற்றம். காரணம் பெண்கள் சேலை அணிந்த வழமை இருந்ததாக நான் கதைகளில் தான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுவும் இது வெள்ளைக்காரப் பெண் சேலையுடன்...! எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. வியந்து கொண்டு மகிழுந்தை விட்டு வேகமாக இறங்கி என்னை நோக்கி வந்த அவளிடம் '"ஐ ஆம் வெறி சொறி" என்றேன். பரவாயில்லை என்ற அவள், உராய்வுக்குள்ளான தனது காரின் பகுதியைப் பார்த்துவிட்டுச் சிரித்தபடியே உள்ளே போனாள். என்ன பரவாயில்லையா? இது யாழ்ப்பாணத்தில் சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு இருந்த பேச்சு மொழியாச்சே...! இதை இப்பொழுது இவள் சொல்லுகிறாள். திகைத்து நின்றபோதுதான் அவள் ஒரு கனேடியத் தமிழ்ப் பெண் எனவும், கலாசாரத்தைக் கண்ணாகக் கொண்டு போற்றுபவள் எனவும் அறிந்து கொண்டேன். அந்தச் சந்திப்புத் தான் இன்று எனது ஒன்பது வயது மகனைத் தந்த மனைவியாக அவளை ஆக்கியது. மீண்டும் பச்சை லைற். எனது பழைய எண்ணங்கள் பறந்தோட மகிழுந்தை இயக்குவதற்குத் தயாரானேன். சொற்ப நேரத்தில் அதுமீண்டும் வான வீதியில் சீறியது.

⊙⊙⊙⊙

நீர்கொழும்புக்கும் காலிக்கும் இடைப்பட்ட ஆழ்கடலில் தான் நான் பணிபுரியும் நன்னீர் ஆராய்ச்சி நிலையம் அமைந்திருந்தது. கடல் உப்பில் இருந்து எவ்வாறு நன்னீர் எடுக்கலாம் என்ற ஆராய்ச்சியில் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். பல வருடங்களுக்கு முன் கடல் நீரை நன்னீராக மாற்றியதால் இப்போது கடல் நீர் உறைநிலை உப்புடன் இருக்கிறது. இந்த உப்பில் இருந்தும் நன்னீர் எடுக்க முடியுமா? என்கிற ஆராய்ச்சியே இப்போது தொடர்கிறது. இதில் சுமார் நூறு லீற்றர் தண்ணீர் கிடைத்தால், கூட நான் பெரிய தொழிலதிபர் ஆகிவிடுவேன். ஆம் இப்பொழுது எனது அலுவலகத்துக்குச் செல்வதற்காக எனது மகிழுந்தைக் கடலுக்கு மேல் இறக்கி, அதே நேரத்தில் அதை நீர்மூழ்கியாக மாற்றுகின்ற பட்டினை அழுத்தினேன். மகிழுந்து உடனடியாக நீர்முழ்கியாக மாறிக் கடலுக்கடியில் விரைந்தது. சுற்றிலும் கண்ணாடிகளால் அமைக்கப்பட்ட எமது தொழிற்சாலைக்குள் இறங்கினேன். எனக்கு முன்னதாகவே சக ஊழியர்கள் அனைவரும் அலுவலகத்துக்கு வந்துவிட்டார்கள். எனது நண்பன் R.A.S.2214-4 மட்டும் என்னுடைய நேரத்துக்கே அங்கு வந்துசேர்ந்தான். அவனும் அநுராதபுரத்தில் இருந்து தனது மகனை செயற்கை இதயம் செய்யும் மருத்துவக் கல்லூரியில் இறக்கிவிட்டே வேலைக்கு வரவேண்டும். பத்து வயதுக்குட்பட்டோருக்கான பறக்கும் மகிழுந்து அனுமதிப்பத்திரம் என்பது எம்மிருவருக்கும் மிகவும் தேவையுடைய ஒன்றாக இருந்தது. அது பற்றி இன்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறப்போவது எங்கள் இருவருக்கும் ஒருவித மகிழ்வைத் தந்தது. நாங்கள் இருவரும் அதுகுறித்து அளவளாவிவிட்டு எங்கள் பணிகளில் மூழ்கினோம்.

⊙⊙⊙⊙

அலுவலகத்தில் நேரம் போவதே தெரியாது. உப்பில் இருந்து நன்னீர் எடுப்பதே எங்கள் ஒரே குறிக்கோள். அதற்காக விடாமுயற்சியுடன் வேலை பார்க்கிறோம். தற்போது பூமிக்குச் செவ்வாயில் இருந்தே குடி நீர் கொண்டுவரப்படுகிறது. அங்கேயுள்ள 'ஜோர்ச் புஷ்' நன்னீர்த் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு நானும் பல தடவைகள் முயற்சி செய்தேன். செவ்வாய்க்கு என்னால் போக முடியவில்லை. சந்திரனில் போய் இறங்கி, அங்கே சிலகாலம் பணி செய்துவிட்டு, மீண்டும் பூமிக்கே திரும்பினேன். செவ்வாய்க்குப் போகின்ற எனது ஆசை நிராசையாகிவிடுமோ என்கிற எண்ணம் எனக்குள் அவ்வப்போது எழுவதுண்டு.

பக்கம் பார்க்க 23



# 2242 இல்.....

(20பக்கத் தொடர்ச்சி)

நான் இப்போது யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் வாரத்தில் ஒரு நாள் கனடாவுக்குச் சென்று வருவது வழமை. இப்போது வேலையை முடித்துக்கொண்டு எனது மகிழுந்து மீண்டும் கடலைக் கிழித்துக்கொண்டு, வான வீதியில் பறந்தது. டி324 வான் வழியூடாக எனது மகிழுந்தைச் செலுத்தி வந்தேன். டி324 வான் வழியூடாக வந்தால், நாகதீபவில் இருக்கின்ற ஆயிரத்து 200அடிப் புத்தர் சிலையைக் காணலாம். அதன் அருகில் 45பாகையில் கிழக்கு நோக்கித் திருப்பினால், சுமார் 3 நிமிடங்களில் யாழ்ப்பாணம் கோட்டையில் இருநூறு அடி உயரத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தேச பிதாவின் சிலை தெரியும். கழுத்தில் சிவப்பு நிறச் சால்வை அணிந்து, தடித்த மீசையோடு கம்பீரமாக நிற்பார் இலங்கைத் தேச பிதா. இவர்தான் பிளவுபடவிருந்த நாட்டை முன்னொரு காலத்தில் ஒன்று படுத்தியவராம்! இவரது ஆட்சிக் காலத்தில் சிறீலங்காவில் தேனாறும், பாலாறும் ஓடியதாம்! வரலாற்றுப் புத்தகத்தில் படித்த ஞாபகம்! தேசபிதாவின் சிலையைக் கடந்த சில விநாடிகளில் எனது வீட்டின் மேல் தளத்தில் இறக்கினேன்.

மிகவும் குதூகலத்துடன் எனது மனைவி நின்றுகொண்டிருந்தாள். காரணம் தெரியவில்லை. மனம் காரணம் அறியத் துடித்தது. எனது மனைவி பூரிப்புடன் இருந்தால், கட்டாயம் சந்திரனில் இருந்து ஒன்லைன் மூலம் ஏதாவது ஓடர் பண்ணியிருப்பாள். கீரையும், எனக்குப் பிடித்த கத்தரிக்காயும் வரவைத்திருப்பாள். இன்றைக்கு எனது சமையல் 'ரேர்ன்' வேறு! ஒன்லைன் மூலம் கீரை வந்திருந்தால் அது பெரியதொரு மகிழ்வைத் தரும் விடயம்தான். பொறுத்துக் கொள்ளமுடியாமல் மனைவியிடம் கேட்டேன். நாங்கள் குடும்பத்துடன் நெப்ரியூன் கிரகத்தில் குடியேறுவதற்கு நுழைவிசைவு விண்ணப்பித்திருந்தேமல்லாவா? அது அனுமதிக்கப்பட்டுள்ளது - என்றாள். நானும் மகிழ்ச்சியில் திளைத்தேன். நன்னீர் அருவிகள், குடிப்பதற்கு வேண்டிய தண்ணீர், இயற்கையான பச்சைப் பசேலென்ற கிராமங்களை நான் கதைகளில் படித்திருக்கிறேன். நேரில் கண்டதே இல்லை. பல வருடங்களுக்கு முதல் சிறீலங்காவிலும் விவசாயம் நடந்தததாகக் கூறினார்கள். ஆனால் ஒரு துளிப் பச்சையைக்கூட நான் பிறந்ததில் இருந்து காணவில்லை. நெப்ரியூனில் எங்காவது குளிர்மையான பச்சைப் பசேலென்ற நிலம் இருக்கும் என்பது எங்கள் எண்ணம்.

அந்த மகிழ்ச்சியில் இன்றைக்கு இந்த நிமிடத்தில் பூமியில் என்ன நிகழ்ச்சிகள், செய்திகள் இருக்கின்றன என்பதை அறிவதற்காக ஜன்னல் காண்ணாடிகளில் பொருத்தப்பட்டுள்ள தொடுதிரை மூலம் செய்திகளை நோக்கினேன். வடக்கு இந்திய ஜனநாயகக் குடியரசும் தெற்கு இந்திய ஜனநாயகக் குடியரசும் வர்த்தக உடன்படிக்கை. இரண்டு நாட்டு அரச தலைவர்களும் மத்திய இந்திய அரச தலைவர் அலுவலகத்தில் குறித்த வர்த்தகம் தொடர்பாகக் கைச்சாத்திட்டனர். நல்லூர் தெய்யோ பெரகரா ஆரம்பம். 28நாள்கள் நடக்கும்.

முல்லைத்தீவில் அகழ்வாரய்ச்சியின் போது பல்லாயிரக்கக்கான மனித எலும்புகள் மீட்பு. அவை சுமார் 250 வருடங்களுக்கு முன்பு நுளம்பு தாக்கி இறந்தவர்கள் என்று நீதிமன்றம் தெரிவிப்பு. தோத்தா வெவ (பழைய இரணைமடுவாம்) சுற்றிப் பல்லடுக்கு மாடிகள் அமைப்பு. யாவாச்சேரியில் ஒட்சிசன் தயாரிக்கும் தொழிற்சாலையில் தீ விபத்து. தாம் வேண்டி நிற்கின்ற அதிகாரப் பகிர்வு தொடர்பாக நீதி வேண்டிச் சர்வ கிரகங்களின் தலைவர்களுக்கு ஈழத் தமிழர் அரசியல் சங்கம் முறைப்பாடு என்கிற இறுதிச் செய்தி.

## சொற்சிலம்பம் போட்டி இல: 575

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | ■ | 13 |
| | ■ | 14 | | | ■ | 15 | |
| ■ | 16 | | | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | | ■ | |
| 20 | | | | | ■ | 21 | |

அனுப்புபவர் பெயர்:........................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

........................................................................

கையொப்பம்:.....................................................................

## இடமிருந்து வலம்

1. வெகு சிறப்பு
4. ஒரு வகைத் தானியம்
6. நிற்பாட்டு
7. கொண்டை மீன்
8. வல்லமை
11. சிரசு
12. திறன்மிக்க தன்மை
14. தொண்டையில் இருந்து எழுவது
15. இருபால் இணைவில் உருவாவது
16. தீயைத் தொட்டால்...
17. மனைவி
18. வேள்வி
19. முக்கனிகளுள் ஒன்று
20. யானைக்கு மட்டும் உண்டு
21. ஒட்டுவது இதனால்

## மேலிருந்து கீழ்

1. நைவேத்தியம் செய்தது
2. பெண்கள்
3. வறுமைத் தன்மை
4. பூச்சாகப் படிவது
5. தூர அளவீடு
7. பண்பற்ற தன்மை
9. பர்வதம்
10. திறன்
13. மாமரத்திலும் ஒட்டி வளரும்
14. காதுக்குள் சேர்வதை இப்படிக் கூறுவர்
15. பாணம்
16. நலம்
17. கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது
18. ஏது
19. நட்பு அல்ல

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 573

இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) பஞ்சமாபாதகம் (7) மலையாளம் (8) சதிர் (10) சம்பவி (12) மின் (13) ஆம் (14) லைலா (15) பகல் (18) ஆண்டு (19) விவாகம் (21) கடப்பாடு (22)வேம்பு (23)திரிபுரா

### மேலிருந்து கீழ்

(1) பஞ்சமி (2) சமர் (3) மாலை (4) பாயாசம் (5) தளம் (6) கம்பலை (9) தின்பண்டம் (11)விலாசம் (13) ஆல் (16) கடுப்பு (17) அவா (18) ஆகவே (19)விடுதி (20)கம்பு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.575**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (01.07.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.575 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.07.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 573இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகள்து பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

சு.தரண்யா

தரம் 12ஐ.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

**2 ஆம் பரிசு**

தி.ரா.மாதவன்,

கரைப்பிரான் பிள்ளையார், கோவிலடி,

இல.43 பழம் றோட்,

ஆனைக்கோட்டை.

**3 ஆம் பரிசு**

செல்வி அனோஜினி,

யா/பாஷையூர் சென் அன்ரனீஸ்

றோ.க.மகளிர் வித்தி.

**4 ஆம் பரிசு**

சுதாகர் கார்த்திகன்,

தரம் 6 F,

யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**5 ஆம் பரிசு**

க.சாந்தலிங்கம்,

மே/பா.கீர்த்திகன்,

யா/சைவப்பிரகாச வித்தியாசாலை,

வடலியடைப்பு பண்டத்தரிப்பு.

## பாராட்டுப் பெறுவோர்

எம். ரூபா,

செட்டித்தெரு நல்லூர்,

யாழ்ப்பாணம்.

அ.அபிநயன்,

தரம் 9ஏ,

யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.


தினேஸ்குமார் சைளினி,

சோதி வேம்படி ஒழுங்கை,

மானிப்பாய்.

சொற்சிலம்பம் போட்டி 573 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி



செ.மகேஷ்

# அண்டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம் புரியல்லே!

"யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியல்லே. அட அண்டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம் புரியல்லே!" என்பதான பலரையும் கவர்ந்த பழைய சினிமாப் பாடல் ஒன்றை மென்மையான இசைகலந்து முணுமுணுத்தார் சிவபாதத்தார்.

அந்த முணுமுணுப்பு செல்லத்தம்பியரின் காதில் வீழ்ந்து அவரது சிந்தனையை உறுத்திக் கொண்டிருந்த பல உண்மைகளை நினைவுபடுத்தியது. எவரை எங்கே வேலைக்கு அமர்த்த வேண்டுமென்பதைத் தீர்மானிப்பவர் யார்? அவர் தீர்மானிக்கும் தீர்மானங்களின் அடிப்படையில் நியமனம் பெறும் ஒவ்வொரு தொழிலாளர்களும், பதவியாளர்களும் அந்தப் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களாக உள்ளனரா? என்றெல்லாம் நியமனங்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்பிய செல்லத்தம்பியர் சிலபொழுது குழம்பியே போனார்.

கல்வித்துறையெனினும் சரி, சுகாதாரத் துறையெனினும் சரி, பாதுகாப்புத் துறையெனினும் சரி, சமூகமுன்னேற்றத் துறையெனினும் சரி எல்லாத் துறைசார்ந்த பதவி நிலைகளிலும் பொருத்தமில்லாத பலர் நியமனம் பெற்று விடுகிறார்கள். அதனால் அந்தந்தத் துறைசார்ந்த, கடமையுணர்வற்ற நடவடிக்கைகளால் ஊழல்களும், உண்மையின்மையும் பெருகி நாட்டின் துறைசார்ந்த நிர்வாகம் சீர்குலைந்து விட்டதாகவே செல்லத்தம்பியர் எண்ணினார்.


மனித நேயம் மறந்து, போட்டி பொறாமையால் விளைந்த தொழில்களிலும், பதவிகளிலும் ஒட்டிக் கொண்டவர்களால் நாட்டுக்கு நன்மையில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட மனிதநேய உறவைப் பெருக்கும் வேலைகளின் மேன்மைக்கும் மதிப்பில்லை. வேலை தேடி அலைந்தவர்களுக்கு வேலை வழங்கும் வெற்றிடங்களாகக் கருதப்பட்ட இடங்களிலெல்லாம் யார் யாரோ நுழைந்து நியமனங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றனவோ!. யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியவில்லை!.

'தெரிந்த வேலையைக் கை விட்டவனும் மூடன்! தெரியாத வேலையைக் கை தொட்டவனும் மூடன்!' என்பார்கள் ஆனால் இங்கே பலரும் தமக்குக் கிடைத்த வேலையைப் பெயரளவில் தமதாக்கிக் கொண்டு எதையும் செய்யாமல் இருந்துவிடுகிறார்களோ! என்ற ஐயமும் ஏற்படவே செய்கிறது.

இந்த நிலை தொடரும் வகையில் உண்மைக்கும் நீதிக்கும் மதிப்பளிக்காத பலரின் செயற்பாடுகள் பெருகியுள்ளன என்பதாகச் செல்லத்தம்பியரின் ஆழ்மனதில் பதிந்துவிட்ட இந்த முடிவை எவராலும் அகற்றுவது கடினந்தான்! காரணம், நடந்து முடிந்த உள்நாட்டுப் போர் பற்றிய நீதிக்கான கோரிக்கையின் போதும் சரி, அத்துடன் எழுந்த காணாமலாக்கப்பட்டோரின் நீதிக்காக அழுதரற்றும் கவலைகள் தொடர்பிலும் சரி, கைது செய்யப்பட்டுக் காலங்கள் பல கடந்தும் விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்படாதோர் குறித்து வெளிவர மறுக்கும் உண்மைகள் குறித்தும் நீதி பேணப்படுவதை விரும்பாதவர்கள்தாம் அவ்விடங்களில் அதிகரித்திருக்கிறார்களோ? என்ற அச்சமே ஏற்படுகிறது.

குமுதினிப் படகுப்படுகொலை, மண்டைதீவு மீனவர் கொலைகள், செம்மணிப் படுகொலைகள் எனத் தொடர்ந்து நீண்ட படுகொலைகளின் பட்டியலில் உறைந்து போயுள்ள பொலிஸாரின் பாதுகாப்புப் பணியின் மீதில் அவர்களின் அருகிலிருப்போர் அனைவருக்கும் அச்சம் ஏற்படுவதாகவே செல்லத்தம்பியர் கருதினார். இவர்களின் பொருத்தமற்ற பாதுகாப்புப் பணியில் சந்தேகம் நிறையவே உள்ளது. உள்ளத்தில் தெளிவும் பாதுகாப்புப் பணியில் இன,மத வேறுபாடுகளைக் கருதாது செயலாற்றும் மனித நேயம் மிக்கவர்களைத் தெரிந்தெடுத்து நியமிப்பதென்பதும் கடினமானதே? செல்லத்தம்பியர் சிலபொழுது துணுக்குற்றார். கடவுளர்களைக்கூடத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவே சில கோமாளிகள் குத்தி முறிகிறார்கள். அவர்களை அங்கே நியமனம் செய்தவர்கள் யார்? கோவில்களையும் மக்கள் மனம் சாந்திபெறக் கும்பிடும் வணக்கத் தலங்களையும் கூறுபிரித்து இவர்கள் கூத்தாடுகிறார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ஆண்டாண்டு காலமாக நமக்குள் வளர்க்கப்பட்டு வந்த ஒற்றுமையை ஏனோ இவர்கள் குலைக்க நினைக்கிறார்கள். இவர்களின் நேர்மையற்ற நீதியற்ற செய்கைகளைப் பார்த்துக் கொண்டு பாராமுகமாக இருக்கும் கடவுளர்களின்மீதும் செல்லத்தம்பியருக்கு இப்பொழுது கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. மதங்கள்மீதும் அரசியல் சாயம் பூசும் அறிவற்றோரின் செய்கைகளே இவை! செல்லத்தம்பியர் மனம் நொந்தார். அரசின் நியமனங்களால் நாட்டில் நிகழும் எல்லாச் சம்பவங்களுமே வரலாறாகி எதிர்காலத்தை வடிவமைக்க உதவும் பாடங்களாக வேண்டாமோ! ஆனால் நாட்டைச் சூழ்ந்து வருத்தும் எதுவுமே இன்றைய அரசியலருக்குப் பாடமாக அமையவில்லையே, என எண்ணியபோது அவர் மனம் ஐயுற்றது.

நீதியும், நேர்மையும், உண்மையும், நன்மையும் எம்மவர் மத்தியில் எப்போது உதயமாகப் போகிறதோ!? படித்தவர்கள் என்றும் பதவிகளில் வீற்றிருப்போர் என்றும் பாராட்டுப் பெறும் நம்மவர்களின் செய்கைகள் ஏன் இவ்வாறு தடுமாறுகின்றன? ஏன் எதற்காக எமது நீதிவாழ் சுற்றாடல் இவ்வாறு அழுக்கு நிறைந்ததாக மாறி வருகிறது. யாரை எங்கே வைப்பது என்பதைத் தீர்மானிக்கும் வலிமை ஒவ்வொரு வாக்குச் சீட்டுக்கும் உண்டு என்கிறார்களே? இதில் எந்த அளவு ஜனநாயகம் உள்ளது. சிந்தித்துச் சிந்தித்தே மனம் சோர்ந்து போனது. செல்லத்தம்பியர் மௌனமானார்.



தமிழ்மதி

## இன்றைய விஞ்ஞான வளர்ச்சி

கல் உரசித் தீ கண்டு- இன்று
கணினியிலே வாழ்வுண்டு- என
நம்பும் உலகிலே எமக்கின்று
நன்மைகள் தருகிறது விஞ்ஞானம்

வானம் தீண்டும் தூரம்
வளர்ந்து விட்டதுவே விஞ்ஞானம்
விரைந்தே ஓடும் வாழ்வுகளில் - நல்
வினைகளைத் தருவதும் விஞ்ஞானம்

விஞ்ஞானம் விண்தனை ஆராய்ந்து
வசித்திட வேறிடமும் கண்டதுவே
வேலைகளை இலகுபடுத்தவே- பல
கருவிகளைக் கண்டுபிடித்ததுவே

எம் நாட்டில் இன்று
எந்த சிற்றி இல்லையெனினும்
'எலக்ரிசிற்றி' இல்லையெனில்
எதுதான் நடந்து முடிந்திடுமோ?

அண்டத்திலுள்ள நிலவொளி போல்
இன்று வீட்டுள் மின்னொளியே
என்றும் இந்த அறிவொளியே
அகிலத்தில் பரவட்டுமே!

வேலணையூர் ரஜிந்தன்.




காலாவதியான ஒளிப்படத்தில்
உருவங்களைத் தேடியபடி,
கண்களுக்குள் விம்பங்களை
கனத்த மனதுடன் சுமந்தபடி,
நீள்கின்ற வினாக்களுக்கு
குறுகிய பதிலும் கிடைக்காமல்...
நெஞ்சிலே ஏக்க.மிகுதியோடும்,
கண்ணீர் வற்றிய விழிகளோடும்...
தெருக்கள் எங்கும்
பதாதைகளைச் சுமந்து திரிந்து
நா வறண்டு கோசமிடுகிறாய்...
தள்ளாடும் வயோதிபத்திலும்
கண்மூட முன் பார்க்க வேண்டி
உயிரைக் கையிலேந்தி
மகனுக்காய்த் தவம் கிடக்கிறாய்...

ஏமாற்றங்களின் நீட்சி
முடிவிலியாகத் தொடர்கிறது!

ஏக்கமும் பரிதவிப்பும்
தொடர்கதையாய் மாறியது!

ஆனாலும் நீ,
நம்பிக்கொண்டுதான் இருக்கிறாய்;
கடவுளை அல்ல,
தீர்வு தீர்வு என்று காலம் கடத்தும்
ஏமாற்றும் அரசியல் நாடகத்தையும்
நல்லாட்சி என்ற மாய விம்பத்தையும்!




## வானலையில் தமிழ் ஒலி - 6

# வெரித்தாஸ் வானொலி

# "புலி வருகுதென்று காடையர்கள் கிலிகொண்டு ஓடினார்கள்"

Veritas
THE WORD. THE TRUTH.

தேவநாயகம் தேவானந்த்

கத்தோலிக்கத் திருச் சபையால் 1969ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டவெரித்தாஸ்வானொலி, ஜேர்மன் நாட்டுக் கத்தோலிக்கர்களின் நிதி உதவியோடு இயங்கியது. பிலிப்பைன்ஸ்நாட்டின்தலைநகர்மணிலாவிலுள்ள கியூசொன் நகரில் வெரித்தாஸ் வானொலி நிலையம் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத் தொகுதியை 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி; வத்திக்கான் பிரதிநிதியான கர்தினால் அந்தோனியோசமோரேதிறந்து வைத்தார். வெரித்தாஸ்வானொலியின்ஆசியக்குடையின் கீழ், வெரித்தாஸ் வானொலி தமிழ்ச் சேவையானது1975ஆம்ஆண்டுநவம்பர் மாதம் 1ஆம் திகதி தொடங்கப்பட்டது.

### 50ஆண்டு நிறைவு விழா

வெரித்தாஸ் வானொலி 17 ஆசிய மொழிகளில் தனது சேவையைவழங்கிவருகிறது.இதில்ஆன்மீகச்சேவையே முதன்மையான நோக்கமாகும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இதன் ஐம்பதாண்டுகால நிறைவுக் கொண்டாட்டங்கள்நடைபெற்றன.உயிர்ப்புப்பெருவிழா முடிவடைந்த தருணத்தில் தனது 50ஆவது ஆண்டு நிறைவை வெரித்தாஸ் வானொலி கொண்டாடியிருந்தது. 50ஆண்டுகளுக்குமுன், வெரித்தாஸ்கத்தோலிக்க வானொலிகுறித்தஎண்ணங்கள், கருவாகத்தோன்றிய புனித தோமா பாப்பிறைப் பல்கலைக் கழகத்தில் இந்தக் கொண்டாட்டங்கள் நடந்தன. .இதில் 'வெரித்தாஸ் வானொலி பதிவரங்கம்' திறந்து வைக்கப்பட்டது. அதில் வானொலி தொடர்பான முக்கியமான பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்தோடு வெரித்தாஸ் வானொலிக்காகப் பல்வேறு வழிகளில் உறுதுணையாக இருந்த தெரிவுசெய்யப்பட்ட 50 பேர் மதிப்புறுத்தப்பட்டனர்.

### உலகளவில் அதிகளவு தமிழ் நேயர்கள்

வெரித்தாஸ் வானொலி உலகளாவிய ரீதியில் அதிகளவு தமிழ் நேயர்களைக் கொண்டிருந்தது என்று பெருமைப்படுகிறது. அதிலும் இலங்கை நேயர்களே அதிகமாக இருந்தனர்.

2000ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 26ஆயிரம் நேயர் கடிதங்களை வெரித்தாஸ் வானொலி பெற்றுக் கொண்டதாக அறியமுடிகிறது. அவற்றில் அரைவாசி இலங்கைத் தமிழருடையவை என்பது கவனத்துக்குரியதாகும்.

வெரித்தாஸ் வானொலி இலங்கைத் தமிழர்களின் பெருவிருப்புக்குரிய வானொலியாக இருந்திருக்கிறது. குறிப்பாகத் தமிழர்களுக்கெதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்ட 1983ஆம் ஆண்டுக் காலகட்டம் மற்றும் இறுதிப்போர் நடந்த காலகட்டங்களில்; அதிலும் வன்னியில் வாழ்ந்த மக்களின் அபிமானத்துக்குரிய வானொலியாகவெரித்தாஸ்வானொலிதிகழ்ந்திருக்கிறது.

### ஒரு நேயரின் அனுபவப் பகிர்வு

ஒரு நேயராக, வானொலி ஆர்வலராக நொத்தாரீஸ் சி. இளங்கீரன் என்பவர் வெரித்தாஸ் வானொலியுடனான தனது அனுபவத்தை இவ்வாறு பதிவு செய்தார்.

"1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் குண்டுவெடிப்புநடந்து13இராணுவத்தினர்கொல்லப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராகக் கொழும்பிலும் தென்பகுதிகளிலும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அதன்போதுதமிழர்கள்உயிரிழப்புகளையும்சொத்திழப்புகளையும்எதிர்கொண்டார்கள். காடையர்களின் அட்டகாசங்களுக்குப்பயந்துதமிழர்கள் முகாங்களில்தஞ்சமடைந்தார்கள். இந்தச் சம்பவங்கள், கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றபோது விடுலைப்புலிகள் கொழும்புக்குள் ஊடுருவிவிட்டார்கள் என்ற வதந்தி பரவியது.

எல்லா இடங்களிலும் அல்லோல கல்லோலம். காடையர்கள் பயத்தில் ஓடி ஒளித்தார்கள். கொழும்புக்குள் புலிகள் ஊடுவவில்லை என்ற செய்தியை இலங்கை வானொலிஒலிபரப்புகிறது. அப்போதுஇந்தச்செய்தியின் விவரமறிய இலங்கை வாழ் தமிழர்கள் குறிப்பாக, வடக்குக் கிழக்குத் தமிழர்கள் ஆவலாக இருந்தனர்.

அகில இந்திய வானொலியும் இந்தச் செய்தியைச் சொல்லவில்லை. அன்று இரவு வெரித்தாஸ் வானொலியில் தான் அந்தச் செய்தி ஒலிபரப்பாகியது. 'கொழும்பில் புலிவருகுதென்று காடையர்கள் கிலிகொண்டு ஓடினார்கள்.' என்று அந்தச் செய்தியில் அறிவித்தார்கள்." என்கிறார் இளங்கீரன். இளங்கீரன் போன்று பலர் இவ்வாறான அனுபங்களை இன்றும் மனங்களில் சுமக்கிறார்கள். காலங்கள் பல கடந்தும் அந்த நினைவுகளை மீட்கிறார்கள்.

### வெரித்தாஸின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்கள்

கடந்த 44 ஆண்டுகளில் திரு. எம்.ஏ. சாமி, திரு. செபாஸ்டியன்,வணபிதா.ஜகத்காஸ்பர்,வணபிதா.சிங்கராயன், வணபிதா. டென்னிஸ்வைஸ்ஆகியோர்வெரித்தாஸின் வளர்ச்சிக்காகப்பணியாற்றியிருக்கிறார்கள்.திரு.எம்.ஏ. சாமி,வெரித்தாஸ்வானொலிக்கானநேயர்களைவளர்த்தெடுத்தவராவார்.

ஒருகேட்பவரின் வாழ்க்கையில் ஒருசகோதரர் பங்கேற்பாளராக வெரித்தாஸ் வானொலியை உருவாக்கிய பெருமை அவரைச்சாரும். வணபிதா. செபாஸ்டியன் வெரித்தாஸ் வானொலியின் செவிமடுப்பாளர்களின் எண்ணிக்கையை விரைவாக வளர்ச்சியடையச் செய்தார்.

வணபிதா ஜெகத் கஸ்பர், வெரித்தாஸ் வானொலியின் விரிவாக்கத்துக்கு வித்திட்டதோடு ஈழத்தமிழர்களின் மனதிலும்நீங்காதஇடத்தைப்பிடித்துக்கொண்டார். இவரதுகாலத்தில்வெரித்தாஸ்வானொலிமனிதஉரிமைகள் பிரச்சினைகளில்அதிகஅக்கறைசெலுத்தியது. குறிப்பாக ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான குரலாக ஒலித்தது.

இவரது காலத்தில் பலநாடுகளில் வானொலிநிலையங்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்தி வெரித்தாஸ் வானொலியைவிரிவாக்கம்செய்தவராகஜெகத்காஸ்பர்காணப்படுகிறார். அவரின் பின்னர் அருட்தந்தை சிங்காரயன் அந்த வேலையை அதே ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தொடர்ந்தார். (தொடரும்)



# கொடு...

டயானிகா சிறீராமராவ்

மஞ்சள் நிலவுதனில்
மரக்கிளையில் உட்கார்ந்து
கண்ணாலே காதல் கவிபாடும்
சோடி வெண்புறாக்களே
எனக்கும் காதலிக்கக் கற்றுக் கொடுங்கள்

வான்வெளியில் கதைபேசி
மேகமதை உரசி
சிறகடித்து திரிகின்ற
பச்சை வர்ணக் கிளிகளே
எனக்கும் சுதந்திரமாய்
வாழ சொல்லிக் கொடுங்கள்

பொறியியலே விளக்கின்ற கூடுதனில்
அகம் மகிழ வாழ்கின்ற
சின்ன உடலழகி தூக்கணாம் குருவியே
என் துணையோடு உறவாட
உன் கூட்டில் இடம்கொடு

என் இலட்சியத்தில் வென்றுவிட
நான் வைத்த கால்கள்
முன்னோக்கி நடந்துவிட

நான் சொல்லும் துறையெல்லாம்
தோள்கொடு நட்பே
விடிகின்ற அதிகாலைப் பொழுதுதனில்
நான் கண்ட கனா
என்னோடு கைசேர
வரம் கொடு!



# இந்த வாரம்

**23.06.2019 முதல் 29.06.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

பெரும்பான்மைகிரகங்கள்அனுகூல அமர்வில் உள்ளனர். அறிவாற்றல் மேம்படும். செயல்களில் மனிதாபிமானம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள்.புதியவீடு,வாகனம்வாங்கஅனுகூலம் உண்டு. குலதெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் அன்பு பாசம் மனதில் நெகிழ்ச்சியை தரும். தொழிலில் இடையூறு விலகி உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்பெண்கள்உறவினர்குடும்பத்தில் சுபநிகழ்ச்சிநடத்தஉதவுவர்.மாணவர்கள்; படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## இடபம்

சுக்கிரன், குரு, சந்திரன் நற்பலன் தருவர். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர் கருத்து பேதம் கொள்வர். புத்திரர் மனதில் நம்பிக்கை வளர தேவையானதை செய்வீர்கள். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.மனைவியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்வதால் வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மிதுனம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். பேச்சு, செயலில் நிதானம் வெளிப்படும். தம்பி தங்கை சொந்த பணிகளில் கவனம் செலுத்துவர். குடும்பத்திற்கான செலவு அதிகரிக்கும். புத்திரர் பிடிவாத குணத்தில் இருந்து விடுபடுவர். உடல் ஆரோக்கியம்சீராக இருக்கும். மனைவிவழிஉறவினர்அன்புபாசத்துடன் உதவுவர். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்புதேவைப்படும்.பணவரவுசீராகஇருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றுவர். பயணத்தால் இனிய அனுபவம்கிடைக்கும்.பெண்கள்இஷ்டதெய்வ வழிபாடுநடத்துவர்மாணவர்களுக்கு படிப்பில்கூடுதல்கவனம்தேவை.

## கடகம்

குரு, சுக்கிரன், புதன், சனீஸ்வரர் ராஜ யோகபலன் தருவர். புதிய உத்தியுடன் திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். பேச்சில் வசீகரம் இருக்கும். உறவினர் வருகையால்வீட்டில்மகிழ்ச்சிகூடும்.வாகனத்தின்பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் பெற்றோரிடம் நண்பருக்கு இணையாகப் பழகுவர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் செயல்கள் சிறப்பாக அமையும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில்பணிஇலக்கைநிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## சிங்கம்

சூரியன், புதன், செவ்வாய், ராகு அளப்பரிய நற்பலன் தருவர். செயல்களில்சமயோசிதம்நிறைந்திருக்கும். தாய்வழி உறவினர் அன்பு பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்க அதிர்ஷ்டகரமான சூழல் உருவாகும். புத்திரர் பெற்றோரின் அறிவுரையை தயக்கமுடன் ஏற்றுக்கொள்வர். வழக்கு, விவகாரத்தில் மாற்று உபாயம் தீர்வுக்கு வழிவகுக்கும். மனைவியின் ஆர்வம் மிகுந்த செயல்களை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய தாராள பணவசதி கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும்.

## கன்னி

சூரியன், புதன், சுக்கிரனால் நற்பலன் உண்டாகும். மனதில் புத்துணர்வு ஏற்படும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். கடந்த கால நற்செயலுக்கு பாராட்டு தேடி வரும். தாய்வழி உறவினர் அன்பு பாராட்டுவர். புத்திரர் அறிவாற்றல் சிறந்து படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பூர்வ புண்ணிய நற்பலன் துணை நின்று உதவும். நோய் தொந்தரவு குறையும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான அரசு உதவியை எளிதில் பெறலாம். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் பிள்ளைகளின் நலன் சிறக்க தேவையான பணிகளைச் செய்வர்.

## துலாம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர், கேது சுபபலன் வழங்குவர். இடம், சூழ்நிலை உணர்ந்து செயல்படுவீர்கள். முக்கியமான பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். உறவினர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும். புத்திரரின் எதிர்கால நலனுக்கு தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். மனைவி வழி உறவினர்கள் உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிவர்.

## விருச்சிகம்

புதன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். மனதில் இருந்த தயக்கம் விலகும். உறவினர்கள் மீது பாசம் அதிகரிக்கும். வாகனப் பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரர் நற்செயல்களால் சிறப்பு பெற உதவுவீர்கள். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு உடல்நலனுக்கு அவசியம். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். பணியாளர் பணியிடத்தின் சூழல் உணர்ந்து பணிபுரியவும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## தனுசு

சந்திரனால் நன்மை உண்டாகும். அன்புக்குரியவர் உங்களிடம் ஆலோசனை கேட்பர். திட்டமிட்ட பணிகள் குறிப்பிட்ட கால அவகாசத்தில் நிறைவேறும். அறிமுகமில்லாதவர்க்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரரின் ஆர்வமிகு செயல் தாமதமாகலாம். நண்பரிடம் கடனாக கொடுத்த பணத்தை கேட்டு பெறுவீர்கள். எதிர்ப்பாளரிடம் விலகியிருப்பது நல்லது. வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். மனைவி குடும்பநலனில் அக்கறை கொள்வார். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் செய்ய வேண்டாம். மாணவர்கள் அக்கறையுடன் படிக்கவும்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். குடும்பத்தில் சுபவிஷய பேச்சு நடக்கும். நீண்டதூர பயணங்களை தவிர்ப்பது நல்லது. புத்திரர் அறிவாற்றல் மேம்பட்டு செயல்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவர். எதிரி செய்த கெடுதல் முயற்சி பலம் இழக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்;.மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மனம் மகிழ்வீர்கள். தொழிலில் போட்டி குறைந்து உற்பத்தி விற்பனை பெருகும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று வருமானம் காண்பர்.பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசு பாராட்டு பெறுவர்.

## கும்பம்

கேது, சுக்கிரன், சனீஸ்வரரால் ஆதாய பலன் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்கள் வெற்றிப் பாதையில் செல்லும். நண்பர்களால் முன்னேற்றம் ஏற்படும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். அரசு வகையில் உதவி கிடைக்கும். புத்திரரின் எண்ணம், செயலில் குளறுபடி ஏற்படலாம். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். லாபம் சீராக வரும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.பெண்கள் குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாத்திடுவர்.மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்க்கும் உதவுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மீனம்

புதன், குரு, சுக்கிரனால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். மனதில் நல்ல சிந்தனை உருவாகும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும்.புத்திரர் பெற்றோர் சொல்லை ஏற்று செயல்படுவர்.அதிக நிபந்தனையுடன் சொத்தின் பேரில் கடன் பெறக் கூடாது. பகைமை குணம் உள்ளவரிடம் விலகவும். மனைவி அன்பு பாசத்துடன் ஆலோசனை வழங்குவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் பணம் சேமிப்பதில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவர்.



# உற்சாகமான வாழ்க்கை...!

1. மாதம் ஒரு புத்தகமாவது படியுங்கள்.
2. ஆரோக்கியம் தராத உணவு வகைகள் எவ்வளவு சுவையாக இருந்தாலும் உண்ணாதீர்கள்.
3. உங்களுக்கு என்ன வயதானாலும் பரவாயில்லை. விருப்பமான துறைகளில் நடக்கும் பயிற்சி வகுப்புகளில் பங்கெடுங்கள்.
4. வருமானத்துக்கான வழி மிகவும் முக்கியம். அதில் எந்த சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்.
5. முடிந்தவரைக் கடன்களைக் கட்டி விடுங்கள். வேண்டாத செலவுகளை நிறுத்தி விடுங்கள்.
6. விடியும் முன்னால் எழுந்து விடுங்கள். ஒருநாளின் அலுவல்களை முன் கூட்டியே திட்டமிடுங்கள்.
7. முப்பதுகளைக் கடக்கும் முன், மற்றவர்கள் சொல்லாமலே சர்க்கரை, உப்பு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைத்து விடுங்கள். முடிந்தால் தவிர்த்து விடுங்கள்.
8. காலை உணவைத் தவிர்க்காதீர்கள்.
9. நிற்கையில் நேராக நில்லுங்கள். பேசுகையில் கண்களைப் பார்த்துப் பேசுங்கள்.
10. புன்னகை முகமும் இதமான பேச்சும் உங்கள் இயல்புகளாகவே இருக்கட்டும்.
11. வாரம் மூன்று முறையாவது உடற்பயிற்சி செய்யுங்கள். முடிந்த வரை நடந்து செல்லுங்கள்.
12. சிறு குறிப்போ, கடிதமோ, கட்டுரையோ, பிழையில்லாமல் எழுதுவதில் கவனம் செலுத்துங்கள்.
13. ஒருவர் இல்லாதபோது அவருடைய சிறப்புகளையே பேசுங்கள்.
14. அரட்டைப் பேச்சுக்களை ஊக்குவிக்காதீர்கள்.
15. மற்றவர்களின் தவறுகளை மன்னியுங்கள். ஒரு போதும் மறக்காதீர்கள்.
16. உங்கள் வாழ்வின் ரகசியங்கள் முடிந்தவரை குறைவாகவே இருக்கட்டும்.
17. குடும்பம் என்கிற எல்லையைக் கடந்து, பொது அமைப்பு எதிலாவது ஈடுபடுங்கள்.
18. மாதம் ஒரு முறையாவது உங்கள் தகுதிகளையும் தவறுகளையும் பட்டியல் இடுங்கள்.
19. மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் மேல் உங்களுக்கு இருக்கும் அக்கறையை உணர்த்துங்கள்.
20. உங்கள் நேரத்துக்கும், மற்றவர்கள் நேரத்துக்கும் உரிய மரியாதை கொடுங்கள்.
21. உங்களிடம் இல்லாத தகுதிகள் இருப்பதாக நம்பவோ, நம்ப வைக்கவோ முயலாதீர்கள்.
22. உங்கள் திறமைகளை நீங்களே விவரித்துக் கொள்ளாதிர்கள். உரிய நேரத்தில் நிரூபியுங்கள்.
23. மேடைக் கூச்சம் இல்லாமல் இருங்கள்.
24. தண்ணீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்துவ தும் எதிர்காலத்துக்காகச் சேர்க்கும் சொத்துக்கள்தான்.
25. உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் மற்றவர்கள் மேல் திணிக்காதீர்கள்.

# பிரண்டையால் விளையும் பல்வேறு நன்மைகள்



நமது பாரம்பரிய உணவுப் பொருள்களில் பல்வேறு மருத்துவ குணங்கள் இருப்பதை நாம் கேள்விப்பட்டு இருப்போம். ஆனால் அதனை தற்காலத்தில் நாம் பயன்படுத்துவதில்லை. இதற்கு முக்கிய காரணம் அந்த பொருட்கள் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்டது. அவ்வாறு கிடைத்தாலும் அதனை எப்படி பயன்படுத்துவது என்பதும் நமக்கு தெரிவதில்லை.

இப்படி ஒரு சிறந்த மருத்துவ குணமுள்ள பொருளைப் பற்றி தான் நாம் இங்கு பார்க்க போகிறோம். நம்மில் பலருக்குக் குறைந்த வயதிலேயே முழங்கால் மற்றும் மூட்டு வலிகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனைச் சரி செய்ய நாம் மருத்துவர்களை அணுகி பல்வேறு சிகிச்சை களை மேற்கொண்டு வந்தாலும் முழுமையாக குணமடைவதில்லை. நமது பணம் தான் விரையம் ஆகிக் கொண்டிருக்கும்.

இத்தகைய இன்னல்களிலிருந்து விடுபட நமக்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது இந்த பிரண்டை. பிரண்டையில் உள்ள சுண்ணாம்பு சத்தானது நமது எலும்பு மச்சையில் திரவம் அதிகமாக சுரக்க உதவுகிறது. இதில் இருக்கும் கால்சியம் நமது எலும்புகளை மிகவும் வலிமை ஆக்குகிறது.

மேலும் நமது உடலில் மேலிருந்து கீழ் வரை உருவாகும் 300 விதமான நோய்க்கும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. இந்தப் பிரண்டை நமது சிறு குடலில் ஏற்படும் குறைபாடுகளைக் குணமாக்கும் சக்தி பெற்றுள்ளது.

பிரண்டையை உப்புடன் சேர்த்து சுமார் 300 மில்லி கிராம் தேனில் அல்லது நெய்யில் தினமும் சாப்பிட்டு வர உடலில் உள்ள கழிவுகள் வெளியேற்றபட்டு உடல் குறைப்பு ஏற்படுகிறது. சிறுகுடல் மற்றும் வயிற்றில் உள்ள வாயு முழுவதும் வெளியேறுவதை உடனடியாக உணரலாம்.பிரண்டையில் விற்றமின் சி அதிகம் உள்ளது. கால்சியம் சத்தை உடைய இது, ஈறுகளில் குருதிக் கசிவைச் சரிசெய்யும்.

முழங்கால் வலி,மூட்டு வலி நீங்க பிரண்டை துவையல் செய்து சாப்பிடுங்கள்..கால் வலியை போக்க பிரண்டை, மல்லிதலை, தூதுவளை, கறிவேப்பிலை சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால் உடல் சோர்வும் இருக்காது.

இத்தகைய பிரண்டை பொதுவாக கிராமங்களில் முட்புதர்களிலும், கள்ளிச் செடிகளில் தானாகவே வளரக்கூடியது. ஆனால் நவீனமயமாக்கல் என்ற பெயரில் இவைகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டுவருகின்றன. இத்தகைய மருத்துவ குணமுள்ள பிரண்டையை நாம் நமது வீடுகளில் தொட்டிகளில் வைத்து கூட வளர்க்க முடியும். இனிவரும் காலங்களிலாவது இவைகளை வளர்த்து நாமும் பயன்பெற்று நமக்கு அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் இதனைச் சொல்லிக் கொடுப்போம்.

# காய்கறிக் கொழுக்கட்டை

**தேவையான பொருள்கள்**

1. அரிசி மாவு - 1 கோப்பை
2. முட்டைகோஸ் துருவல் - 1/4 கோப்பை
3. கரட் துருவல் - 1/4 கோப்பை
4. மல்லித்தழை - 1/4 கோப்பை
5. மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி
6. இஞ்சி (நறுக்கியது) - 1 தேக்கரண்டி
7. பச்சை மிளகாய் -3
8. எண்ணெய் - தேவையான அளவு
9. உப்பு - தேவையான அளவு



**செய்முறை**

ஒரு சட்டியில் சிறிது எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் அதில் தண்ணீர், உப்பு சேர்த்து, கொஞ்சம் விட்டு கொதிக்கவிடவும்.

அதில் அரிசி மாவு சேர்த்துக் கட்டி பிடித்து விடாமல் கெட்டியாகக் கிளறி ஆற வைக்கவும்.

சட்டியில் சிறிது எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் முட்டைக்கோஸ் துருவல், கரட் துருவல், மல்லித்தழை, இஞ்சி, பச்சை மிளகாய், உப்பு சேர்த்துக் கிளறவும்.

கடைசியாக மிளகுத்தூள் கலந்து இறக்கவும்.

அரிசி மாவு கலவையில் சிறிது எடுத்து உருட்டிக் கிண்ணம் போல் செய்து அதில் காய்கறிக் கலவையை வைத்து மூடவும்.


அவையனைத்தையும் இட்லிச்சட்டியில் வைத்து ஆவியில் வேகவிட்டு எடுக்கவும்.

# அயோடின் குறைபாட்டின் அறிகுறிகள்

மனித உடலுக்கு தினசரி மிகக் குறைவான அளவே '150 மைக்ரோ கிராம்' அயோடின் தேவைப்படுகிறது. குறைவாகத்தானே தேவைப்படுகிறது. இது இல்லாவிட்டால் என்ன? மற்றச் சத்துகள்தான் நிறையவே இருக்கிறது என்று அலட்சியமாக இருந்தால் அவதி தான். முதலில் அயோடின் என்றால் என்ன என்று கேட்டால் பலரும் அது ஒரு வகையான உப்பு என நினைப்பதுண்டு. ஆனால், அது தவறானது. அயோடின் என்பது ஒரு வகையான சத்துப்பொருள்.

ஆறு, நதி, ஏரி போன்ற நீர்நிலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் இயற்கையாகவே அயோடின் அதிகமாகக் காணப்படும். குறிப்பாக, நீர்நிலைகளின் மணற்பரப்பி லும் அயோடின் ஏராளமாக இருக்கும். இந்த அயோடின் தான் கடல்நீரிலும் மிகுந்து காணப்படுகிறது. உப்பில் அயோடின் ஒளிந்திருக்கும் ரகசியம் இதுதான். பச்சைத் தாவரங்களிலும் அயோடின் உள்ளது.

இயற்கையான நீர் நிலைகளின் மூலமாக மனிதர்களுக்குக் கிடைக்க வேண்டிய அயோடின் சத்து பல நேரங்களில் கிடைக்காமல் போய்விடுகிறது. இதனால் அயோடின் சத்து குறைபாடு அதிகம் ஏற்படுகிறது. இதனால் பலவிதமான பாதிப்புகள் உருவாகின்றன. முக்கியமாக தைராக்ஸின் ஹார்மோன் சுரப்பதில் பாதிப்பு ஏற்படுவதால் தைராய்டு குறைபாட்டை உருவாக்குவது அயோடின் பற்றாக்குறைதான்.



சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் மனிதர்களின் உடல் உயரம் மற்றும் பருமனை நிர்ணயிப்பது இது தான். சிலர் உயரமாகவும், சிலர் குள்ளமாகவும், சிலர் பருமனாகவும் இருப்பதற்கு இந்த அயோடினே காரணம். மேலும் அயோடின் பற்றாக்குறை குழந்தைகளில் உடல் வளர்ச்சி மற்றும் மூளை செயல்பாட்டை மந்தமாக்குகிறது. இதனால், பள்ளிப் படிப்பில் செயல் திறன் குறைந்துவிடுகிறது.



# புலம்பல்

## எரேமியா எழுதிய நூல்

இறைவாக்கினர் எரேமியா தொடர்பாகவும் அவரின் படைப்புகள் தொடர்வாகவும் உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரியகாந்தியில் கடந்தவாரம் நோக்கினோர். இந்த வாரம் எரேமியாவின் படைப்புக்களின் பலராலும் விரும்பி வாசிக்கப்பட்ட புலம்பல் பற்றிப் பார்க்கலாம்.

எரேமியா எழுதிய நூல் 'புலம்பல்'. இது எருசலேமின் அழிவையும், மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட துயரத்தையும் பாடுபொருளாகக் கொண்டிருக்கின்றன.

எரேமியா எழுதிய நூல் 'புலம்பல்'. ஐந்து எபிரேயக் கவிதைகளால்ஆனது. துயரத்தின் விளிம்பில் ஒலிக்கின்ற பாடல்களாக இந்தக் கவிதைகள் இருக்கின்றன. இவை எருசலேமின் அழிவையும், மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட துயரத்தையும் பாடுபொருளாகக் கொண்டிருக்கின்றன.

**கண்ணீரால் நிரம்பிய நூல்**

விவிலியத்தில் உள்ள நூல்களிலேயே கண்ணீரின் ஈரத்தால் நிரம்பியிருக்கும் நூல் இதுதான். ஒரு தேசத்தின் நிலை கண்டு கண்ணீர் வடிக்கின்ற ஒரு 'இறைவாக்கினரின் வலிகள் இதில் வரிகளாய் இருக்கின்றன.

இந்த நூலில் உள்ள சில செய்திகள் எமது உயிரையும் உலுக்கி எடுக்கும் வலிமை கொண்டவை. இஸ்ரேல் முற்றுகையிடப்பட, வாழவே வழியில்லாமல் தாய் சொந்த குழந்தைகளையே கொன்றுதின்கின்ற செய்தியை வாசித்துவிட்டு அதிர்ச்சியடையாமல் கடந்து .செல்ல முடியாது.

எரேமியா ஒரு கவிஞர். எனவே துயரத்தையும், மக்களின் வலியையும், இயலாமையையும் கண்ணீரால் பதிவு செய்கிறார். இவருக்கு 'அழும் இறைவாக்கினர்' எனும் பட்டப்பெயரும் உண்டு.

இந்த நூலின் பாடல்கள் எருசலேமின் துன்பம், எரிசலேமின் தண்டனை, தண்டனைத் தீர்ப்பும் நம்பிக்கையும், வீழ்ச்சியடைந்த எருசலேம், இரக்கத்திற்கான இறைவேண்டல் எனும் சிந்தனைகளில் அமைந்துள்ளன. எபிரேய எழுத்துகள் இருபத்து இரண்டு. அதன் அடிப்படையில் இருபத்திரண்டு வசனாங்கள் என பாடல்கள் அமைந்துள்ளன. ஒரு பாடல் மட்டும் 66 வசனங்களோடு இருக்கிறது. ஒவ்வொரு எழுத்துக்கும் மூன்று வசனங்கள் எனும் கணக்கில்.

அழுகையையும், கண்ணீரையும் விவிலியம் ஊக்கப்படுத்தியே வந்திருக்கிறது. கண்ணீர் சரணடைதலின் அடையாளம், உடைதலின் அடையாளம், உணர்வின் அடையாளம். எபிரேயச் சிந்தனை கண்ணீரை ஆதரித்தது. கிரேக்கச் சிந்தனையே கண்ணீரை அவமானமாக்கியது.



**பாடல்கள்**

இந்த ஐந்து பாடல்களும் இலக்கிய நயத்தோடும், ஆன்மிக புரிதலோடும், உணர்வின் மொழியோடும் வடிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாடல் 'அவள்' எனும் கருப்பொருளில் அமைகிறது. நகரை, 'அவள்' என்றும், நகரிலுள்ள மக்களை 'எருசலேம் மகளிர்' என்றும் இந்த பாடல் குறிப்பிடுகிறது. இரண்டாவது பாடல், 'அவன்' எனும் பெயரில் அமைகிறது. இந்த துயரங்களு க்கெல்லாம் காரணமான அவன் யார்? இறைவனை மையப்படுத்தும் பாடல் இது. மூன்றாவது பாடல் 'நான், எனது' என தன்னிலைப்படுத்தும் பாடல். இது எருசலேமைப் பற்றிப் பாடுகிறது. நான்காவது பாடல் 'அவர்கள்' எனும் மையத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பாடல் 'நாம், நமது' எனும் பொருளில் அமைந்துள்ளது.

> “ எரேமியா எழுதிய நூல் 'புலம்பல்'. ஐந்து எபிரேயக் கவிதைகளால் ஆனது. துயரத்தின் விளிம்பில் ஒலிக்கின்ற பாடல்களாக இந்தக் கவிதைகள் இருக்கின்றன. இவை எருசலேமின் அழிவையும், மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட துய்ரத்தையும் பாடுபொருளாகக் கொண்டிருக்கின்றன. ”

**பாடல்களின் பார்வைகள்**

முதல் பாடல் அழிந்து கிடக்கின்ற நகரையும் நகரின் மக்களையும் பார்க்கிறது. பாவம் தான் இந்த அழிவின் காரணம். அது அவரை இன்னும் காயப்படுத்துகிறது. பாலை நிலம் போல வெற்றிடமாய்க் கிடக்கும் நகர் அவரை கண்ணீர்விட வைக்கிறது.


இரண்டாவது பாடல் இறைவனின் கோபம் கொதித்தெழுவதைப் பற்றிப் பாடுகிறது. கடவுள் பொறுமையுடன் காத்திருக்கிறார். ஆனால் மக்களுக்கு அது புரியவில்லை. பாவம் புரிகின்றனர். இனிய வாழ்வை இழக்கின்றனர். கடவுளின் தண்டனையை இந்த பாடல் பேசுகிறது.

மூன்றாவது பாடலை தன்னை மையப் படுத்தி எரேமியா எழுதியுள்ளார். எத்தனையோ மன வருத்தங்களைக் கடவுளுக்குக் கொடுத்தபின்னும் அவர் மக்களை முழு மையாய் அழிக்கவில்லை. அவர்களை வேறொரு நாட்டுக்கு அனுப்பும் வேலையை மட்டுமே செய்கிறார் என்பதே அவரது ஆறுதல். அதில் இறைவனின் இரக்கத்தை அவர் கண்டு கொள்கிறார்.

நான்காவது பாடல் மக்கள் மனம் திரும்ப வேண்டும் எனும் சிந்தனையின் அடிப்படையில் இருக்கிறது. ஏதேன் தோட்டத்தின் ஆதாம் ஏவாள் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு பாவத்தைப் பேசுகிறார். மனம் திரும்புதல் நிச்சயம் தேவை என்பதை புலம்பலாய் வடிக்கிறார்.

ஐந்தாவது பாடல் ஒரு செபம். ஒரு இறை வேண்டல். இறைவனின் இரக்கம் வேண்டுமென இறைஞ்சுகின்ற விண்ணப்பம். இறைவன் மனம் இரங்குவார் எனும் நம்பிக்கை இதில் இழையோடுகிறது.


**இயேசுவின் சிந்தனையும் எரேமியாவின் சிந்தனையும்**



எரேமியாவும், இறைமகன் இயேசுவும் பல இடங்களில் ஒரே சிந்தனையுடன் செயல்படுவதை அவரது வாழ்க்கையும், எழுத்துகளும் எடுத்துரைக்கின்றன. அதனால் தான் பல நூற்றாண்டுகளுக்குப் பின் 'என்னை மக்கள் யார் என சொல்கிறார்கள்' என இயேசு தன் சீடர்களிடம் கேட்டபோது 'சிலர் எரேமியா என்கின்றனர்' என்று சீடர்கள் பதில் சொன்னார்கள். இருவரும் சொந்த ஊரில் மதிக்கப்படவில்லை. இருவரும் ஆட்டுக்குட்டியோடு ஒப்பிடப்படுகிறார்கள். ஆலயத்தின் புனிதம் கெடுகையில், 'இந்தக் கோவில் உங்கள் பார்வையில் கள்வரின் குகையாகிவிட்டதோ' என இருவருமே கூறுகின்றனர்.

இந்த புலம்பல் நூல் பைபிளுக்கு மட்டும் உரியதல்ல. இன்றும் யூதர்கள் அபிப் (ஜுலை) மாதத்தின் ஒன்பதாம் நாள் இந்த முழு நூலையும் தொழுகைக் கூடங்களில் பாடிப் புலம்புவார்கள். காரணம் கி.மு. 586 இல் அதே நாளில் தான் எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது.

வியப்பான இன்னொரு விஷயம் என்னவெனில், அந்த தேவாலயம் புதுப்பிக்கப்பட்ட பின் இரண்டாவது முறையும் இடிக்கப்பட்டது. கி.பி. 70ஆம் ஆண்டில் அதே நாளில். பைபிள் வியப்பின் நூல். புலம்பல் அந்த வியப்பின் ஒரு துளி.



# விஜயின் அடுத்த படம் 'பிகில்'

'தெறி', 'மெர்சல்' படங்களுக்குப் பிறகு விஜய் - அட்லி கூட்டணி மூன்றாவது முறையாக இணைந்திருக்கும் படம் 'தளபதி 63'. இந்தப் படத்துக்கு 'பிகில்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. விஜய்யின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தப் படத்தின் முதல் சுவரொட்டியை வெளியிட்டுள்ளனர். இந்த நிலையில், இந்தப் படத்தின் தலைப்புடன் முதல் சுவரொட்டி நேற்று மாலை 6 மணிக்கு வெளியிட்டனர். இந்தத் தலைப்பு தற்போது சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது.

இந்தப் படத்தில் விஜய்யுடன், நயன்தாரா, கதிர், ஜாக்கி ஷெராப், டேனியல் பாலாஜி, விவேக், யோகி பாபு, சவுந்தரராஜா என ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்து வருகின்றனர். இந்தப் படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்க, ஜிகே விஷ்ணு ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

mohanram.ko@mohanramko

'பச்சை' தண்ணி வேண்டுமென்றால் 'மரம்' நடுங்கள்

ச ப் பா ணி@manipmp

வாழ்வின் தலைவிதி வாழ்வதாலேயே தீர்மானிக்கப்படுகிறது"!

amudu@amuduarattai

சென்னை என்றாலே, தண்ணீரில் தத்தளிக்கும் அல்லது தண்ணீரின்றி தத்தளிக்கும்.

twitter



என்னடா கூடு இது இப்படி இருக்கு

## 90 வயதைக் கடந்த நானம்மாள் பாட்டியின் சாதனை



90 வயதுக்குப் பிறகு ஒருவரின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்குமா? அதற்கு நிகழ்கால உதாரணம், இந்தியாவின் கோயம்புத்தூரைச் சேர்ந்த நானம்மாள். பத்து வயதுக்கு முன்பே யோகா கற்க ஆரம்பித்தவர், தான் கற்ற கலையைப் பல லட்சம் பேருக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

90 வயதுக்குப் பிறகு இவரின் திறமைக்குப் பெரிய அங்கீகாரங்கள் கிடைக்கத் தொடங்கி, கடந்த பத்தாண்டுகளில் நானம்மாள் இந்திய அளவில் பிரபலமாகிவிட்டார். பன்னாட்டு யோகா தினத்தையொட்டி, நானம்மாளின் வெற்றிப் பயணத்தை அறிந்து கொள்வோம். விவசாய வேலைகளை முடிந்துவிட்டு, வீடு திரும்பியதும் என் தாத்தாவும் பாட்டியும் குளிப்பாங்க. அப்புறம் பாய் விரிச்சு, அதில் யோகா செய்வார்கள். அவர்களிடம் நானும் யோகா கற்றுக் கொண்டேன். என் குடும்பத்தில் பலரும் யோகா செய்வார்கள். அதில் என் அம்மா முக்கியானவர்.

90 வருடங்களுக்கும் மேலேயும் யோகா செய்கிறேன். எனக்கு விவரம் தெரிஞ்ச நாளில் இருந்து காலையில 5 மணிக்கு மேல் நான் தூங்கியதில்லை. வயிற்றில் கழிவுகளை தங்க வைச்சு, நீண்டநேரம் தூங்குவதால்தான் உடலில் நோய்க் கிருமிகள் பரவுகின்றன.

நான் காலையில எழுந்ததுமே முதல் வேலையா காலைக் கடனை முடிச்சுடுவேன். பிறகு, வேப்பங்குச்சியில பல் துலக்கிவிட்டு, பிறகு, யோகா பயிற்சியை ஆரம்பிச்சுடுவேன். இதுவரை எந்த உடல்நலப் பிரச்சினைக்கும் நான் மருத்துவமனைக்குப் போனதில்லை. ஆங்கில மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவதில்லை.

தினம் தவறாமல் யோகா செய்வது, இயற்கை மருத்துவம் மற்றும் நாட்டு வைத்திய முறைகளைக் கடைப்பிடிப்பதுதான் என் ஆரோக்கியத்துக்குக் காரணம்.'

100 வயதானாலும், நானம்மாள் கூறும் வார்த்தைகள் தெளிவான குரலில் ஒலிக்கின்றன. வீரியமிக்க அந்த வார்த்தைகள் வியப்பையும் ஆச்சர்யத்தையும் கூட்டிக்கொண்டே செல்கிறது.

தலைகீழாக நின்று செய்யக்கூடிய சிரசாசனத்தை வழக்கமாகச் செய்வேன். அதனால என் நினைவாற்றல் மற்றும் கண் பார்வை நல்லாவே இருக்குது. ஆச்சரியங்களை அடுக்கிக்கொண்டே செல்லும். இதுவரை ஆயிரத்து 600 யோகா ஆசிரியர்களை உருவாக்கியிருக்கிறார்.

ஒருநாள் பயிற்சி முதல் நீண்டநாள் தொடர் பயிற்சி கொடுத்தது என இதுவரை 10 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு யோகா கற்றுக்கொடுத்திருக்கிறார். தினமும் யோகா செய்வதுடன், பயிற்சி கொடுப்பதையும் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்.





## ஒரு தாயின்



ஆசை



427

# நித்திய சுகம்

உடலே கோயில்

# புற்றுநோயாளர் ஒருவரின் நோய்நிலை பற்றியதான கையாடல்கள், தீர்வுகள்

மருத்துவ கலாநிதி
கிரிஷாந்தி இராஜசூரியர்

ஒருவருக்குப் புற்றுநோய்த்தாக்கம் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு அந்த நோய் பற்றிச் சொல்வதா? தவிர்ப்பதா? அவ்வாறெனில் யாருக்குச் சொல்வது? எப்பொழுது சொல்வது? போன்ற வினாக்கள் எம்முன் எழுகின்றன. இவற்றை அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் அணுகிப் பதிலளிக்க வேண்டியது தவிர்க்கவியலாத தார்மிகக் கடமை என்பதை மருத்துவ உலகம் நன்கு உணர்ந்துள்ளது.

குறிப்பாக இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளில் கீழைத்தேய நாகரிகம், பண்பாடு முதலானவை உணர்வுபூர்வ்மாக உறுதியான குடும்பப் பிணைப்புக்களைப் பேணுவதனால் மருத்துவர்கள் நோயாளியிடம் நோய் பற்றிய உண்மையை எடுத்துக் கூறும் நடைமுறையைப் பேணுவதில் வரையறைகளைத் தோற்றுவித்தனர். இதற்கு இலங்கையின் வடமாகாணம் அங்கு வாழும் தமிழர்களும் விதி விலக்கல்ல. இந்தப் பின்னணியில் - சூழ்நிலையில் எம் முன் தோன்றும் சிந்தனை என்னவெனில், வளர்ச்சி அடைந்துள்ள தகவல் தொழில்நுட்ப யுகத்தில் குறிப்பாக நோயாளிகள் தமது கையடக்கத் தொலைபேசி போன்ற தொடர்பாடல் ஊடகங்களின் மூலம் தமது தாய்மொழியிலேயே தகவல்களை உள்ளவாறே அறிந்துக்கொள்ளக் கூடிய சூழலில், புற்றுநோய் பற்றிய செய்தியை நோயாளிக்கு மறைக்கும் செயல்முறை சாத்தியமானதும் நியாயமானதும்தானா என்பதேயாகும். மருத்துவர்களின் அனுபவத்தில் புற்றுநோயாளிகள் புற்றுநோய் பற்றி பல்வேறு ஊடகங்கள் மற்றும் இதர நோயாளிகளிடமிருந்து மிகத் தவறான தகவல்களைப் பெற்று அது தொடர்பாக மிகப் பிழையான பல முடிவுகளை எடுத்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

### தெல்லிப்பழை மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

எவ்வாறெனினும் நோய் குறித்த மிகத் துன்பமான செய்தியை நோயாளிக்கு நேரடியாக அறிவிக்கும், கலந்தாலோசிக்கும் வழக்கத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மருத்துவர்களிடையே பெருமளவு கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. இதனால் நாம் நோயாளி மற்றும் அவர் சார்ந்த குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்களைப் புரிந்துகொள்வதற்கு தெல்லிப்பழை 'ட்ரெயில்' புற்றுநோய் ஆதார வைத்திய சாலை மற்றும் ஆஸ்திரேலிய புற்றுநோய் நிபுணர்களின் ஒத்திசையுடன் பண்புசார் ஆய்வொன்றை மேற்கொள்வதற்



குத் தீர்மானித்தோம். இதற்கமைய புற்றுநோயாளர் தமக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோய்த் தாக்கம் குறித்து மருத்துவர் நேரடியாகக் கூற வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றனரா? அவ்வாறாயின் எந்த நிலையில் எந்த மட்டத்தில் எந்த அளவிலான தகவல்களுடன் எதிர்பார்க்கின்றனர் என்பதே இந்த ஆய்வின் மிக முக்கியமான வினாவாகக் கருதப்பட்டது.

இதற்கமைய நாம் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 40 புற்றுநோயாளிகளையும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட அவர்களுக்கு மிகவும் நெருக்கமான குடும்ப உறுப்பினர்களையும் தெரிவு செய்தோம். இந்த நோயாளிகளுடன் தொடர்புபடாத மருத்துவர்களை ஒழுங்கு செய்து நோயாளியிடமிருந்தும் அவர்களது குடும்ப உறுப்பினர்களிடமிருந்தும் தனிப்பட்ட நபருக்கான நேர்காணல் முறை மூலம் தகவல்களைச் சேகரித்தோம். நோயாளியால் அறியப்



படாத மருத்துவரின் தெரிவானது. நோயாளி தனக்கு அறிமுகம் இல்லாதவரிடம் இயல்பாகத் தனது கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக ஒழுங்கு செய்யப்பட்டது.

### நோய்பற்றித் தமக்கு அறிவிக்க வேண்டும் என்கின்றனர் நோயாளர்கள்

நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் (95 வீதமானவர்கள்)தமது நோய் நிலை குறித்து தமக்கு நேரடியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவாகக் கொண்டிருந்தனர். ஆயினும் நோயாளியின் குடும்ப உறுப்பினர்களில் 55 வீதமானவர்கள் நோய் குறித்து குடும்ப உறுப்பினர்களுக்கு ஆரம்ப நிலையில் அறிவிக்கப்படல் வேண்டும் எனவும் அதை நோயாளிக்குத் தெரியப்படுத்துவதும் அவசியம் எனவும் சரி எனவும் தாம் கருதும் பட்சத்தில் தாமே நோயாளிக்கு அறிவிப்போம் என்பதைத்தெரிவாகக் கொண்டிருந்தனர்.

அவர்களின் இத்தகைய தெரிவுக்கு நோயாளி நோய் பற்றி அறியும் போது மிகவும் மன வேதனை கொள்வர் என்றும் அத்தகைய மனநெருக்கீட்டில் இருந்து தமது அன்புக்குரியவர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் அடிப்படைக் கார ணங்களாக அமைந்திருந்தன. இந்த ஆய்வின் முடிவானது இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன் இலங்கையில் சிங்கள இனப்புற்றுநோயாளர்களிடமிருந்தும் அவர்களது குடும்பத்தினரிடத்தும் நிகழ்த்தப்பட்ட இதே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வொன்றின் முடிவை ஒத்ததாக அமைந்திருந்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிங்கள நோயாளிகளில் பெரும்பான்மையானோர் நோய்பற்றித் தமக்கு ஆரம்ப நிலையிலேயே நேரடியாகத் தெரிவிக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்திருந்த அதேவேளை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அந்தச் செய்தியை நோயாளிக்கல்ல மாறாகத் தமக்கே தெரியப்படுத்த வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்திருந்தனர். பொதுவாகப் புற்றுநோய்த் தாக்கம் குறித்துத் தமிழ் மற்றும் சிங்கள நோயாளிகளின் கருத்துக்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் இடையே வேறுபாடு காணப்படவில்லை. இதற்கு நோய் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் கண்டுபிடிப்பு முதலானவற்றை நோயாளிக்குத் தெரியப்படுத்தும் போது ஏற்படக்கூடிய நன்மைகள், அனுகூலுங்கள் குறித்து அறிந்திராமையே அடிப்படையான காரணங்கள் எனக் கருதப்படுகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இவ்விரு ஆய்வு முடிவுகள் மற்றும் மேற்குலக நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்தும் பெறப்பட்ட முடிவுகளின்படி தனிமனிதவாதச் சிந்தனைகள் விருத்தியடைந்த சமூகங்களிலும் சரி உறுதியான குடும்பப் பிணைப்புக்களைப் பேணுகின்ற கீழைத்தேயச் சமூகங்களிலும் சரி புற்றுநோய்த் தாக்கம் என்ற அடிப்படையில் சமூக பண்பாட்டு நாகரிக விழுமியங்களுக்கு அப்பால், நோயாளிகள் தமது நோய் பற்றிய உண்மைகளை தாம் அறிந்துகொள்ள விரும்புகின்றனர்' என்ற கண்ணோட்டம் முதன்மையானதாகக் காணப்படுகின்றது.

### அறிவிக்க வேண்டியதன் அவசியம்

நோய்ப் பாதிப்புக்கு உள்ளானவருக்கு அவரது நோய் பற்றிய விவரங்களை மருத்துவர் தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் நோயாளி இணையத் தளம் மற்றும் ஏனைய தகவல் தொடர்பு ஊடகங்களின் மூலமும் ஏனைய நோயாளிகளிடமிருந்தும் பிழையான தகவல்களைப் பெற்று அவற்றைப் பிழையான முறையில் கருத்தாக்கம் செய்வதற்கும் விளங்கிச் செயற்படுவதற்குமான வாய்ப்புக்கள் அதிகமாகின்றன. நோய்குறித்த தவறான புரிதல்கள் நோயாளிக்கு மேன்மேலும் குழப்பத்தைத் தோற்றுவிப்பதுடன் அவரது மனஅழுத்தம் மற்றும் மன வேதனைகளை அதிகரிக்கவும் செய்கின்றன.

மேலைத்தேய வழக்குகள் அணுகுமுறைகள் நோயாளியிடம் அந்த நோய் சார்பாகத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளக் கூடிய மனப்பாங்கினைத் துண்டுவதுடன் நோயை எதிர்த்துப் போராடக்கூடிய தன்னாற்றலை வளர்ப்பதற்குமான அடிப்படைகளாகவும் பின்பற்றப்படுகின்றன். ஆனால் இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் புற்றுநோயானது நோயாளியினால் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு கசப்பான உணர்வாகக் கருதப்படுகின்றது.

எவ்வாறெனினும் இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான நோயாளிகளின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதைக் குறித்து நாம்சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பல்வேறு சந்தர்ப்பங்களில் - நோய் பற்றி நோயாளிடம் தெரிவிப்பதை விரும்பாத சந்தர்ப்பங்களில் நோயாளியிடம் நோய் பற்றிய உண்மையைத் தெரிவிப்பதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் அனுகூலங்கள் குறித்து குடும்ப உறுப்பினர்களிடம் கலந்துரையாடி அவற்றை அவர்கள் புரிந்துகொண்டு செயற்படுவதை நாம் அவதானித்துள்ளோம். ஆயினும் இத்தகைய முன்னெடுப்புக்கள் நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினரின் மனநிலைகள், எதிர்பார்ப்புக்கள் பற்றிய மிகக் கவனமான மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், நோய் குறித்து யாரிடம் எந்த அளவிலான விவரங்களுடன் தெரிவிக்க வேண்டும் என்பதிலும் நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம்.

எமது நாகரிகம், பண்பாடு அதன் அடிப்படையிலான இறுக்கமான குடும்பப் பிணைப்புக்கள் உலகளாவிய ரீதியில் போற்றப்படுபவை. இத்தகைய பெறுமதிகளோடு நோயா ளிகளின் நலம் சார்ந்த நோக்கில் எமது மனப்பாங்குகள் மற்றும் சிந்தனைகளில் விழுமியங்களோடு கூடிய மாற்றங்களின் அவசியத்தை - தேவைகளைச் சிந்திக்கும் பட்சத்தில், நோயாளர்கள், அவர்களது குடும்பங்கள் அன்புக்குரியவர்கள் இவர்களுக்கு சேவை செய்வதற்கு தம்மை அர்ப்பணித்துள்ளவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் யாவர்க்கும் ஆரோக்கியமான சுகமான மற்றும் நன்மை எதிர்பார்ப்புக்களுடன் கூடிய சூழலை எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் இவ் இரு ஆய்வு முடிவுகளும் வெளிவந்த காலத்தில் இருந்து, புற்றுநோய் வைத்திய அலகில் - பிரிவில் எமது செயற்பாடுகளை சிறிய அளவில் இருந்து தொடர்ச்சியாக மாற்றுவதற்கு முனைந்துள்ளோம். ஆரமத்தில் நோயாளியும் அவரது குடும்பத்தினரும் நோய் பற்றிக் கண்டுபிடிப்புக்களை உண்மைகளை விளக்கிக் கொள்ள வேண்டும் என்பதை முக்கியமாகக் கருதுகிறோம். அத்தோடு அவர்களின் அனுமதியுடன் - இசைவுடன் சிகிச்சை முறை குறித்த விபரமான தகவலை வழங்குவதோடு, தமக்குத் தேவையான சிகிச்சை முறை பற்றிய தெரிவினை அவர்களே தீர்மானிப்பதற்கு - முடிவு செய்தவற்கு சந்தர்ப்பம் அளிக்கின்றோம். நோய் பற்றிய உண்மையினை நோயாளிக்குத் தெளிவுபடுத்துவதனை குடும்பத்தினர் விரும்பாத சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு நோய் பற்றி அறிவிப்பதன் தேவையினையும், நோயாளி அது பற்றி விளக்கிக் கொள்வதன் தேவையினையும் விளக்கி அவர்களை ஒத்திசைய வைப்பதில் வெற்றியும் கண்டுள்ளோம், முன்னேற்றமும் கண்டுள்ளோம்.

*கட்டுரையாளர்:புற்றுநோயியல் நிபுணர்,*
*மருத்துவ ஆலோசகர், போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.*


www.emami.com
emami
FAIR AND TEENS
டீன் ஏஜ் பருவத்தின் மிருதுவான சருமத்திற்காகவே
தயாரிக்கப்பட்ட விசேடமான பெயானர்ச் கிரீம்
04 வாரங்களில் உங்கள் மிருதுவான சருமத்திற்கு பொழிவினை பெற்றுத்தரும்.
பாதிப்பினை ஏற்படுத்தும் சூரிய கதிர்களிலிருந்து சருமத்தினை பாதுகாக்கும்.
சருமத்தின் எண்ணைய்த்தன்மையை கட்டுப்படுத்துவதன் மூலம் முகப்பருக்கள் ஏற்படுவதை குறைக்கும்.
கற்றாளை, சந்தனம் மற்றும் குங்குமம், உட்பட இயற்கை மூலிகைகளின் குணநலன்கள் சருமத்திற்கு மென்மையையும், பிராகாசத்தினையும் பெற்றுத்தரும்.
சருமத்தின் இயற்கையான ஈரலிப்பினை பாதுகாத்து சருமத்திற்கு போஷிணையளிக்கும்.
12 - 21 வயது வரையான பெண்களுக்கு மிகவும் பொருத்தமானது.
அனைத்து சரும வகைகளுக்கும் பூச முடியும்.
emami
With Actiogen Corp., USA
FAIRNESS CREAM FOR TEENAGERS
FAIR AND TEENS
POLYPEPTIDE WITH HERBS FOR DELICATE TEEN SKIN
25ml - Rs.165/-


செயற்கைக்கு BYE சொல்லி
இயற்கைக்கு HAI சொல்லுங்கள்.
ஐந்தே ஐந்து
வினாடிகளில் தயாரிக்கக்கூடிய வைட்டமின் மற்றும் கனியுப்புக்கள் அடங்கிய சுவைமிகு பானம்.
RASNA INSTA
125g
மாம் பழம்.
தோடம் பழம்.
அன்னாசிப் பழம்.
எலுமிச்சம் பழம்
1 litre செய்யலாம்
500g
மாம் பழம்.
தோடம் பழம்.
அன்னாசிப் பழம்.
26 Glasses செய்யலாம்
21 VITAMINS
D A E K B
Complex
GLUCOSE + MINERALS
சீனி சேர்க்கத் தேவையில்லை
23g - Rs. 20
Imported & Distributed By:
AMERICAN REMEDIES (PVT) LTD.
No, 69, Subadrarama Road, Gangodawila, Nugegoda.

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1988 இல் பிறந்த, அவிட்டம் -2, B.A பட்டதாரி, ஆசிரியராக பணியாற்றும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

**071 031 8737**

## விற்பனைக்கு

பாவித்த வெளிநாட்டு வீட்டுப் பாவனைப் பொருள்கள், கட்டில் + மெத்தை, Gas Cook Top / Oven, Washing Machine, Fan, வீட்டுக்கதவு, TV, DVD, 5.1 Sound Vacuum Cleaner, Blender

(CS/ 262221)(11.17)

**070 466 0529**

## வேலையாள் தேவை

கடைச்சல் வேலையில் அனுபவம் உள்ள லேத் Man தேவை.

(CS 26163) (11.17)

**077 605 9972**

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு **கணக்காளர்** (Accountent) தேவை.

தகைமை : **A/L (Commerce)**
**கணினித்துறையில் அனுபவம்.**

**076 316 5730, 077 592 5371**
E.mail-careers@decon.lk

## பணிப்பெண் தேவை

சிறு குடும்பம் ஒன்றுக்குத் தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. 40 இருந்து 55 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 937 0000**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரப் பகுதியில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

**077 464 8741**

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டின் மேல்மாடி மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 007 1488

## சமையலாள் தேவை

Restaurant ஒன்றிற்கு சமையல் வேலைக்கு ஆள் தேவை.
(ஆண்கள் மட்டும்)

(CS 26184)(14.17)

**075 777 6047**

## கார் விற்பனைக்கு

16 - IXXX Toyota Corolla கார் விற்பனைக்கு உண்டு.1300 CC,Registered on 1988, A/C,DVD, Sd,Bluetooth,Back Comera, வெள்ளை நிறம், நல்ல நிலையில் உள்ளது.விலை- 650000/=,Negotiable, இடம்: இல.107, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 676 7190**

SharmilaTravels
TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

**புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது வவுனியா கிளை நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை**

Ticketing, Marketing, Cashier போன்ற வெற்றிடங்களுக்கு அனுபவம் வாய்ந்த, அனுபவமில்லாதவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுபவம் இல்லாதவர்களுக்கு ஒரு மாத பயிற்சி கொழும்பு தலைமையகத்தில் வழங்கப்பட்டு வேலையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

உங்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

pettah@sharmilatravels.com

**தொடர்புகளுக்கு : 077 788 1656**

**Sharmila Travels**
**289. Stanley Road, Jaffna.**


## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுமார் தயாநிதி



குமாரலிங்கம் வீதி, இணுவில் கிழக்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமார் தயாநிதி கடந்த 21.06.2019 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா பூபதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைவீரசிங்கம் மற்றும் பராசக்தி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சாந்தகுமார் (சாந்தன் விற்பனையாளர் றூபா பன்முகவர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்) இன் அன்பு மனைவியும் லதுஷன், கோபிகன், சாருஜன் (யாழ் இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குழந்தை வடிவேல் (நாதன் சகோதரர் களஞ்சியம், ஊழியர்), சரவணபவன் (ஆசிரியர், யா/வீமன்காமம் ம.வி), தயாழினி, தயாபரன் (இ.போ.ச ஊழியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இரஞ்சிதமலர், சாந்தினி, உதயகுமார், யசோதா, தயாழகுமாரி, தயாழகுமாரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.11.1976 | 21.06.2019 |

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில், கோண்டாவில், காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமாரலிங்கம் வீதி,**
**இணுவில்கிழக்கு,இணுவில்.**

**தகவல்: து.சாந்தகுமார்**
**கணவர்**

**077 639 3930**

## மரண அறிவித்தல்



### துரையப்பா சிவசுப்பிரமணியம்

**(இளைப்பாறிய பொறியியலாளர் - நீர்ப்பாசன இலாகா, இலங்கை)**

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா சிவசுப்பிரமணியம் கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை சிட்னியில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-சிவகாமி தம்பதியரின் இளைய மகனும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்வதுரை செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், சிவானி, ஈஸ்வரன், நந்தினி, முரளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, கனகராஜா, சரஸ்வதி, சிவசிதம்பரம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, தியாகராஜா, சிவபாக்கியம், பேரின்பம், செல்வராஜா, இந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நரேந்திரன், ஞானகலா, ஜெயலிங்கம், சிறீதர் ஆகியோரின் அருமை மாமனாரும், சஞ்சீவன், தர்ஷி, தமிழினி, மீரா, சீதா, நித்திலா, சயந்தினி, கிருஷாந்த், மாதுரி, பிரியங்கா, மாறன் ஆகியோரின் அன்புப் பாட்டனும், அஞ்சலியின் ஆசைப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2019) ஆஸ்திரேலியா சிட்னியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 021 2230779**

**தகவல்:**
**திருமதி வ.இந்திரராஜா**
**செல்வம் உரும்பிராய் கிழக்கு**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 22 |
| 03 | 06 |
| 1935 | 2019 |

### திருமதி
### யோக்கீம்பிள்ளை மேரிபிரான்சிஸ்கா
**(போல்மாமி)**

இல.795(425), நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கீம்பிள்ளை மேரி பிரான்சிஸ்கா நேற்று (22.06.2019) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை-சமினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற யோக்கீம்பிள்ளையின் (போல்) அன்பு மனைவியும், பிரான்சிஸ் மேரி வயலற் ராணியின் ஆசை அக்காவும், றீற்றா வினிவிறெட் (சாந்தி), ஜவன் கலிஸ்ரஸ் (ராஜன்-லண்டன்), திருமதி J.M. செல்வானந்தன் (ஜெயந்தி-ஆசிரியை, மன்/நொச்சிக்குளம் RCTMS), திருமதி. ஐ.பிறின்ஸ் சாள்ஸ் (வசந்தி, வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), அன்ரன், கமிலஸ் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சேவியர் (லக்மி ஸ்ரோர்ஸ்), எலிசபேத் ராணி (லண்டன்), செல்வானந்தன் (மன்னார்), பிறின்ஸ் சாள்ஸ் (ராஜேந்திரா ஸ்ரோர்ஸ்), யுனிற்றா சுபைந்தினி (விவசாயத் திணைக்களம்-வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றெனுஜா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), மிதுண் (1990 சுவசெரிய சேவை, யாழ்ப்பாணம், றெஜி (OMEX Hotel), யூடித்ரேகா (Vision Care, Jaffna), லடிஸ்லவுஸ் (நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), அஜித் (Future World, Jaffna), லியான்சி, அஜினா, விதுசாளினி, ரிஷாளன், நிறுக்சி, ஜெரன்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பெனோஷன், அஞ்யுகா, கிறித்திகா, கரோன் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (24.06.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் 3.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக யாழ். புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.795, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**அன்ரன் கமிலஸ் (மகன்)**

**T.P: 077 6577356, 021 222 9363**

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மல்லாகம்
பலநோக்குக் கூட்டுறவு சங்கப்
பணியாளர் செல்வி செ.நிசாந்தி
அவர்களின் அன்புத் தந்தை

**துரையப்பா செல்வராசா**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச்சங்கம்.**

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து தங்கரத்தினம்மா
(பாக்கியம் அக்கா)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து தங்கரத்தினம்மா கடந்த (20.06.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் சரவணமுத்துவின் அன்பு மனைவியும், குகபாலன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), தனலட்சுமி தேவி (லண்டன்), கிருகலட்சுமி தேவி (ஜேர்மன்), குகசீலன் (ஓய்வு பெற்ற ஆராய்ச்சி உதவியாளர் மிருக வைத்தியசாலை- பேராதனை), காலஞ்சென்றவர்களான குகதாசன் (மின் அத்தியட்சகர்), குகராஜன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாநிதி, கலாயினி, ஸ்ரீஸ்கந்தராஜா, பாஸ்கரன், நாகேஸ்வரி காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீதேவி, ஸ்ரீமதி, ஸ்ரீவித்தியா, ஸ்ரீபிரியா, தயாளன், டர்சன், தனுசன், பிரணவன், முரளி, குயித்தா, சுனித்தா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திஷாந், திலக்ஷி, அக்சயன், அகரன், சயன், கிஷாரா, ருஷ்வன், அமரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2019) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாயில் உள்ள அவரது வதிவிடத்தில் இடம்பெற்று, அஞ்சலிக்காக அன்னாரின் பிறப்பிடமான கைதடி நுணாவிலில் உள்ள 'குகவாசா' இல்லத்தில் மதியம் 12.00 மணிக்கு வைக்கப்பட்டு தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
(பிடியடிக்கா அருகில்)
மானிப்பாய்.

தகவல்:
ச.குகசீலன்

**0777 295 620**

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 06 1948



இறப்பு 17 06 2019

### கணபதிப்பிள்ளை செல்வராஜா

பெரிய விளானை பிறப்பிடமாகவும் இல .1A அத்தபத்து மாவத்தை, தெஹிவளை மற்றும் பெரிய விளானை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை செல்வராஜா 17.06.2019 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ராசம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற இராஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சபாரட்ணம் ரோசம்மா தம்பதிகளின் மருமகனும் பிறேமினி (USA), அபிராமி (UK), கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவரூபன், புவனன், சுதர்சன் ஆகியோரின் மாமனாரும் துவாரகன், அபயன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22.06.2019 சனிக்கிழமை காலை 10 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.06.2019 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிரியைகள் நடைபெற்று மதியம் 01 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்
**0777 758950,**
**077 2724296**

## காணி விற்பனைக்குண்டு

கலைவாணி மில் ஒழுங்கையில் (பலாலி வீதியில் இருந்து 2 ஆவது காணி) 8 பரப்பு விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) (11.17)

**077 321 1660 / 077 116 9337**

## பணிப்பெண் தேவை

நெல்லியடியில் வசிக்கும் வீடொன்றில் பணி செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் தேவை. (ARN/ 880) (11.17)

**077 124 2591**

## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 3அறைகள் இணைந்த குளியல் அறையுடன் கூடிய வீடு தேவை. பிறவுண் வீதி, நாவலர் வீதி, K.K.S வீதி, கொக்குவில் பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு : **075 045 8213**
**021 221 9806**

## மணமகன் தேவை

யாழ்.இந்து, 1991 ஆம் ஆண்டு, மகம் 3ஆம் பாதம், கிரகபாவம் 33, உயரம் 5'2", ஆசிரியராகப் பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. (CS/26213) (11.17)

**077 604 2949**

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு மிக அண்மையில் 4 அறைகள், 2 குளியல் அறைகள் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (CS/26220) (11.17)

**077 871 5430, 077 810 3798**

## காணி விற்பனை

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 1 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CS/26221)(11.17)

**077 810 3798, 077 871 5430**

## மணமகள் தேவை

கனடாவிலுள்ள Hindu, 30 வயது, Bachelor's Degree முடித்து Engineer ஆக பணிபுரியும் மணமகனுக்கு Canada, Srilanka நாடுகளில் வரனை எதிர்பார்க்கின்றோம்.

**011 236 3663, 011 722 1674**

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

**011 250 4281/ 077 305 8102**

## றெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை

**கொழும்பு 2 இல் அமைந்துள்ள றெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு சமையலறை உதவியாளர்கள், பரிமாறுபவர்கள் தேவை.**

ஹோட்டலில் அனுபவமுள்ளவர்கள் / பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**070 333 7133**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையம், இனுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகம்.

**தொழில்முறைப் பயிற்சி :-**
தையல், கைவேலை, சமையல், கேக் ஐசிங், முக அலங்காரம் மற்றும் மணப்பெண் அலங்காரம் வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகளுக்குரிய புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். வகுப்புகள் முற்றிலும் இலவசமாக திங்கள் - வெள்ளி காலை 9 தொடக்கம் 1 மணிவரை பின்வரும் இடங்களிலுள்ள எமது நிலையங்களில் இடம்பெறுகின்றன.

**தொடர்புகளுக்கு:-**

| | | | |
|---|---|---|---|
| கொக்குவில் | - 077 9126968 | ஆனைக்கோட்டை | - 077 9258620 |
| சண்டிலிப்பாய் | - 077 6054125 | இனுவில் | - 077 9177230 |

நிர்வாகம்.
தொ.பே.இ: 021 205 4443

## வேலை ஆள்கள் தேவை

U.S Hotel நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.
**உணவு பரிமாறுவோர்** (Waiters)
**சமையல் உதவியாளர்** (Kitchen Helpers)
விண்ணப்பிக்க விரும்புவோர் 24.06.2019 திங்கட்கிழமை நேரில் சமுகம் தரவும்.

**தொடர்புகளுக்கு: 077 008 3000**

## உடனடி வேலை வாய்ப்பு

வணிகக் கல்வி கற்ற கணினி அறிவுள்ளவர்கள் தேவை.
Quick Book, Xero Soft Wareதெரிந்தவர்களுக்கும் தங்களுடைய அனுபவத்திற்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும்.

**குடும்ப வைத்திய நிலையம்,**
**125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**076 698 0531, 077 732 8434**

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள்கள் தேவை.

01. பொதி சுமப்பவர்கள் (ஆண்)
02. பொருள் காட்சிப்படுத்துனர்கள்
03. கணினி கணக்காளர் (பெண்)
04. வாகன ஓட்டுனர்கள் (கனரக)

நேரில் சமுகம் தரவும்

**தேனு களஞ்சியம்**
**(நெஸ்லே விநியோகஸ்தர்)**
**இல.54/2, பலாலி வீதி, கோண்டாவில்**
**T.P.No: 021 492 1258, 077 045 6146**

## வாடகைக்கு உண்டு (புதிய கடைத்தொகுதி)



சுன்னாகம் சந்தியில் இருந்து 15 m தூரத்தில்

- கீழ்த்தளம் - 2, 200 சதுர அடி
- முதலாம் மாடி - 4, 000 சதுர அடி
- இரண்டாம் மாடி - 6, 000 சதுர அடி

வாகனத் தரிப்பிட வசதி
சகல வசதிகளும் உண்டு.

**புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.**

**076 294 7730/ 077 104 0746**

## திருமண சேவை

தமிழ் இந்து, கிறிஸ்தவ (RC/NON RC) மணமக்களை எமது கலாச்சாரத்திற்கு அமைய இலங்கை, இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஒழுங்கு செய்து தருவோம்.

விபரமறிய: Mr.ஜெயம்
சொர்க்கத்தில் நிச்சயம் திருமண சேவை.
0033/75-26-36-127 / 0033/65-29-76-540
Viber/Whatsapp
0044/740-558-6174 (London)
Viber/Whatsapp

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி சன்னதி பிரதான வீதியில் அச்சுவேலி சந்தியில் இருந்து 500 மீட்டர் தூரத்தில், பத்தமேனியில் 4 பரப்பும் 15 குழியும் உடன் விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை. தொடர்பு: 0778399446

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sisil குளிர்சாதனப்பெட்டி. புதிய இரும்பு ஒற்றைக்கதவும் மற்றும் சணல் இன கிடாய் ஆட்டுக்குட்டிகளும் விற்பனைக்குண்டு.

077 400 2382

## வீடு காணி விற்பனைக்கு

யாழ் அரசடி வீதி 4ம்.5ம் ஒழுங்கைக்கு நடுவில் 3 1/2 பரப்பு காணி (46 Feet Road Front). புதிய வேலியுடன் விற்பனைக்கு. Rs. 25 மில்லியன். உரிமையாளர் -

xeylon.my@gmail.com 0775 58 55 33

## வீடு காணி விற்பனைக்கு

கல்வியங்காடு டச் றோட்டில் 2 பரப்பிலமைந்த புதிய வடக்கு வாசல் வீடும். 2பரப்பு. 12 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
(குறைந்த விலையில் பெறலாம்.)

076 697 2287

(CS 26210)(04.17)

## கடை வாடகைக்கு

அரியாலை (A9 Road)
புதிய தளபாடங்களுடன் கூடிய உணவகம்
ஒன்று வாடகைக்கு உண்டு.

076 616 3321, 077 258 2326









**வீடு காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

**தேவை**

யாழ்ப்பாணம் உசன் பகுதியில் உள்ள தென்னந்தோட்த்திற்கு பராமரிப்பாளர் தேவை. வேலையில் மிகுந்த அர்ப்பணிப்பும் ஆர்வமும், O/L வரை படித்தோரும் விரும்பத்தக்கது.

**தொடர்பு-077 762 6241**

**மாபிள் வேலை**

உங்கள் வீட்டுக்கு
தரமாகவும் அழகாகவும்
மாபிள்வேலை செய்து தரப்படும்.

**1 சதுர அடி ரூபா. 45.00**

**077 334 1281**

**இலவச வகுப்புக்கள் பிரிவு - 20**

பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்களுக்கான பின்வரும் பிரிவுகள் அடிப்படையிலிருந்து ஆரம்பமாகின்றன.

→ **ஆங்கிலம்** Diploma in English/Spoken English
→ **சிங்களம் எழுத்து, பேச்சு, அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட பிரிவு.**
→ **கணினி** (MS Office, DTP)

ஆரம்பம் : 25.27/06/2019 செவ்.வியாழன்
29.30/ 06/2019 சனி, ஞாயிறு
நேரம் : 10.00 Am

◂ காலம் 3 மாதங்கள்
◂ பெறுமதிமிக்க சான்றிதழ்

**IPS** பல்கலைக்கழகத்திற்கு அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**077 602 1794**

## மகன்களைக்...

பாடு செய்துள்ளார்.

வவுனியா நீதிமன்றில் இடம்பெறும் வழக்கின் விசாரணைக்காக கடந்த வியாழக்கிழமை சென்ற இருவரும் நேற்று வரை தமது வீட்டுக்குத் திரும்பவில்லை என்று தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார் அவர்களின் தந்தை. விஜயசுந்தர் தர்சன் (வயது - 19), விஜயசுந்தர் நிதர்சன் (வயது -16) ஆகிய இருவருமே அவ்வாறு காணாமல் போயுள்ளனர். (ம)

## அவசரகால...

நீடிக்கப்பட்டு வர்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. (ம)

**கடையும் ஆதனமும் விற்பனைக்கு**

பிரதான தபால் கந்தோருக்கு
முன்பாக (கோட்டையடியில்)
கடையும் அதனோடிணைந்த
ஆதனமும்
உடன் விற்பனைக்கு.

(C/10098)(11.17)

**075 405 0838, 076 972 6978**

**கார் விற்பனைக்கு**

வைத்தியர் ஒருவருக்குச் சொந்தமான பிறவுண் நிற **Maruthi Zen Estilo** கார், 2011 ஆம் ஆண்டு உற்பத்தி, 37,000 KM ஓடிய நிலையில் விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
1 ஆம் உரிமையாளர் (CS/ 26216)(11.17)

**077 805 2520**

**வைத்திய சேவையும் பராமரிப்பும்**

வயோதிப நோயாளர்களை உங்கள் வீடுகளில் வைத்து பராமரிப்பதில் கஷ்டப்படுகின்றீர்களா?
**எங்கள் இடத்தில் உரிய முறையில் பராமரிக்கப்படுவர்.**

**077 873 0129**

## மரண அறிவித்தல்

மலர்வு
30
.
09
1940



உதிர்வு
21
06
2019

### திருமதி புவனேஸ்வரி கோபாலரத்தினம்

**(முன்னாள் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்)**

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கோபாலரத்தினம் கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை லண்டனில் அமரத்துவம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் கோபாலரத்தினம் (முன்னாள் உப தபால் அதிபர் - நல்லூர்) அவர்களின் அன்பு மனைவியும் சசிகலா (லண்டன்), காண்டீபன் (அபுதாபி), மேகலா (ஆசிரியை - நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), தனஞ்ஜெயன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவேந்திரராசா, ராகினி, இராஜேந்திரன், பத்மினி ஆகியோரின் அன்புமாமியாரும் பிரணவன், விசாகன், கிர்த்தனி, விதுர்ஷன், விஜித்தன், அபிநயன், தாரணி, கவின், நிலா, கீரன் ஆகியோரின்பாசமிகுபோர்த்தியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**88, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0212227315**

## திருக்கேதீச்சர...

திரும்பப் பெறப்பட்டமை தொடர்பாக மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாகிர் இது தொடர்பாக கையெழுத்திட்ட கடிதம் திருக்கேதீச்சர ஆலயத்தின் திருப்பணிச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், மன்னார் திருக்கேதீச்சரம் மாந்தை சந்தியில் நுழைவாயில் அமைப்பதற்காக மன்னார் பிரதேச சபையால் கடந்த 14ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் பல்வேறு தரப்பினரிடம் இருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதனைக் கருத்தில்கொண்டு எமது பிரதேச சபை எல்லைக்குள் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடலை ஏற்படுத்தி சுமூகமான தீர்வை எட்டும்வரை என்னால் வழங்கப்பட்ட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகிறது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியின் பின்னர் ஏனைய சமயத்தவர்களால் வழங்கப்பட்ட அழுத்தமே திருக்கேதீச்சர அலங்கார வளைவு அமைக்கப்பட வழங்கப்பட்ட அனுமதி திரும்பப்பெறப்பட்டமைக்குக் காரணம் என்று திருக்கேதீச்சர ஆலயம் சார்ந்தோர் உதயனுக்குத் தெரிவித்தனர். (ம)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பரமலிங்கம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை அம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமலிங்கம் நேற்று (22.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னம்மாவின் பாசமிகு கணவரும் ரஞ்சிதமலர், உஷாநந்தினி, தனரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புச் சகோதரனும் செல்வராசா, திருவரங்கன் ஆகியோரின் மாமனாரும் பர்விதனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### தம்பையா சிவபாதசுந்தரம் (பாலண்ணன்)



சரவணையை பிறப்பிடமாகவும் பேரம்பலம் வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவபாதசுந்தரம் (பாலண்ணன்) நேற்று (22.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



### திருமதி. பொன்னம்பலம் நாகமுத்து

கச்சாய் தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாக கொண்ட திருமதி பொன்னம்பலம் நாகமுத்து 21.06.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சேதுப்பிள்ளை, நடராசா, செல்லப்பா, கந்தசாமி, தங்கம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், விஸ்வலிங்கம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, ரேணுகாதேவி, சந்திரசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கண்மணி, காலஞ்சென்ற தவமணி, சிவமணி, சக்திவேல், ஜெயமணி, கோபிராஜ், கோகுலராஜ், கமல்ராஜ், நிரஞ்சன், நிரூபன், நிதர்சன், கௌசிகா, கௌதமன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.06.2019) சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அருள்நாயகி புத்தகசாலை,**
**ஷேத்திரபாலகா புத்தகசாலை,**
**கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## தெரிவுக்குழுவின்...

ஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன மற்றும் முன்னாள் சட்டம், ஒழுங்கு அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரும் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்க அழைக்கப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரிக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விளைவு...

ரதேரர். கல்முனைப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு வலியுறுத்தி உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்துக்கு நேற்றுச்சென்ற அவர் அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனைப் பிரதேச செயலகத்தை வெறும் ஐந்து நாள்களில் தரமுயர்த்த என்னால் முடியும். ஆனால் அதன் விளைவுகள் மோசமானதாக இருக்கும். எனவே நிதானமாக இந்த விடயத்தைக் கையாள எனக்கு ஒரு மாதகாலம் அவகாசம் கொடுங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



# உபநயன ப்ரமோபதேச அழைப்பு

**27.06.2019**

அன்புடையீர் !

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விகாரி வருஷம் ஆனி மாதம் 12 ஆம் நாள் (27.06.2019)
வியாழக்கிழமை அஸ்வினி நட்சத்திரமும் தசமி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய
காலை 9.34 மணி முதல் 11.22 மணிவரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்த சுபவேளையில்

பாரத்வாஜ கோத்திரம்
அமரர். சிவஸ்ரீ சபாநாத சர்மா ஸந்தானலக்ஷ்மி
தம்பதிகளின் சீமந்த புத்திரர்கள்

**ச.ஸ்ரீராமசர்மா - ச.ஸ்ரீலக்ஷ்மணசர்மா**

அவர்களுக்கு

சௌள உபநயன ப்ரமோபதேசம் செய்ய
உசன் கந்தசாமி, தெல்லிப்பளை துர்க்காதேவி,
மருதனார்மடம் ஆஞ்சநேயர் சுவாமி
இறை அனுக்கிரகத்துடனும் பெரியோர்களின் ஆசியுடனும் திருவண்ணாமலை
அருணாச்சலேஸ்வரர் உண்ணாமுலையம்மன் சந்நிதியில் நடைபெற நிச்சயித்திருப்பதால்
இவ் விழாவிற்கு தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து
குமாரரை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

07.07.2019 ஞாயிற்றுக்கிழமை, மாலை 6.00 மணிக்கு திருகோணமலை
பத்திரகாளியம்பாள் தேவஸ்தான சோமஸ்கந்த திருமண மண்டபத்தில் வரவேற்பு
உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்
**சிவஸ்ரீ முத்து குருபரசாமி குருக்கள்**
**ஸ்ரீமதி. சந்தானலக்ஷ்மி தம்பதிகள்**
**கு.திதீஷ்சர்மா**


18/2, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை
077 1414 177

முத்துக்குமாரசாமி கோயில்,
திருகோணமலை.

**வரவேற்பாளர்கள்**

வை.மு.ப.முத்துக்குமாரசாமி குருக்கள் பர்வதவர்த்தினி அம்மா
(நயினை நாகபூசணி அம்மன் கோயில்)
சோ.இரவிச்சந்திர குருக்கள்
(பத்திரகாளி அம்மன் கோயில், திருகோணமலை)
உ. தேவாநந்தக் குருக்கள் யசோதை ரஞ்சினி தம்பதிகள் (கொழும்பு)
இ.சதீஸ் குமார சர்மா (யாழ்ப்பாணம்)
கெ.கிரிகர சர்மா அன்னலெட்சுமி தம்பதிகள் (திருகோணமலை)
க.கேதீஸ்வரக் குருக்கள் தர்சினி தம்பதிகள் (யாழ்ப்பாணம்)


# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கணக்கியல் பகுதியில் கடமையாற்றும்
**திருமதி கிறிஷாந்தி நிஷாந்தன்** அவர்களின்
அன்புத்தந்தையார்

## தர்மலிங்கம் தவபாலன் ஜோர்ஜ்

அவர்கள் கடந்த 19.06.2019 காலமான செய்தி கேட்டு
துயர் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உதயன் குழுமம்**


# YARL HOSPITAL

315, Palaly Road, Thirunelvely, Jaffna. Tel : 021 222 3533

## கண் லேசர் சிகிச்சைகளும் சத்திர சிகிச்சைகளும்



**Cataract Surgery**
கண்வில்லையில் கண்புரை படர்வதை நீக்குவதற்கான (கற்றராக்) சத்திரகிச்சை.

**TRALECULECTOMY**
கண் அழுத்தத்தை குறைப்பதற்கான சத்திர சிகிச்சை.

**DCT, DCR** } கண்ணீர்ப்பை, கண்ணீர்கான் அடைப்பதனால் தொடர்ச்சியாக கண்ணீர் வெளியே சிந்துவதை நிறுத்துவதற்கான சத்திரசிகிச்சை.

என்டேஸ் கோப்

**KERATOPLASTY**
விழிவெண்படல மாற்று சிகிச்சை
(கண்மாற்று சத்திரசிகிச்சை)

லேசர்

**SQUINT CORRECTION**
வாக்கு கண்ணை திருத்துவதற்கான சத்திரசிகிச்சை.

**R.D SURGERY**
பிரிந்த அல்லது கிழிந்த விழித்திரையை ஒட்டுவதற்கான சத்திர சிகிச்சை.



**PHOTOCOAGULATION**
நீரிழிவு நோயால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்புப் பகுதியை மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை.



லேசர்

**P.L.** } கண் அழுத்தத்தைக் குறைப்பதற்கான LASER சிகிச்சை.

200 mm மைக்ரஸ்கோப்

தினசரி சிகிச்சை நடைபெறும்

**VENOUS THROMBOSIS**
இரத்தக்குழாய் அடைப்பால் ஏற்படும் நீர்க் கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை.

இங்கு **X-Ray** வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லேசர்

**தினசரி கண்சிகிச்சை நிபுணர்களால் கண்சிகிச்சை நடைபெறும்**
**சத்திரசிகிச்சை நிலையத்தை *Dr.* குகதாசன் *Dr.* மலரவன் ஆகியோர் திறந்துவைத்தனர்.**

# நாங்கள் சமயம் சார்ந்தவர்களா?

க.நா.சபாரத்தினம்



ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு சமயத்தில் உள்ளவர்கள் என்பது பெரும்பாலானவர்களின் நிலைப்பாடாகும். இதில் தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் தெளிவுபடுத்தப்படாமலும் தெளிவுபடாமலும் இருப்பதே உண்மையாகும். சமூக அமைப்பில் பார்ப்போமாகில் ஒவ்வொருவரும் யான் இந்த சமயத்தில் உள்ளேன் இதில் எத்தனையோ விடயங்களுக்கான பல முயற்சிகளை மேற்கொள்கின்றேன். விழா நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துகின்றேன். தேவையானபோது நிதி உதவிகளை வழங்குகின்றேன். எல்லா விடயங்களிலும் எனது பங்களிப்பு உண்டு என சிந்திக்கும் தன்மையில் குறிப்பிட்ட விகிதத்தினர் இல்லாமலில்லை.

இன்னுமொரு பகுதியினர் சிந்தனையில் எமது மதத்தை மற்றவர்கள் சிதைக்கப் பார்க்கிறார்கள். நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்று கூறிக் கொள்வதோடு மற்றவர்கள் மனதை புண்படுத்தக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் நாமே குறிப்பிட்ட சமயத்தின் பாதுகாவலர்கள் நாம் இல்லாத விடத்து எமது சமயம் அழிந்துவிடும் எனக் கூறுபவர்களும் உள்ளனர்.

மேலும் சில பிரிவினர் எங்கள் சமயம் அழிந்துவிடும். எனவே எமது தெய்வங்களின் உருவங்களை எங்கு எங்கு வைக்க முடியுமோ அங்கு அங்கு வைப்பதுடன் அதனால் மற்றவர்கள் மன உளைச்சல் அடைந்தாலும் பரவாயில்லை. இவ்விடயங்களில் தெய்வச்சிலைகளை வைத்தால் சமயம் வளர்ந்துவிடும் என்பது அவர்கள் விளக்கத்துக்கு ஏற்ற கருத்தாகும். இப்படியான கருத்துக்களைக் கொண்ட ஒவ்வொருவரிடமும் விலகி நிற்கும் ஒரு விடயம் தங்கள் சமயம் சார்ந்த தத்துவங்களை முழுமையாக அறிந்திருக்க முடியாத ஒரு நிலைப்பாடாகும்.

**மதங்களின் தத்துவங்கள் உணரப்படவில்லை**

ஒவ்வொரு சமயமும் கூறும் தத்துவங்கள் எல்லாவற்றிலும் பொதுவானவையாகவே கருதலாம். உண்மை, நேர்மை, மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்காமை, உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் என மற்றவர் மனங்களை பாதிக்காத வாழ்வியல் தத்துவங்களைக் கூறுகின்றன. இவற்றுக்கு இந்து, கத்தோலிக்கம், பௌத்தம், இஸ்லாம் எதிலும் விலக்களிக்கப்படவில்லை. இவை முழுமையாக உணரப்படுமிடத்து ஒவ்வொரு நபரும் அன்பு, கருணை, காருண்யம், பரிவு, மற்றவர்களை நேசித்தல் என்ற செயற்பாட்டில் இருப்பார்களேயானால் அந்தந்த மதங்களைத் தழுவியவர்களாக இருப்பதோடு ஏனையபிணக்குநிலைசிந்தனைகளும் பிணக்குகளும் ஏற்பட வாய்ப்பு இல்லை. முழுமையான சமய தத்துவங்களை விளங்கிக் கொள்ளாத சில பகுதியினர் தமது விளக்கத்தக்கேற்ப இயங்குவது குறுகிய சில குழுக்களாக இயங்குவதும் இவற்றில் ஒரு வெறியை ஏற்படுத்தி அதனை பிழைப்பாகக் கருதி பிணக்குகள் ஏற்படுத்துவதோடு நில்லாமல் சில குழுக்கள் அதிஉச்ச கொடூரங்களுக்கும் சென்றுவிடுகின்றன. இதனைப் பற்றி சிந்திக்க தவறுமிடத்து அழிவு என்பது தவிர்க்க முடியாத தாகிவிடும்.

**தத்துவங்களை உணர்வோம் அசம்பாவிதம் தவிர்ப்போம்**

எமது சமயத்தில் கூறப்படும் தத்துவங்கள் என்ன நாம் இவற்றை முழுமையாக அறிந்திருக்கிறோமா என ஒவ்வொருவரும் சிந்தித்தால் அல்லது மதத் தலைவர்கள், மதகுருமார் இவர்களை சிந்திக்க வைத்தால் பல பாதை மாற்றங்கள் தடைப்படலாம். அதற்காக எந்த மதமும் சமய போதனைகளை செய்யாமலிருக்கின்றன என்று கூறுவதற்கில்லை. ஆனால் இவற்றை விலத்தி மாறுபட்ட வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. துன்பங்கள் ஏற்படுகின்றன எனப் பார்க்கும்போது ஒவ்வொருவரும் சமுதாயத்தில் தாங்கள் பங்களிப்பை சரியாக வழங்கவில்லையா என்ற கேள்வி எழாமலில்லை. நாம் எமது சமய சிந்தனைகளை எங்கள் பிள்ளைகளுக்கு சரியாக போதிக்கவில்லையோ எனப் பெற்றோரும் சமய தத்தவங்களைச் சரியாக கற்றுக் கொடுக்கவில்லையோ என ஆசிரியர்களும் போதனைகளில் தவறுகள் உள்ளதா என சமய தலைவர்களும் எமது வணக்கத்தலங்களில் சரியான வழிபாட்டு முறைகள் கையாளப்படவில்லையா என ஆலய நிர்வாகங்களும் கவலைப்பட வேண்டிய சிந்திக்க வேண்டிய நிலமையாக சமுதாய சூழல் காணப்படுகின்றது. ஒவ்வொரு சமயத்தவரும் சமயதத் தத்துவங்கள் அதில் கூறப்படும் அகிம்சை, ஆன்மிகம், மனிதாபிமானம், மன ஒருமைப்பாடு முழுமையாக உணரப்பட்டாலேயே அவர் அந்த சமயத்துக்கு உரியவரென உரிமை கோர முடியும். உணர முடியாத நிலை இருக்குமாயின் அவர்கள் சமயம் சார்ந்தவராக இருக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயம் ஆகும். எனவே சமயச் செயற்பாடு சமயக் கொள்கைகளை விலத்தியதாக இருக்கும்போது பாதை மாறிய நிலமை உருவாகிறது. இதனைக் கட்டுப்படுத்தி சமய ஈடுபாட்டில் கொண்டுவர ஒவ்வொருவரும் சமயத் தத்தவங்களை உணர எந்த வழிமுறைகளை கையாளலாமோ அதனைப் பற்றி தொடர்புபட்டோர் சிந்திக்க வேண்டும். அல்லாதவிடத்து சமயத் தத்தவங்கள் உணராத அதன் பெயரைச் சொல்லும் நாம் வேறு பாதையில் சென்று கொண்டேயிருப்போம். இதனை தற்போதைய சமூகச் சூழலின் வெளிப்பாடாகக் கருதலாம்.




**மதத் தலைவர்களுக்கு பெரும் பொறுப்புண்டு**

சமூக மட்டத்தில் சயத் தலைவர்கள் தத்தம் சமயச் செயற்பாடுகளுடன் சமய சிந்தனைகளை வளர்ப்பதற்கு வேண்டிய மேலதிக ஒழுங்குகள் செயற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வணக்கத்தலத்திலும் ஒவ்வொரு நூலகங்களை உருவாக்கலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மற்றவர்கள் மனதை ஏனைய சமயத்தவர்களுடைய மனங்களை புண்படுத்தும் செயற்பாடுகள் அமைந்துவிடக் கூடாது. எல்லோரும் இறைவனின் பிள்ளைகளே என்பது சமயத் தலைவர்களினதும் அறிஞர்களினதும் கருத்தாகும்.

முழுமையாக சமயத் தத்தவங்களை அறிந்த ஒவ்வொரு நபரும் வன்முறை, விதண்டாவாதம், முரண்பாடுடைய செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள். ஏனெனில் எந்தவொரு சமயத் தத்துவங்களும் மாறான கருத்துக்களை போதிப்பதில்லை. தமது சமயதத்துவங்களை முழுதாக அறிந்த ஒருவன் எந்த வன்முறை பிணக்கு நிலைகளுக்கு செல்லமாட்டான். அவனே சமயம் சார்ந்தவனாக கருதப்படுவான். ஏனைய முரண்பாடான செயற்பாடுகள் பற்றி கவனிப்போமாகில் அதனைச் செய்தவர்கள் சமயம் சார்ந்தவர் எனக் குறிப்பிட முடியாது. அவர்கள் தாங்கள் இருப்பதாக கருதும் சமய தத்துவங்களை அறியாதவர்களாவர். அறியாமையே இதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.

ஒரு பொதியிலுள்ள பொருளை வெளியில் எழுத வைத்திருக்கும் பெயரைக் கொண்டு உள்ளே உள்ள பொருள் அதுவென தீர்மானித்துவிட முடியாது. இருக்கும் பொருள் உண்மையானதாக இருத்தல் வேண்டும். தோற்றப்பாட்டையும் சார்ந்திருக்கும். சூழலையும் வைத்து சமயம் சார்ந்தவர் எனக் கூறுவது பொருத்தமற்றது. தங்கள் தங்கள் சமய தத்துவங்களை அறிந்து கொண்டும் விளங்கிக் கொண்டாலும் மட்டுமே சமயம் சார்ந்தவராக பிரதிபலிக்க முடியும். மாறுபாடான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் சமயம் சார்ந்தவர் அல்லர் எனக் கூறுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. எனவே சமயம் சார்ந்த எவரும் மற்றவருக்கு துன்பம் விளைவிக்கக் கூடிய எந்தச் செயற்பாட்டிலும் எந்தக் காலத்திலும் ஈடுபடமாட்டார்கள் என்பது உண்மையாகும்.

சமுதாயப் பொறுப்புள்ள கல்விமான்கள், சமயப் பெரியோர்கள், அரசியலாளர் யாவரும் ஒவ்வொரு தனிமனிதனும் தன் தன் சமயத்தில் கூறப்படும் தத்துவங்களையும் உண்மைகளையும் அறிய வைப்பதன் மூலம் ஒவ்வொருவரையும் சமய சார்ந்தவர்களா மாற்றுவதுடன் அமைதியானதும் ஆன்மிகமானதுமான வளர்ச்சியை ஏற்படுத்துவது எல்லோரினதும் பொறுப்பாகும்.

## மின்பிறப்பாக்கி...

ளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவது தொடர்பாக ஆராயும் நோக்குடனேயே எனது பயணம் அமைந்துள்ளது. மின்சாரசபையின் வட பகுதிக்கு காணப்படும் வெற்றிடங்களை மிக விரைவில் நிரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மைத்திரி....

திருகோணமலை மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டம் கிழக்கு மாகாண ஆளுநரது செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கடற்படைத்தளத் தில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்றுமாலை மைத்திரிபால சிறிசேன அங்கு சென்றார். இந்த வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி போராட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. தாம் தமது உறவுகளை தொலைத்துவிட்டு இதுவரை காலமும் தேடிவருவதாக தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தமக்கான தீர்வை அரசதலைவர் உடன் தரவேண்டும் என்று வலியுறுத்தினர். (ம)

## அரசுக்கு...

னார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் ஏற்பாட்டில் அதன் தலைவரான வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போரால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவை நேற்று கிளிநொச்சியில் வைத்து வழங்கினார். புலம்பெயர் உறவினரால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் அவர் இந்த உதவியை வழங்கியிருந்தார். கிளிநொச்சி, கரடிப்போக்கு, உருத்திரபுரம் வீதியில் உள்ள மக்கள் நலன் காப்பகம் நடுவகப் பணியகத்தில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றும்போதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கல்முனை உபபிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது சம்பந்தமாக நாங்கள் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கு நடைபவனி ஆரம்பித்திருந்தோம். சுமார் ஒரு கிலோமீற்றர் நாம் நடந்துபோனபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டோம். அங்கிருக்கும் கிறிஸ்தவ ஆலயத்தில் குண்டுவெடிப்பு அன்று காலை நடந்ததுபற்றி அப்போதுதான் அறிந்து கொண்டோம். நடைபவனியை நாம் அன்று கைவிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுடன் இன்று வரையில் தொடர்பில் இருந்து வருகின்றோம். உணவு ஒறுப்பில் ஈடுபடுபவர்களைக் கண்டு எமது ஆத்மார்த்த ஆதரவினை வெளிப்படுத்தி வருகின்றோம். ஆனால் நேற்றைய (நேற்று முன்தினம்) சம்பவங்கள் எனக்கு அதிர்ச்சியூட்டுகின்றன. அரசு காலம் கடத்தினால் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் உயிருக்கு ஆபத்து விளையக்கூடும் என்று பயப்படுகின்றோம். தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதாக அறிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களின் கோரிக்கை நியாயமானது. அவர்களைக் காப்பாற்றாது விட்டால் நிலமை மிக மோசமாகிவிடும். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அடிபட்டுச் சாகக்கூடிய நிலமை உருவாகக்கூடும். 21ஆம் திகதி குண்டுவெடிப்புப்பற்றி அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்த அரசு இதிலும் இவ்வாறான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சனைக்குத் தீர்வு காணாமல் அரசுக்கு மாமாவேலை செய்து காலஅவகாசத்தை எடுத்துக் கொடுக்கப் பார்க்கின்றது. அவர்கள் இந்த மாமாவேலை செய்யும் பழக்கத்தை நிறுத்த வேண்டும். நிலமையை அறிய தலைமை அமைச்சர் உடனே குறித்த இடத்திற்குப் போனால் நல்லது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற நீண்டகால தொடர்போர் காரணமாக வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகியுள்ளது. அரசு உதவிகளைத் தருவதாக அறிவித்தும் எம் மக்களின் வாழ்வில் ஒளி பிறப்பதாக இல்லை. அரசு தருபவை தகுந்தவர்களைப் போய்ச் சேருகின்றதா என்பதில் சந்தேகமே எழுகின்றது. ஆகவேதான் எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் வழங்கப்பட வேண்டிய உதவு தொகைகளை வழங்குவதற்கு இவ்வகையான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிதிப் பற்றாக்குறையினால் அல்லல்படுவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கின்றோம். இருந்தும் கிடைப்பதை வஞ்சகமின்றி கொடுக்கவே காப்பகத்தினர் விரும்புகின்றார்கள்.

எமது மக்களை உள்நாட்டுப் போர் என்ற பெயரில் அவர்களின் உடமைகளை உறவுகளை அழித்து ஏதிலிகளாக்கிய பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். எவர் எவர்களின் வீடுகளை அரசபடைகள் அழித்து நிர்மூலமாக்கியதோ அவர்களுக்கான வீடுகள் அந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று இல்லாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உலக நியமங்களிற்கு ஏற்ப நியாயமாக நடந்து கொள்வதுடன் அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். அரசு பயங்கரவாதிகளுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றது. பயங்கரவாதம் என்ற பதத்தை வைத்து எம் மக்களைப் பயங்கரமாகப் பதம் பார்த்தது அரசே. நாம் கேட்ட நியாயமான அரசியல் கோரிக்கைகளை அரசுகள் தந்திருந்தால் மக்கள் கிளர்ந்தெழத் தேவை எழுந்திருக்காது. அரச பயங்கரவாதம் எம் மக்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிராது. இவைபற்றியெல்லாம் அரசுடனும் பன்னாடுகளுடனும் பலவழிகளில் பேசிப் பார்த்தாயிற்று. எமது அனைத்து முயற்சிகளும் ஏதோ வகைகளில் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. அரசியல் ரீதியாக நன்மை பெறவே அரசு முயற்சிக்கின்றது. அதனால்த்தான் எமது அரசியல்வாதிகளைக் காசு கொடுத்து வாங்க எத்தனித்திருக்கின்றது. இந்த நிலையில் எமது பாதிக்கப்பட்ட உறவுகளை தாங்கிக் கொள்ள அவர்களை பொருளாதார நிலையில் ஓரளவுக்காவது முன்னேற்றிவிட அவர்களின் மன அழுத்தங்களில் இருந்து அவர்களை விடுவிக்க எம்மவர்களே முயற்சிக்க வேண்டும். அதற்கு இதுபோன்ற அமைப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. மேலும் கடல் கடந்த நாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற உதவிகள் ஒரு முறையான வரைமுறையில் செயற்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அதற்கு அனைவரும் கைகோர்த்து முன்வர வேண்டும் என்றார். (ம-21)

## அதிபரை...

ஆசிரியரின் துர்நடத்தை தொடர்பாக மாணவியின் பெற்றோர் அதிபருக்கு முறையிட்டும் அதிபர் உரிய நடவடிக்கையை எடுக்கத் தவறியதால்தான் ஆளுநர் அவரை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டார் என்று ஆளுநரின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது: குறித்த பாடசாலையின் அதிபரை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தம் செய்வதற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளதுடன் இது தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறும் மாகாண கல்வியமைச்சின் செயலர் சி.சத்தியசீலனுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். இதேவேளை பாலியல் துன்பறுத்தலில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அந்தப் பாடசாலையின் ஆசிரியரும் விசாரணைகள் முடியும்வரை சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் வடமாகாணத்தில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், இவ்வாறு மோசமாக நடந்து கொள்பவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நீதித்துறையினூடாக அதியுச்ச தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். வடமாகாண கல்வித்துறையில் இடம்பெறும் பாலியல் துர்நடத்தைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு விசாரணைக் குழுவொன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கை ஆளுநரால் எடுக்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (ம-21)

## கல்முனை...

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக இந்தப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் ஒரு மாதத்துக்குள் தரமுயர்த்தப்படும் என ஞானசார தேரர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து நால்வர் தமது போராட்டத்தை நிறைவுசெய்துள்ளனர். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், நீரை மட்டும் அருந்தி தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். இதேவேளை, ஏனையவர்களும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளனர் என்று போராட்டத்தை முன்னின்று நடத்திய மதகுருமார்கள் அறிவித்துள்ளனர்.

அம்பாறை, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி மதகுருமார்கள் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று 6ஆவது நாளாகவும் தொடர்ந்தது. இந்தப் போராட்டத்துக்கு, அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் தமது ஆதரவை வழங்கி வந்தனர். நேற்றுப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் உட்பட மகாசங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர். இதன்போது ஒரு மாத காலத்துக்குள் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த தான் நடவடிக்கை எடுப்பதாகவும், அவ்வாறு முடியாமல்போனால் இந்தப் போராட்டத்தைத் தனது தலைமையில் முன்னெடுப்பதாகவும் ஞானசார தேரரினால் உறுதியளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கையின் இந்துகுருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள், கல்முனை மெதடிஸ்த போதகர் அருட்தந்தை கிருபைராஜா, கல்முனை மாநகர சபை உறுப்பினர் அழகக்கோன் விஜயரெட்ணம் ஆகிய நால்வரும் தமது போராட்டத்தை நீர் அருந்து முடிவுக்குக் கொண்டு வந்தனர். அதன்பின்னர் அவர்கள் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும் வரையில் தமது உணவொறுப்புப் போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளார். இதேவேளை, தாங்கள் சாகும்வரையிலான உணவொறுப்புப் போராட்டத்தை முடித்துள்ள போதிலும் சுழற்சி முறையிலான உணவொறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த நான்கு பேரும் அறிவித்துள்ளனர். (ம-22)

JOB VACANCIES
Coordinator (Male) -01
(Age 25 - 30)
Technician (Male)
(Age 20 - 25)
Jaffna - 05
Killinochi - 02 (Kilinochchi Area)
Mullaitivu - 01 (Mullaitivu Area)
Vavuniya - 02 (Vavuniya Area)
Mannar - 01 (Mannar Area)
Management Assistant (Female)
(Age 20 - 25)
Jaffna - 02
Killinochi - 02 (Kilinochchi Area)
(விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும்)
* Should be Motobike license
North Link Engineering
IT Product Sales & Technical Services
NORTHERN PROVINCE HEAD OFFICE
North Link Engineering
360/3, Main Street, Jaffna.
email: info@nlenp.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3199 திகதி: 2019.06.22 சனிக்கிழமை
SATURDAY FORTUNE
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 06 20 36 39 I
போனஸ் இலக்கம்: 17
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 48,120,290/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 647
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.06.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,411,290/-
வெற்றி இலக்கங்கள்: 12 35 58 71
ஆங்கில எழுத்து: O
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

අභිවෘද්ධි වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 255
சீட்டிழுப்பு திகதி ▸ 22.06.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 01 10 21
விதி எண்: 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10, 518, 604/=
26.06.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## வீடு வாடகைக்கு

யாழ் நகர மத்தியில், யாழ் புகையிரத நிலையம், இந்துமகளிர் கல்லூரி, நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றை அண்மித்ததாக கந்தர்மடத்தில், சிறந்த பாதுகாப்பான, அமைதியான சூழலில் மறுசீரமைக்கப்பெற்ற வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய மூன்று அறைகள், பெரிய ஹோல் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு. சைவ உணவுக்காரர்கள் மட்டும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட தொடர்பு கொள்ளவும்.

(CS 25846)(4.17)

**071 552 0173**

## வீடு வாடகைக்கு உண்டு

இல.10/32, புது வீதி, கொய்யாதோட்டத்தில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

தொலைபேசி இல: **077 281 2796**

## வாடகைக்குக் கொடுக்கப்படும்

யாழ்.கஸ்தூரியார் வீதியில் நகைக் கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.

(CS/26123)(11.17)

**077 693 5610**







# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜீன் 23
**வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்படும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது. இதில் ஆண்களுக்கான போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலிலும் பெண்களுக்கான போட்டி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை கூடைப்பந்தாட்டத்திடலிலும் இடம் பெறவுள்ளது.(23)**

---

யாழ்ப்பாணம்,ஜீன் 23
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.றோக் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாத்மாஜீ விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,ஜீன் 23
அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக்கழகம் இல்லங்களுக்கு இடையில் நடத்தும் ஆண்களுக்கான துடுப்பாட்டம் மற்றும் எல்லே போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அரியாலை சரஸ்வதி மைதானத்தில் நடைபெறள்ளது. (23)

---

யாழ்ப்பாணம் ஜீன் 23
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சத்திவேல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

தெல்லிப்பழை பிரதேசசெயலக இளைஞர்கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் நாமகள் இளைஞர் கழகம் அணியை எதிர்த்து சென்லூட்ஸ்இளைஞர்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,ஜீன்23
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இல்லங்களுக்கு இடையில் நடத்தும்ஆண்களுக்கான துடுப்பாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அரியாலை சரஸ்வதி மைதானத்தில்நடைபெறவுள்ளது. (23)



# கே.ஸி.ஸி.ஸி வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜீன் 23
ஞானம்ஸ் பெயின்ற், யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட் ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ரி- 20 துடுப்பாட்டத் தொடரின் 'பிளேஓவ்' ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 34 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இந்தப் போட்டி யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் காலை 8.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி நிர்ண யிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துசி 39 ஓட்டங்களையும், ஜெயறூபன், றொசான், பானுசன் தலா 31ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் வியாஸ்காந் 2 இலக்குகளையும், சாள்ஸ், டார்வின், ஜெரிக்துசந், தாசோபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சென்றலைட்ஸ்விளையாட்டுக்கழக அணி 18.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தது. இதில் செல்ரன் 69 ஓட்டங்களையும், வியாஸ்காந் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் சாம்பவன், நிருசிகன், துசி, சாந்தியன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (23)

# யாழ். மத்திய கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. கொழும்பு சென்.பீற்றஸ் கல்லூரி கூடைப்பந் தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற போட்டியில் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.இதில் 47:36 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.



# ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், ஜீன் 23
**இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான பிரிவு இரண்டுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.** யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் . இந்துக்கல்லூரி அணி 41 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லினுஸ்கரன் 57 ஓட்டங்களையும்,கஜனாந் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் றெக்சன் 4இலக்குகளையும்,கஜதீபன் 3இலக்குகளையும்,பிரிந்தன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி 39 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் அமிர்தசரதன் 31 ஓட்டங்களையும்,எனோசன் 28 ஓட்டங்களையும்,டக்சன் 24 ஓட்டங்களையும், டிலக்சன் ஆட்டம் இழக்காமல் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கோமைந்தன் 4 இலக்குகளையும்,லினுகரன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (23)

# கால்பந்தாட்டத் தொடரின் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜீன் 23
மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீர வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டுக்கழக அணி மோதியது.இதில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணி வீரர் ஜெசிந்தன் தெரிவு செய்யப்பட்டார். (23)

*** *** *** ***


யாழ்ப்பாணம், ஜீன் 23
மற்றுமொரு போட்டியில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூநகரி செந்தாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது.இதில் 2:1 என்ற கோல் கணக்கில வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன்விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணி வீரர் கஜன் தெரிவு செய்யப்பட்டார். (23)

*** *** *** ***

இன்னுமோர் போட்டியில் இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.கழக மைதானத்தில் மாலை முதலாவுதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைமா நகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் றேயல்பிரதீபன் தெரிவானார். (23)

*** *** *** ***

கழக மைதானத்தில் மாலை இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடாசென்.மேரிஸ்விளையாட்டுக்கழக அணி மோதியது.இதில் 3:2 என்ற கோல் கணக்கில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)



# தப்பிப் பிழைத்தது இந்திய அணி

இந்திய அணியை ஆப்கான் அணியின் பந்து வீச்சாளர்கள் மிரட்டியிருந்தனர். 2010ஆம் ஆண்டுக்கும் பின்னர் இந்திய அணியை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி இருந்தனர்.
நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இந்தியா ஆப்கான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 11 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டம் காண வைத்தனர் ஆப்கன் பந்து வீச்சாளர்கள். கடந்த போட்டியில் சதமடித்த ரோகித் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் கோக்லி, யாதவ் பந்துகளை வீணடித்தாலும் நிதானமாக ஆடி அரைச்சதம் கடந்தனர். டோனி தடுமாறி தாடுமாறி ஆடியிருந்தார். அவர் பந்துகளை வீணடித்து ஸ்ரொம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். இவர் களத்தடுப்பின் போதும் இரண்டு பிடிகளை தவற விட்டிருந்தார். அதிரடி ஆட்டக்காரர் பாண்டியா வந்த வேகத்தில் நடையைக் கட்டினார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஓட்ட எண்ணிக்கையானது இந்திய அணி சுமார் 9 வருடங்களின் பின்னர் முதலாவதாகத் துடுப்பெடுத்தாடி பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கை ஆகும்.
பந்து வீச்சை பொறுத்த வரையில் ஆப்கான் அணியின் அனைத்து பந்து வீச்சாளர்களும் சிறப்பித்திருந்தனர். அதிலும் ரசித் கான் கலக்கியிருந்தார். கடந்த போட்டியில் அவரது பந்து வீச்சு மோசமாகக் காணப்பட்டது. அதனை இந்தப் போட்டியில் சீர்செய்திருந்தார்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கான் அணி வீரர்களும் தடுமாற்றத்துடனேயே ஆரம்பித்தனர். ஒவ்வொரு பந்தையும் எல்லைக் கோடுகளுக்கு அப்பால் அனுப்புவதற்கு சிரமப்பட்டனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பந்துகளை வீணடித்தாலும் பொறுப்புடன் நின்றார்கள். இந்திய அணியைப் போலவே சீரான இடைவெளிகளில் இலக்குகளை பறி கொடுத்தனர். மொகமட் நபி இறுதி வரை களத்தில் இருந்து இந்திய அணிக்கு அழுத்தம் கொடுத்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 11 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.
இந்திய பந்து வீச்சாளர்களில் சமி அபாரமாக பந்து வீசி 4 இலக்குகளைக் கைப்பற்றினார். அவருடன் பும்ரா சாஹறலும் கைகொடுத்தனர். ஆப்கான் அணியைப் பொறுத்த வரைக்கும் இந்தப் போட்டியில் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தியிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. ஆப்கான் அணி இந்த உலகக் கிண்ணப் போட்டியில் தான் சந்தித்த அனைத்து போட்டிகளிலும் தோல்வியடைந்து இருக்கின்றமை பரிதாபம். ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் பும்ரா தெரிவு செய்யப்பட்டார்.

# கூட்டு முயற்சியால் வெற்றி பெற்றோம்

## கருணாரத்னே பெருமிதம்



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இங்கிலாந்து எதிராக இலங்கை அணி விளையாடி அபார வெற்றி பெற்றது. இது இந்த உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி பெற்ற இரண்டாவது வெற்றியாகும். முதலாவதாக இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி ஆப்கானிஸ்தான் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
இந்த வெற்றி குறித்து இலங்கை அணித் தலைவர் கருணாரத்னே தெரிவித்ததாவது;
வீரர்களின் கூட்டு முயற்சியால் இந்த வெற்றி கிடைத்தது. துடுப்பாட்ட வீரர்களும், பந்து வீச்சாளர்களும் சிறப்பாக செயற்பட்டனர். இது மாதிரியான ஆடுகளத்தில் 300 ஓட்டங்களைக் குவிக்க முடியாது. இதனால் 250 முதல் 275 ஓட்டங்கள் வரை விரும்பினோம். மத்தியூசின் துடுப்பாட்டம் அபாரமாக இருந்தது.
பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாக செயற்பட்டு இங்கிலாது துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்தினார்கள். குறிப்பாக மலிங்கவின் பந்து வீச்சு பிரமாதமாக இருந்தது. அவர் ஒரு சகாப்தம் இதே போல தனஞ்ஜெயா டிசில்வாவும் அபாரமாக வீசினார் - என்றார்.

# தவானுக்கு மோடி ஆறுதல்


உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகியது குறித்து தவான் தனது ருவிற்றர் பக்கத்தில் உணர்வுபூர்வமான காணொலி ஒன்றை வெளியிட்ட நிலையில் அவருக்கு தலைமை அமைச்சர் மோடி ஆறுதல் தெரிவித்துள்ளார்.
உலகக் கிண்ண இந்திய அணி வீரர் தவான் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார். தனது கையில் ஏற்பட்ட காயம், அதனால் அணியில் இருந்து விலகியது குறித்து தனது ருவிற்றர் பக்கத்தில் உணர்வு பூர்வமான காணொலி ஒன்றை பதிவிட்டிருந்தார்.
இதற்கு இந்திய தலைமை அமைச்சர் மோடி தனது ஆறுதலைத் தெரிவித்தார். இது குறித்து அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்ததாவது;
"தவான், ஆடுகளம்தான் உங்களை இழக்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், நீங்கள் விரைவில் குணம் அடைவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. மீண்டும் நீங்கள் கிரிக்கெட் விளையாட்டுக்கு திரும்பி, இந்தியாவின் வெற்றிக்கு பங்களிக்க முடியும் - என்றார்.

## காவி 'ஜெர்சியை' தவிர்த்த இந்தியா

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் இந்திய அணி காவி நிற ஜெர்சியுடன் களமிறங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனின் அவர்கள் காவி நிற ஜெர்சியை அறிமுகப்படுத்தியிருந்த னர். ஆனால் அவர்கள் தங்களுடைய வழமையான நீல சிற ஜெர்சியுடனேயே களமிறங்கினர். நடப்பு உலகக் கிண்ணத்தில் ஐ.சி.சி புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியது. அதாவது, ஒரே நிற ஜெர்சியுடன் இரு அணிகள் விளையாடக்கூடாது. இதில் இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் தங்களது வழமையான ஜெர்சியுடன் களமிறங்கலாம். ஏனைய ஒரே நிறத்திலுள்ள ஜெர்சியைக் கொண்ட அணிகள் ஜெர்சி நிறங்களை மாற்ற வேண்டும் என்பது. நேற்று முன்தினம் இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி ஜெர்சியை மாற்றியது குறிப்பிடத்தது.

## இன்றைய போட்டி



# இந்தியா – பாகிஸ்தான் ஆட்டத்தில் காதலைத் தெரிவித்த இந்திய ரசிகர்

உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியின் போது சுவாஸ்யமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஆட்டத்தின்போது, பெண் ஒருவரிடம் இந்திய இளைஞர் தனது காதலைச் சொல்லி, அந்த பெண் ஏற்றுக்கொண்ட நிகழ்வு இடம்பெற்றது. .
அரங்கில் அமர்ந்திருந்த பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த இந்திய ரசிகர்கள் இந்தியாவின் வெற்றியை எதிர்பார்த்து உற்சாகத்தில் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.
அனைவரும் மகிழ்ச்சியில் இருப்பதைப் பார்த்த இந்திய இளைஞர் ஒருவர் தன்னுடைய தோழியிடம் தனது காதலைச் சொல்ல இதுதான் சரியானதருணம் என்பதை முடிவு செய்து, அரங்கில் இருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கரகோஷம், சத்தத்துக்கு மத்தியில் அமைதியாக சென்ற அந்த இளைஞர் தனது தோழியிடம் மண்டியிட்டு, தான் கொண்டு வந்திருந்த மோதிரத்தை அளித்து காதலை தெரிவித்தார்.
அந்த இளைஞரைப் பார்த்தும் அந்த பெண்ணுக்கு என்ன செய்வதென்ற தெரியவில்லை. அரங்கில் இருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களும் இந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நிலையில் வெட்கத்துடன் அந்த இளைஞரின் காதலை ஏற்றுக்கொண்டு, மோதிரத்தை வாங்கினார்.
தன்னுடைய காதலை ஏற்றுக்கொண்ட தருணத்தில் அந்த இளைஞர் தனது தோழியை கட்டித்தழுவி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.
லண்டன் வாழ் இந்தியரான அந்த பெண்ணின் பெயர் அன்விதா. அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தனது ஆண் நண்பர் தன்னிடம் காதலைச் சொன்ன தருணத்தின் காணொலியை பதிவு செய்துள்ளார். இது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றது.
இதேபோன்று ஒரு சம்பவம் கடந்த ஆண்டு இங்கிலாந்து- இந்தியா இடையே லார்ட்ஸ் மைதானத்தில் நடந்த ஒருநாள் போட்டியின் போதும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## Spoken Engilsh
(03 மாதம்)

பாடசாலை மாணவர்கள்,
பல்கலைக்கழக மாணவர்கள்,
தொழில் புரிவோர், ஏனையோர்
**Personal Classes,**
**Group Classes**
077 640 8622

## சிறுநீரகம் தேவை

B+ இரத்த வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகிறது. உதவி செய்ய விரும்புவோர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
வயது (30 - 40)
(CS 26187)(14,17)

தொடர்பு: 075 473 1537
077 119 6683

## காணி விற்பனைக்குண்டு

பலாலி வீதி கோண்டாவில் டிப்போவிற்கு அருகில் 2¾ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
(CS 26204)(14,17)
077 411 8851/077 220 8432

## கணினி வடிவமைப்பாளர் தேவை

ஈஸ்வா டியிற்றல் அச்சகம்
461, K.K.S Road
077 165 9845

## வீடு வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு AC, சமையலறை வசதியுடன் குறுகியகால வாடகைக்குண்டு.
071 513 0100

## வாகன சாரதி தேவை

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய கனரக வாகன சாரதி தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்பு: 076 690 8976
076 690 8986

## வீடு வாடகைக்குண்டு

யாழ். திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதியில் 500 m தொலைவில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 746 0441

# சிலி அணி அசத்தலாட்டம்



கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் பிரேசில் நாட்டில் இடம்பெற்று வருகின்றது. 12 அணிகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் ஈக்குவாடோர் - சிலி அணிகள் மோதின.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பத்த 8ஆவது நிமிடத்தில் சிலி அணி வீரர் பென்சலிடா ஒரு கோலைப் போட அந்த அணி இன்னும் சுறுசுறுப்பானது. 26ஆவது நிமிடத்தில் ஈக்குவாடோர் அணிக்கு கிடைக்கப் பெற்ற பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த அணி வீரர் வலின்சியா அதனை கோலாக மாற்றினார். முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 6ஆவது நிமிடத்தில் சிலி அணிக்கு மேலுமொரு கோல் கிடைத்தது. அந்த அணி வீரர் சஞ்சீஸ் அந்தக் கோலை அருமையாக பதிவு செய்தார். பின்னர் ஆட்டத்தின் இறுதிவரை இரு அணிகளும் இன்னுமொரு கோலைப் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் ஆட்டத்தில் இறுதியில் இரு அணிகளாலும் கோல்கள் எதுவும் பெறப்படாது போக இறுதியில் சிலி அணி 2:1 என்ற கணக்கில் ஈக்குவாடோரை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் சிலி அணிக்கு கிடைத்த இரண்டாவது வெற்றியாக இது பதிவாகியது. ஈக்குவாடோர் அணி வீரர்கள்தான் அதிகமாக பந்துகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

## சிறுநீரகம் தேவை

O, A இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(49 வயது)
(CS 26106)(14,17)
077 928 5016/077 937 3978

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆள்கள் தேவை

பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலியில் இயங்கிவரும் **நோர்த்வே பமிலி மாட்** இற்கு **பெண் காசாளர், கணக்காளர், பொதிசெய்வோர்** தேவை.
(வயது எல்லை 20-35)
**No.184, Palaly Road,**
Thirunelvely,
Jaffna.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 07 . 1947 | 20 . 06 . 2019 |

### நாகலிங்கம் அருளானந்தசிங்கம்

தாமரை வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அருளானந்தசிங்கம் 20.06.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் ஜெயானந்தன் (லண்டன்), தயானந்தன், கிருஷாந்தினி, அகிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசலா (லண்டன்), தயாமதி, சிவஅன்பன்(கஸ்மியா ஜீவல்லர்ஸ்), ரூபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மகேஸ்வரி, தளையசிங்கம், கோமளம்மா, கோபாலசிங்கம், கனகசிங்கம், மனோன்மணி, புவனேஸ்வரி(பிரான்ஸ்), ஜெயசிங்கம், யோகசிங்கம் ஆகியோரின் சகோதரரும் இராசலட்சுமி, பொன்னம்பலம், நாகராசா, அருமைத்துரை(பிரான்ஸ்), பரிமளம், கமலாதேவி, மகிழம்மா ஆகியோரின் மைத்துனரும் பிரவினா(லண்டன்), ஜெனுஷன் (லண்டன்), டெனுஷன்(லண்டன்), பிரித்திகா(லண்டன்), அக் ஷஜன், அஸ்விதன், நிதுஷா, கஜீபன், கஸ்மியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26208)(14,17)

076 669 5616/077 087 0880

## யாழில் உங்கள் பார்வைக்கு வின்ரிச் இன் விசேட விலைக்கழிவுடன்
## ஜூன் 25, 26, 27, 28

Eastman

விரைவான வேலைகளுக்கு ஹோட்டல், பேக்கரி, கேட்டரிங் இயந்திரங்கள்




தமிழில் தொடர்புகொள்ள 0773 918 870
WINRICH INTERNATIONAL (PVT) LTD
Colombo 03.

## உயர்வகை பல் வைத்திய சேவைக்கு... For Quality, Professional Dental Care



INTERNATIONAL DENTAL CARE

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.

**Jaffna Branch:**
No:84, Stanly Road, (Near Ariyakulam Junction) Jaffna. Srilanka.
Tel: 021 222 0833, 021 492 3353, 077 003 1547

**Colombo Branch:**
No:67, W.A.Silva Mw, Wellawatta, Colombo-06, Srilanka.
Tel: 011 250 7070, 011 438 0803, 077 013 9372

**Vavuniya Branch:** Raaj Medical Lab,
No:10, Bazaar Street, Vavuniya, Srilanka.
Tel: 024 222 1577, 024 492 5527, 077 013 9374

Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.